எம்.டி. வாசுதேவன் நாயர்

காலச்சுவடு
இந்திய
கிளாசிக்
நாவல்

மஞ்சு

எம்.டி. வாசுதேவன் நாயர்
காலச்சுவடு
இந்திய
கிளாசிக்
நாவல்
மஞ்சு

மஞ்சு

“எம்.டி. வாசுதேவன் நாயரின் இந்த நாவல் காத்திருப்புகளின் கதை. காலமும் இடமும் மனங்களும் இந்தக் கதையில் காத்திருக்கின்றன.

கோடை நாட்கள் குளிர் பருவம் வரக் காத்திருக்கின்றன. தன்னைத் தேடிவரும் சுற்றுலாப் பயணிகளுக்காக ஒரு மலைப்பிரதேசம் காத்திருக்கிறது. ஒருபோதும் பார்த்திராத பளிங்குக்கண் தகப்பனுக்காக ஒரு சிறுவன் காத்திருக்கிறான். ஒருகாலத்தில் பார்த்துக் களித்த நீல நரம்புகள் துடிக்கும் முகத்துக்காக ஒரு பெண் காத்திருக்கிறாள். ஒருமுறைகூடப் பார்த்துவிட முடியாத மரணத்துக்காக ஒரு மனிதன் காத்திருக்கிறான்.

காத்திருப்பின் தனிமையும் எதிர்பார்ப்பின் துயரமும் மூடுபனியாக அந்த மனிதர்களை, இடத்தை, காலத்தை மூடுகிறது. அந்த உறைபனிக்குள் உணர்வுகள் உருகிச் சொற்களாக உருமாறி மௌனத்தின் இசையுடன் பெருகுகின்றன. கதையின் ஓட்டம் வாசிப்பவர்களின் மனவெளியில் மஞ்சுப் படலமாகப் படர்கிறது.”

[முன்னுரையிலிருந்து]

1964இல் பிரசுரமாகி மலையாளத்தில் ஒரு லட்சம் பிரதிகளுக்குமேல் விற்பனையான கிளாசிக் படைப்பு இது.

மஞ்சு

எம்.டி. வாசுதேவன் நாயர் (பி. 1933)

எம்.டி. என்று கேரள சமூகம் நேசத்துடன் அழைக்கும் மாடத்து தெக்கேப் பாட்டு வாசுதேவன் நாயர், அன்றைய மலபார் மாவட்டம் பொன்னானி வட்டத்தைச் சேர்ந்த கூடலூர் கிராமத்தில் பிறந்தார். பாலக்காடு விக்டோரியா கல்லூரியில் வேதியியல் பயின்று பட்டம் பெற்றார். ‘மாத்ருபூமி’ இதழின் துணையாசிரியராகவும் பின்னர் நீண்ட காலம் ஆசிரியராகவும் பணியாற்றினார். எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், திரைக்கதை ஆசிரியர், திரைப்பட இயக்குநர் எனப் பல துறைகளிலும் இயங்கிப் புகழ்பெற்றவர்.

நாவல்கள் (9), சிறுகதைகள் (16 தொகுப்புகள்), நாடகம் (1), சிறார் இலக்கியம் (2), பயணக்கதை (1) நினைவுக்குறிப்புகள் (2), இலக்கிய, பண்பாட்டுக் கட்டுரைகள் (5) ஆகிய இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் பங்களிப்பு செய்துள்ளவர். கேரள சாகித்திய அக்காதெமி, சாகித்திய அக்காதெமி, ஞானபீடம் போன்ற அமைப்புகளின் உயர்ந்த விருதுகள் உட்பட 25க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றவர். 2005இல் இந்திய அரசின் பத்மபூஷண் விருது எம்.டி.க்கு அளிக்கப்பட்டது.

எம்.டி. அவரே இயக்கிய எட்டுப் படங்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட படங்களுக்குத் திரைக்கதை எழுதியுள்ளார். சிறந்த திரைப்பட இயக்குநராக மூன்று முறை மாநில அரசின் விருதுகளைப் பெற்றதுடன் கதை, திரைக்கதைக்காகவும் இருபது முறை விருதுகள் பெற்றிருக்கிறார். ஏழு முறை தேசிய விருதுகள் பெற்றுள்ளார். திரைத்துறைச் சாதனையாளர்களுக்கான கேரள மாநில அரசின் உயர்ந்த விருதான ஜே.சி. டானியல் விருது இவருக்கு 2013இல் வழங்கப்பட்டது.

தற்போது கோழிக்கோட்டில் வசிக்கிறார்.

ரீனா ஷாலினி

மொழிபெயர்ப்பாளர்

மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட இவர், தமிழில் இளநிலை ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றவர். காலச்சுவடு ஆசிரியர்குழு உறுப்பினர்.

தொடர்புக்கு: svshalini@gmail.com

எம்.டி. வாசுதேவன் நாயர்

மஞ்சு

மலையாளத்திலிருந்து தமிழில்

ரீனா ஷாலினி

காலச்சுவடு பதிப்பகம்

மஞ்சு ç நாவல் ç ஆசிரியர்: எம்.டி. வாசுதேவன் நாயர் ç © எம்.டி. வாசுதேவன் நாயர் ç மலையாளத்திலிருந்து தமிழில்: ரீனா ஷாலினி ç மொழிபெயர்ப்புரிமை: எஸ்.வி. ஷாலினி ç முதல் பதிப்பு: ஆகஸ்ட் 2017 ç இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 2018 ç வெளியீடு: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629001

mancu ç Novel ç Author: M.T. Vasudevan Nair ç © M.T. Vasudevan Nair ç Translated from the Malayalam by Reena Shalini, Translation © S.V. Shalini ç Language: Tamil ç First Edition: August 2017 ç Second Edition: December 2018

Published by Kalachuvadu Publications Pvt. Ltd., 669, K.P. Road, Nagercoil 629001, India ç Phone: 91-4652-278525 ç e-mail: publications @kalachuvadu.com

ISBN: 978-93-90224-68-5

தகர்ந்த ஒலியையும் உறக்கத்திலிருந்து விழித்த தேவதூதர்களையும் நினைத்து நாம் வெருண்டோம்.

அப்போது பாடிக்கொண்டிருந்த பாடலையும் காலத்தால் பத்திரப்படுத்த முடியாத வெளிச்சத்தையும் நாம் இழந்தோம்.

உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு நாம் வெருண்டுகிடக்கும் அந்த நொடியில் வெளிச்சமும் ஒலியும் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு சொல்கின்றன. இந்த நொடியை நாம் பக்குவப்படுத்தி வளர்ப்போம்.

இந்த நொடி. உறங்கும் மரக்கிளையிலிருந்து சிதறிய பறவைக்கூட்டம் போல் கவிஞனின் சொற்கள் காலத்துக்குள் விழுந்துவிட்டன – காலம் பத்திரப்படுத்திக் கொள்வதற்காக.

ஆர்ச்சிபால்டு மக்லிஷ்

மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

தமிழ், மலையாளம் ஆகிய இருமொழிப் பண்பாட்டுச் சூழலில் பிறந்து வாழ்வதால் இருமொழி இலக்கியப் பரிச்சயமும் மொழிபெயர்ப்பு ஆர்வமும் இயல்பாயின. ஆனால் பத்தாண்டுப் பதிப்புத் துறை அனுபவத்துக்கிடையே பல மொழிபெயர்ப்பு வாய்ப்புகள் வந்தபோதும் தவிர்த்துவந்திருக்கிறேன்.

எம்.டி. வாசுதேவன் நாயரின் ‘மஞ்சு’ வழியாகக் காத்திருப்பு முடிவுக்கு வந்திருக்கிறது. காத்திருப்பே இந்த நாவலின் மையம் என்பது தற்செயலல்ல எனத் தோன்றுகிறது. மலையாள வாசகர்களுக்கு மறக்க முடியாத இதன் மையக் கதாபாத்திரமான விமலா (டீச்சர்), விமலாவின் நேற்றைய ரஷ்மி, இன்றைய புத்து, நாளைய சர்தார்ஜி என இந்த நாவல் காத்திருக்கும் மனிதர்களால் நிறைந்தது. காதல் பாதையும் ஏரியும் நகரமும் காத்திருக்கின்றன. நைனி தேவியும் யுகங்களாக ஈசனுக்காகக் காத்திருக்கிறாள். நாவலின் நிலமும் ஓரளவு எனக்குப் பரிச்சயமானது; ஒரு வாரக் காலம் அங்கு தங்கியிருக்கிறேன். எனவே எல்லாக் காத்திருப்புகளோடும் என்னால் எளிதாகப் பொருந்திப் போக முடிந்தது.

* * *

எம்.டி. எழுதிய நாவல்களிலேயே சிறியது ‘மஞ்சு’. ஆனால் அவரது பிற நாவல்களின் கதை சொல்லும் தொனியிலிருந்து வேறுபட்டது; கவித்துவத்தை விவரிப்பு மொழியாகக் கொண்டது. பனிப் பிரதேசத்தின் சாம்பல் இருட்டு இந்த மொழிக்கும் உண்டு. தமிழுக்கு மிக நெருக்கமான மொழியாக மலையாளம் இருந்தாலும் எம்.டி. இந்நாவலில் கையாண்டிருக்கும் மொழி, மொழிபெயர்ப்பாளருக்குச் சவால் விடக்கூடியது. ஒரு சொல்லைப் பிடித்தால் மற்றொரு சொல் ஊர்வன ஒன்றைப்போல் பனியிருட்டில் நழுவிச் செல்லும்; இன்னொரு சொல் குமாயுன் மலைகளில் வாயாடித்தனமான மௌனத்துடன் மோதிச் சிதறும். இந்தச் சாகச விளையாட்டை விருப்பத்துடன் எதிர்கொண்டிருக்கிறேன்.

1964இல் வெளியானது ‘மஞ்சு’. நாவலின் மூன்றாம் தலைமுறை

வாசகி நான். ஆனால் நாவல் கொண்டுள்ள நவீனம் இந்த நூற்றாண்டையும் தாண்டிச் செல்கிறது. நாவலை மொழிபெயர்க்க இது ஒரு முக்கியக் காரணம். வாசகர்களும் இம்மொழிபெயர்ப்பில் அதை உணர்வார்கள் என நம்புகிறேன்.

* * *

மொழிபெயர்க்க அனுமதி அளித்த எம்.டி. வாசுதேவன் நாயர், மொழிபெயர்ப்புப் பணியில் உதவிய கவிஞர் சுகுமாரன், பதிப்பாளர் கண்ணன், புத்தக வடிவமைப்பை மேற்கொண்ட மஞ்சு, முகப்பு அட்டையை வடிவமைத்த அனந்தபத்மநாபன் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றி. சவாலான இந்த மொழிபெயர்ப்பைக் குறைந்த நாட்களுக்குள் நிறைவுசெய்யக் காரணம் பெங்களூரு சங்கம் ஹவுஸ் (Sangam House), 2017 ஜூன் மாதம் நடத்திய யாளி மொழிபெயர்ப்பு முகாம் (Yali Translators Workshop). அதற்குக் காரணமான அர்ஷியா சத்தார், ராகுல் சோனி ஆகியோருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ரீனா ஷாலினி

சுசீந்திரம்

24 ஆகஸ்ட் 2017

முன்னுரை

காத்திருப்பின் கதை

தமிழ் இலக்கிய வாசகர்கள் நெருக்கமாக அறிந்திருக்கும் சமகால மலையாள எழுத்தாளர்களுள் ஒருவர் எம்.டி. வாசுதேவன் நாயர். மொழிபெயர்ப்புகள் வாயிலாக அவரது குறிப்பிடத்தகுந்த படைப்புகளை அறிந்திருக்கிறார்கள். தமிழில் மட்டுமல்ல, பிற இந்திய மொழிகளிலும் அதிகமாக அறியப்பட்ட மலையாள எழுத்தாளரும் அவரே. இலக்கியப் படைப்பாளியாகச் சீரிய வாசகர் இடையிலும் தேசிய அளவில் கவனம் பெற்ற திரைக்கதை ஆசிரியர், இயக்குநர் என்ற முறையில் நட்சத்திரப் புகழ் பெற்றிருப்பவர். எம்.டி.இன் திரைக்கதைகள் அவற்றின் இலக்கியத் தரத்துக்காகவே கவனம் பெற்றவை. பாடமாக வாசிக்கப்படுபவை. அவரது இலக்கியப் படைப்புகளை விடவும் அவரது திரைக்கதைகளின் எண்ணிக்கை அதிகம். மலையாளத்தில் மிக அதிகமான வாசகர்களைக் கொண்டவராக இருப்பதற்கும் உச்ச நட்சத்திரமாகப் போற்றப்படுவதற்கும் இதுவும் ஒரு காரணம்.

எனினும் எம்.டி.யை உடனடியாக அடையாளம் காட்டுவது அவரது இலக்கியப் பங்களிப்புகள்தாம். அவரும் இலக்கியவாதியாகத்தான் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்கிறார். "சினிமாவுக்குள் அரிதாகக் குறுக்கிடும் என்னை எழுத்தாளனாகவே நான் கருதுகிறேன். இரண்டோ மூன்றோ ஆண்டுகளுக்கு ஒருமுறை படத்தை இயக்கவோ திரைக்கதை எழுதவோ செய்கிறேன். சினிமா என்னுடைய முழு நேரத் தொழில் அல்ல. இந்த இரண்டையும் – திரைப்படத்தையும் இலக்கியத்தையும் – வேறுபடுத்தியே வைத்திருக்கிறேன். எனது முதன்மையான கவனம் இலக்கியத்தில்தான்" என்று (வனஜம் ரவீந்திரன் மேற்கொண்ட நேர்காணல்; 'வேர்ட்ஸ்மித்ஸ்'; ஆங்கிலத் தொகுப்பு, கதா வெளியீடு 1996) குறிப்பிட்டிருக்கிறார். அசந்தர்ப்பமான இந்த விளக்க உரைக்குக் காரணம் இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழின் மூத்த எழுத்தாளர், எம்.டி.இன் எழுத்துக்களை வாசித்திருப்பவன் என்ற முறையில் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார்: "மலையாளிகள் இந்த எம்.டி. வாசுதேவன்

நாயருக்கு அதிகப்படியான மதிப்பைக் கொடுக்கிறார்கள் போலத் தோன்றுகிறது. அவர் எழுதியதெல்லாம் குடும்பக் கதைகளாகத்தானே இருக்கின்றன? அவற்றுக்கு ஏன் இந்த அளவு முக்கியத்துவம் என்று புரியவில்லை.''

''அப்படி அல்ல. நீங்கள் இன்னொரு முறை வாசித்துப் பார்க்கலாம். அவை குடும்பக் கதைகளாகத் தென்படுவது ஒரு தளத்தில்தான். அவை ஆழமான பொருளில் தமது இருப்பைக் குறித்தும் இருப்பின் பொருள் குறித்தும் மனிதர்கள் நடத்தும் வழியறியாத் தடுமாற்றத்தைச் சொல்பவை. ஒரு சமூக நிறுவனத்துக்குள்ளிருந்து விடுபடப் பதைப்பதன் வேதனைகளைப் பேசுபவை. முக்கியமாகக் கேரளக் கலாச்சார வாழ்வின் கூறுகளைக் கொண்டவை. ஒருகாலத்தில் நிலவிய மருமக்கள் தாயத்தின் விளைவுகளை விமர்சிப்பவை. கூட்டுக் குடும்ப அமைப்பின் வீழ்ச்சியில் மனிதர்கள் எதிர்கொள்ளும் பதற்றங்களை எம்.டி.இன் கதை மாந்தர்கள் அனுபவிக்கிறார்கள். இந்தச் சமூகக் கலாச்சாரச் சிக்கலை நீங்கள் உணர முடியுமானால் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் இலக்கிய இருக்கை பொருத்தமானது என்பதும் விளங்கும்.''

இந்த வாசகங்களில் தொடங்கி ஓர் உற்சாக உரையை ஆற்றி முடித்தேன். அந்த உரையால் அவர் கருத்து மாறியிருக்க வாய்ப்பில்லை. ஆனால் எம்.டி. படைப்புகளின் ஜீவ நாளத்தைக் கண்டுபிடித்துவிட்ட குதூகலம் எனக்குக் கிடைத்தது. இன்றளவும் எண்ணிக்கையில் அதிகமான வாசகர்கள் பெரும் விருப்பத்துடன் அவரது படைப்புகளைத் தேடி வாசிப்பதன் காரணம் புலப்பட்டது. மலையாளிகளின் கலாச்சாரச் சிக்கலையும் அவர்களது நினைவேக்கங்களையும் நுட்பமாகவும் ஆழமாகவும் படைப்புகளில் சித்தரித்தவர் எம். டி. என்பதே அந்தக் காரணம்.

மலையாளத்தின் மறுமலர்ச்சி எழுத்தாளர்களான தகழி சிவசங்கர பிள்ளை, வைக்கம் முகம்மது பஷீர், பொன்குன்னம் வர்க்கி போன்றவர்களுக்குப் பின் வந்த தலைமுறையைச் சேர்ந்தவர் எம்.டி. முன்னவர்கள் உருவாக்கி நடைமுறைப்படுத்தியிருந்த சமூக எதார்த்தவாதப் போக்கு, செல்வாக்குப் பெற்றிருந்த காலப்பகுதியில் அறிமுகமானவர். வெம்மையும் சீற்றமுமான எதார்த்தவாத எழுத்தை முன்னோடிகள் பரவலாக்கியிருந்தனர். சமூகத்தை உலுக்கும் கதை மாந்தர்களை உலவ விட்டிருந்தார்கள். இந்தப் பின்புலத்தில்

மென்மையும் தனி மனிதத் துயரமும் தனிமைத் தவிப்பும் கொண்ட மனிதர்களைத் தனது கதைகள் மூலம் நடமாடவிட்டார். மலபார் கிராமத்தின் அழகையும் அந்த மண்ணில் உழலும் மனிதர்களின் மனவோட்டங்களையும் முதன்மைப்படுத்தினார். அவரது கதை மாந்தர்கள் தனிமையானவர்கள். தறவாடுகளின் சிதைவால் பாதிக்கப்பட்டவர்கள். அதிலிருந்து தப்பிச் செல்ல வழி தேடி வெற்றியோ தோல்வியோ கண்டவர்கள். ஆனால் தாங்கள் பிறந்து, இருந்த பின்புலத்தின் மேன்மை பற்றி ஏக்கம் கொண்டவர்கள். அவர்களது மனக் காட்சியை வாழ்நிலத்தின் காட்சியாகவோ வாழ்ந்த பின்னணியை அவர்களது மனப் படமாகவோ எம்.டி.யின் படைப்புகள் முன்வைத்தன.

தனிமைத் துயரில் தத்தளிக்கும், நினைவேக்கத்தால் வாடும் ஆணும் பெண்ணும்தான் எம்.டி.இன் பெரும்பாலான பாத்திரங்கள். மஞ்சு நாவலின் மையப் பாத்திரமான விமலாவும் அதுபோன்றவள்தான். நைனி தேவியின் ஆலயத்தைப் பார்க்கும்போது அவளுக்குப் பிறந்த ஊரின் காவும் (கோயிலும்) வழியோரப் பசுமையும் மஞ்சளாகப் பூத்து நிற்கும் அரளிப் புதர்களும் நினைவுக்கு வந்து ஏக்கத்தையளிக்கின்றன. விரும்பினால் செல்லும் தொலைவிலிருக்கும் நகரத்தில் அப்பாவும் அம்மாவும் உடன்பிறப்புகளும் வாழும்போதும் அந்த வீடு அவளுக்குக் குமட்டலைத் தரும் இடமாகவே தோன்றுகிறது. ஒருபோதும் சென்று அடைக்கலம் தேட விரும்பாத ஒன்றாகவே அதை உணர்கிறாள். அதற்கு அம்மாவின் பிறழ் உறவைக் காரணமாக நம்புகிறாள். தனிமையை விரும்பி ஏற்றுக்கொண்டும் அதை அலுப்புடன் அனுபவித்துக்கொண்டும் காத்திருக்கிறாள். எம்.டி.இன் பிற நாவல்களில் ஆண்களே இந்த இயல்பை வெளிப்படுத்துகிறார்கள். இந்த நாவலில் பெண். எம்டி.இன் மற்ற நாவல்களில் கதையின் மையப் பாத்திரம் ஆண்களே. ஒரு பெண்ணின் உலகம் நுட்பமாகத் துலங்கும் மஞ்சு எம்.டி. நாவல்களில் ஒரு விதிவிலக்கு.

எம்.டி.இன் நாவல்களில் அளவில் சிறிய நாவல் மஞ்சு. பக்க அளவை வைத்துச் சொன்னால் இது ஒரு நீள் கதை. பிற நாவல்களில் காணக் கிடைக்கும் பாத்திர எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் பாத்திரங்களின் எண்ணிக்கையும் குறைவு; கால நீட்சியிலும் குறுகியது. மலைநகரத்தின் ஒரு சீஸனுக்குள்ளேயே கதைக்கான சம்பவங்கள் நடந்து முடிகின்றன. ஆனாலும் இதை நாவல் என்றே சொல்ல

விரும்புகிறேன். கதையாடலில் ஒரு கோடைக் காலத்தில் தொடங்கும் விமலாவின் காத்திருப்பு அந்தக் கோடைக் காலம் தீரும்போது முடிந்து விடுவதுபோல நாவல் நிறைவடைகிறது. உண்மையில் அவளுடைய காத்திருப்பு அநாதியானது; கதை நிகழும் காலத்துக்கு முன்பே தொடங்கி அது முடிந்த பின்னும் தொடர்வது. இந்தக் கால விரிவுதான் நாவலுக்கானது. முதல் பக்கத்திலேயே முன்பே அறிந்த ஒன்றின் தொடர்ச்சியாகவும் இறுதிப் பக்கத்தில் எழுதப்பட வேண்டிய கதையின் தொடக்கமாகவும் எம்.டி. அமைத்திருக்கும் வடிவம் நிச்சயம் நாவலுக்குரியது.

இது காத்திருப்புகளின் கதை. காலமும் இடமும் மனங்களும் இந்தக் கதையில் காத்திருக்கின்றன. கோடை நாட்கள் குளிர் பருவம் வரக் காத்திருக்கின்றன. தன்னைத் தேடி வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக ஒரு மலைப் பிரதேசம் காத்திருக்கிறது. ஒருபோதும் பார்த்திராத பளிங்குக் கண் தகப்பனுக்காக ஒரு சிறுவன் காத்திருக்கிறான். ஒரு காலத்தில் பார்த்துக் களித்த நீல நரம்புகள் துடிக்கும் முகத்துக்காக ஒரு பெண் காத்திருக்கிறாள். ஒரு முறைகூடப் பார்த்துவிட முடியாத மரணத்துக்காக ஒரு மனிதன் காத்திருக்கிறான். காத்திருப்பின் தனிமையும் எதிர்பார்ப்பின் துயரமும் மூடுபனியாக அந்த மனிதர்களை, இடத்தை, காலத்தை மூடுகின்றன. அந்த உறைபனிக்குள் உணர்வுகள் உருகி, சொற்களாக உருமாறி மௌனத்தின் இசையுடன் பெருகுகின்றன. கதையின் ஓட்டம் வாசிப்பவர்களின் மனவெளியில் மஞ்சுப் படலமாகப் படர்கிறது. ஒரு அர்த்தத்தில் வாழ்க்கையே ஒன்றிலிருந்து ஒன்றுக்கான காத்திருப்புதானே?

தமிழில் எம்.டி. வாசுதேவன் நாயரின் மஞ்சு நாவல் ஏற்கெனவே இருமுறை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. 1964இல் மூல மொழியில் வெளிவந்த நாவல், 1973இல் சி.ஏ. பாலன் மொழிபெயர்ப்பில் பனிமேகம் என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டது. சென்னை, தமிழ்ப் புத்தகாலயம் நூலை வெளியிட்டது. இதே நூல் மீண்டும் 2006இல் மூடுபனி என்று சுரா மொழிபெயர்ப்பில் சென்னை, சாருபிரபா பப்ளிகேஷனால் வெளியிடப்பட்டது. நீண்ட காலமாகக் கிடைக்காமலிருந்த சி.ஏ. பாலன் மொழிபெயர்ப்பைத் தற்செயலாக மாறுவேடத்தில் பார்க்க முடிந்தது. மொழிபெயர்ப்பாளர் பெயரைக் குறிப்பிடாமல் தலைப்பை மஞ்சு என்று மாற்றி சென்னை, வ.உ.சி. நூலகம் 2003இல் வெளியிட்டிருக்கிறது. முன் அட்டையிலும் முகப்புப்

பக்கத்திலும் நூல் விவரக் குறிப்பிலும் மொழிபெயர்ப்பாளர் பெயரை எச்சரிக்கையாகத் தவிர்த்துவிட்ட பதிப்பகம் தன்னையறியாமல் ஒரு தடயத்தை விட்டு வைத்திருந்தது. தமிழ்ப் புத்தகாலயப் பதிப்பில் தனது நாவலைப் பற்றி ஆசிரியர் எம்.டி. வாசுதேவன் நாயர் மொழிபெயர்ப்பாளர் சி.ஏ. பாலனுக்கு அனுப்பிய கடிதத்தின் வரிகளை மேற்கோள் காட்டி எழுதப்பட்ட முன்னுரை இடம் பெற்றிருந்தது. அதே முன்னுரை வ.உ.சி. நூலகப் பதிப்பிலும் இருந்தது. அதைப் பார்த்ததும் 'களவும் ஒரு கலைதான். அதையும் கசடறக் கற்க வேண்டும்' என்ற வாசகம் தோன்றியது.

செவ்விலக்கிய நூல்களுக்கு அவ்வப்போது புதிய மொழி பெயர்ப்புகள் உருவாவது இலக்கிய உலகின் நடைமுறைகளில் ஒன்று. இடத்தையும் காலத்தையும் ஒட்டிப் புதிய மொழியாக்கங்கள் செய்யப்படுகின்றன. தாஸ்தயேவ்ஸ்கியின் கரமசோவ் சகோதரர்கள் நாவலுக்கு முதலில் வெளியான ஆங்கில மொழிபெயர்ப்பு கான்ஸ்டன் கார்னெட் செய்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு டேவிட் மக்டஃப்பின் புதிய மொழிபெயர்ப்பு வந்தது. தொடர்ந்து டேவிட் மகர்ஷாக்கின் மொழியாக்கம். இவை எவையும் அமெரிக்க உணர்வுக்குப் போதுமானவை அல்ல என்பதால் ரிச்சர் பீவரும் லாரிஸா வோலோகோன்ஸ்கியும் புதிய மொழியாக்கத்தைக் கொண்டு வந்தனர். இது ஓர் உதாரணம். காலத்துக்கு ஏற்ப மொழியும் மாறுகிறது. அந்த மாற்றம் செவ்வியல் ஆக்கங்களுக்குச் சமகால மொழியிலான பெயர்ப்பைக் கோருகின்றன. மூலப் படைப்புகள் சமகால மொழியில் பெயர்க்கப்படுவதுடன் செம்மையாக்கவும் படுகின்றன. ஒப்பீடாக இதைச் சொல்லவில்லை. இலக்கியச் செயல்பாட்டின் நவீன விளைவாகவே மேற்சொன்னது போல எம்.டி.யின் நாவலுக்கும் புதிய மொழிபெயர்ப்பு வாய்த்திருக்கிறது; செம்மையாக்கப்பட்ட வடிவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த முன்னுரையின் முதற் பகுதியில் எடுத்துக் காட்டியிருக்கும் நேர்காணலில் மொழிபெயர்ப்பைப் பற்றி எம்.டி. பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "மொழிபெயர்ப்பாளர் மூலத்தின் அதே வாக்கிய அமைப்பையோ மொழியையோ பின்பற்றுவார் என்றால் மொழிபெயர்க்கப்படும் மொழியில் தெளிவான பொருளைத் தராமற் போகலாம். வெவ்வேறு வாசகர்களிடையே பிரதியைக் கொண்டு சேர்க்க உதவுமளவுக்கான சுதந்திரத்தை மொழிபெயர்ப்பாளர் எடுத்துக்

கொள்ளலாம்". ரீனா ஷாலினியின் இந்தத் தமிழாக்கம் பிரதி அனுமதிக்கும் அளவுக்கான சுதந்திரத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்று. அதை விட முக்கியம் மூலப் பிரதியின் உயிர்ப்பைப் பெறும் மொழியிலும் நிலைநிறுத்துவதில் வெற்றி கண்டிருக்கிறார் என்பது. அந்த வெற்றிக்கு வாழ்த்துக்கள். வெற்றிக்குக் காரணமாக இருந்த உழைப்புக்கும் ஆர்வத்துக்கும் நுண்திறனுக்கும் வந்தனங்கள்.

சுகுமாரன்

திருவனந்தபுரம்

17 ஆகஸ்ட் 2017

ஒன்று

வாசிக்க எதுவுமில்லை. கட்டிலில் படுத்து கை நீட்டினால் எட்டும் தூரத்திலிருக்கும் அலமாரியில் ஒழுங்கில்லாமல் குவிந்து கிடக்கின்றன புத்தகங்கள். எல்லாம் பலமுறை வாசித்து முடித்தவை. கடைசியாகக் கையில் கிடைத்ததைச் சலிப்பாகப் புரட்டிப் பார்த்தாள். வாளிப்பான உடலை விற்று கிரீடம்வரை விலைக்கு வாங்கிய அழகியின் கதை. நாலைந்து பக்கங்கள் வாசித்தாள். அலுப்பு தோன்றியது. புத்தகத்தை மெத்தையில் போட்டுவிட்டுக் கண்மூடி கிடந்தாள். மூடிக்கிடந்த கண்ணாடி ஜன்னலின் மெல்லிய இடைவெளிகளினூடே குளிர் வேகமாக நுழைந்துகொண்டிருந்தது.

எண்ணற்ற மெல்லிய ஓசைகள் ஒன்றுகலந்து தாளம் உருவாகும்போதுதான் மௌனம் பிறக்கிறது. ஓசையில்லாத நிலையேயில்லை என்ற உண்மையை அவள் நினைத்துப் பார்த்தாள். பாருங்கள், இப்போது எங்கும் மௌனம் என்று சொல்லலாம். மௌனமே ஓர் இசை. பழைய மேற்கூரை உளுத்து உதிர்ந்து என்னன்னென்னவோ பொடிந்து விழுகின்றன. அதன் கரகரப்பு. தொலைவில் எங்கோ உலர்ந்த சுள்ளிகள் ஒடிகின்றன. சுவர்க்கோழிகளின் தூரத்து ஓசை.

துலாவர்ஷ [*] த்தில் நனைந்த இரவில் விறைத்து நிற்கும் கமுகுத்தோப்புகளிலிருந்துதானே சுவர்க் கோழிகளின் ரீங்காரம் கேட்கும்? குமாயுன் மலைகளில் பகல்வெளிச்சமிருக்கும்போது ரீங்கரிக்கிறது . . . ஒன்பது வருடங்கள் விலங்கியல் கற்பித்த தனக்குச் சுவர்க்கோழிகளின் பழக்கவழக்கம் தெரியாது.

* ஐப்பசி மாதம்

குமாயுன் மலைகளில் பகல்வெளிச்சத்தில், மௌனத்தில், சுவர்க்கோழிகள் ரீங்காரமிடுகின்றன . . .

ஃபைலம் ஆர்த்ரோபோடா வகை?

கடவுளே! மடத்தனமாக என்னவெல்லாம் தோன்றுகிறது!

மௌனத்தின் சங்கீதம் . . . வெளியிலிருந்து மூடுபனி அறைக்குள் நுழைந்து மூழ்கடிக்கிறது . . .

கதவு தட்டப்படுவதைக் கேட்டுக் கண் திறந்தாள்.

எத்தனை நேரம் அயர்ந்து கிடந்தேன்? அறைக்குள் நுழைந்த பனியையல்ல . . . உறக்கத்தின் மெல்லிய போர்வை நழுவிவிழும் கண்களைத்தான் குற்றம் சொல்ல வேண்டும்.

மீண்டும் கதவுதட்டப்படுவதைக் கேட்டாள்.

மினுமினுக்கும் மரப்பலகைகள் பாவிய தரையில் நல்ல ஈரம்.

அமர்சிங்காக இருக்குமென்று நினைத்துதான் கதவைத் திறந்தாள். வந்தவள் ரஷ்மி வாஜ்பேயி.

நேற்றும் இன்று காலையிலுமாகப் பிற மாணவிகள் கிளம்பிப் போயிருந்தார்கள். ரஷ்மி மட்டுமே மிஞ்சியவள் என்பதை அப்போதுதான் யோசித்தாள்.

"டீச்சர்ஜி நான் போகிறேன்."

"நல்லது."

ரஷ்மியின் கடும்பச்சைநிற கம்பளிகோட் திறந்துவிடப்பட்டிருந்தது. நெற்றியில் பெரிய கருநிறப் பொட்டும் கன்னக் குழிகளுமுள்ள ரஷ்மி. கண்கள் நடனமாடிக்கொண்டிருந்தன. உள்ளங்கை அகலமுள்ள பூக்கள் போட்ட கமீஸ் அணிந்திருந்தாள். வயதுக்கு மீறிய வளர்ச்சி. அதை உணர்ந்துதான் பனிபெய்யும்போதும் அவள் கோட்டைத் திறந்துவிட்டிருக்கிறாள்.

"இப்போது பஸ் இருக்கிறதா?"

நாற்பத்திமூன்று மாணவிகளின் பொறுப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதே . . .

"இருக்கிறது . . . ஹல்தானிவரை."

"அங்கிருந்து?"

ரஷ்மியின் கண்கள் என்னவோ கண்ணாமூச்சி ஆடுகின்றன எனத் தோன்றியது சாதாரணமாகத்தானா? கருத்த இமைகள் அசாதாரணமாகப் படபடக்கின்றன.

"அங்கிருந்து . . . அங்கிருந்து வேறு பஸ் இருக்கிறது டீச்சர்ஜி, கனெக்ஷன் பஸ். பிதாஜி ஆளனுப்பியிருக்கிறார்."

சாக்லெட் நிறமுள்ள அவள் கன்னக்கதுப்புகளில் ரத்தத் துடிப்பு மின்னி மறைந்தது.

"ம், சரி."

வெளியே வராந்தாவுக்கு வந்துநின்றபோது போர்ட்டிகோவுக்குப் போகும் வளைவுக்குக்கீழே முதுகுகாட்டி நிற்கும் அந்த இளைஞனைப் பார்த்தாள். சுவற்றில் கம்பிவலையால் மூடப்பட்ட அறிவிப்புப்பலகையில் ஒட்டியிருந்த அறிவிப்புகளை வாசித்துக்கொண்டிருந்தான்.

"வந்திருப்பது யார் ரஷ்மி?"

கொஞ்சம் சலிப்பான குரலில் கேட்டாள்.

ஒரு நொடி தாமதித்து ரஷ்மியின் பதில்:

"ம் . . . அண்ணன்."

அந்த இளைஞன் திரும்பி நின்றபோது விமலா அவன் முகத்தைப் பார்த்தாள். பளிங்குக்கண்கள். உன் அண்ணனுக்கு இந்தப் பளிங்குக்கண்கள் எங்கிருந்து கிடைத்தன என்று கேட்கத் தோன்றியது. முகத்தில் நிழலும் வெளிச்சமும் ஏறியிறங்கி நிற்கும் ரஷ்மி வாஜ்பேயின் கண்களைப் பார்த்தபோது கெஞ்சலான வேண்டுகோளிருந்தது.

"ம். போ."

"நமஸ்தே டீச்சர்ஜி."

"நமஸ்தே."

வராந்தாவில் நாலடி நடந்துசென்று இன்னும் கொஞ்சம் தன்னம்பிக்கையோடு திரும்பிநின்று புன்னகைத்தாள்.

"டீச்சர்ஜி எப்போது போகிறீர்கள்?"

"நாளைக்கு."

கொஞ்சமும் யோசிக்காமல் பதில் சொல்லலாம். விடுமுறையின் ஆரம்பத்தில் அவர்களெல்லாம் கேட்பதுதான். திரும்பிவரும்போதும் கேட்பார்கள்.

"டீச்சர்ஜி எப்போது வந்தீர்கள்?"

சிலசமயம் ஒன்றும் சொல்லமாட்டாள். வற்புறுத்திக் கேட்டால் சொல்வாள்.

“நேற்று.”

சௌக்கிதார் ** அமர்சிங் அதைக் கேட்டிருக்கிறார். முதுமையின் கோடுகளும் சுருக்கங்களும் விழுந்த அந்த முகத்தில் எந்தச் சலனமும் தெரியாது.

** வேலைக்காரர்

நாளைக்கும் நேற்றைக்கும் நடுவே விடுமுறைக்காலம் கடந்துபோகிறது. வருடங்களின் வசந்தங்கள்.

விமலாஜி விடுமுறைக்கு வீட்டுக்குப் போவதில்லை என்பது மாணவிகளில் யாருக்காவது தெரிந்திருக்கும். ஆனால் யாரும் கேட்டதில்லை இதுவரை. நிம்மதி.

கருப்பு டிரவுசரும் சட்டையும் அணிந்த போட்டியா இளைஞன் முதுகில் தோல்பெட்டியைச் சுமந்து வெளியே போனான். அவனுக்குப் பின்னால் இளம்மஞ்சள் கலந்த நிறமும் பளிங்குக்கண்களும் கொண்ட அந்த இளைஞன். அவனுக்குப் பின்னால் தலைகுனிந்துகொண்டு ரஷ்மி வாஜ்பேயி.

ரஷ்மி இன்றிரவு வீட்டுக்குப் போவாளா? நேரடிப் பேருந்து காலை ஏழரை மணிக்குத்தான். ஹல்தானியிலிருக்கும் பயணியர் விடுதி நினைவுக்கு வந்தது. அவளுடைய கன்னங்களின் துடிப்பும் கண்களில் புரளும் ஒளிச்சுடர்களும் வரவிருக்கும் நிமிடங்களைக் கொண்டாடுகின்றன.

வேண்டுமானால் ரெசிடன்ட் டியூட்டரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி கிரிஜாசங்கர் வாஜ்பேயிக்குத் தந்தியடிக்கலாம். ரஷ்மி மூன்று முப்பது பேருந்தில் ஹல்தானிக்குப் புறப்பட்டிருக்கிறாள்.

புயல் வீசும் குடும்பமும் வெளிறி நடுங்கிநிற்கும் பெண்ணும். அந்தக் காட்சி இப்போதே மனதில் தெரிகிறது. அது வேண்டாமென விமலா முடிவெடுத்தாள்.

மலையிறங்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் தவிட்டுநிற பூட் அணிந்த இளைஞனுடன் அவசரமாக நடந்துசெல்லும் ரஷ்மியைப் பார்த்தபடி நின்றாள். பிர்ச்சுமரக் கூட்டங்களுக்குப் பின்னால் அவளுடைய கோட்டின் கடும்பச்சை நிறம் மறைந்த போது விமலா . . . தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள், “என்னை ஏமாற்றிவிட்டதாக நினைக்காதே பெண்ணே!”

பதினாறாம் வயதில் அவள் பெண்ணாகியிருக்கிறாள்.

திரும்ப அறைக்கு வந்தாள். அறை முழுக்க அலங்கோலமாகக் கிடந்தது. பெட்டிமீதும் அலமாரியிலும் குவிந்துகிடக்கும் புடவைகளை மடித்துவைக்க வேண்டுமென்று காலையில் நினைத்திருந்தாள். உளுத்துப்போன மேற்கூரையிலிருந்து இரவும் பகலும் உதிர்ந்து விழும் வெண்ணிறத் துகள்கள் தரையிலும் மேஜைமீதும் பரவிக்கிடந்தன. மூலையிலுள்ள ஸ்டாண்டில் வைத்த காகிதப்பூக்கள் நிறமிழந்து உருக்குலைந்திருந்தன. சூரியனின் படம்போட்ட பாட்டரிக் கம்பெனிக் காலண்டர் இப்போதும் ஜனவரி மாதத்தைக் காட்டுகிறது. இன்று தேதி என்ன? ஏப்ரல் பதினொன்று.

புதிய ஆண்டு அசையாமல் மரத்துப்போய் நிற்கிறது.

மூடிக்கிடந்த ஜன்னலைத் திறந்துவைத்தாள். குளிர்காற்று ஆவேசத்தோடு வந்து கட்டித்தழுவிய பின் அறையில் குற்றஉணர்ச்சியுடன் பதுங்கியது.

மலைச்சரிவில் விடுதியின் அந்தப் பக்கம் இருக்கும் காட்டேஜ் வளாகத்தில் ஒரு நேபாளிச் சிறுவன் வேலை செய்கிறான். சீஸனில் வரும் பயணிகளுக்காக அல்மோராக்காரரான காண்ட்ராக்டர் கட்டிய வீடுகளிலொன்று அது. வீட்டின் உரிமையாளர் சாகும்வரை ‘சந்திரகாந்த்’ என்பதே பெயராக இருந்ததாம். இளைஞனான மகன் அதிகாரத்தைக் கையிலெடுத்தபோது எல்லா காட்டேஜ்களின் பெயர்களையும் மாற்றினான். அவள் இந்த விடுதிக்கு வந்து சேர்ந்த வருடம் சந்திரகாந்த் ‘கோல்டன் நூக்’காக மாறியது.

ஆகாயம் நரைத்து வெளிறியிருக்கிறது. மெல்லிய பனிப்படலங்கள் தொலைவிலுள்ள பைன்மரக் காடுகளுக்கிடையில் ஊளையிட்டு விளையாடுகின்றன. மரக்கூட்டங்களையும் ஆப்பிள் தோட்டங்களையும் தாண்டித் தெரியும் குன்றுகள் வெட்டி அம்மணமாக்கப்பட்டிருக்கின்றன. டிசம்பர் மாத மத்தியானங்களில் தினமும் இந்த ஜன்னலைத் திறந்து கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டே நிற்பாள். பார்க்குமிடமெல்லாம் பனித்திட்டுகள் மூடிக்கிடப்பது தெரியும்.

பச்சையும் வெள்ளையுமான உலகத்தில் நாட்கள் தினமும் மாற்றங்களை கொண்டுவருகின்றன. கடைசியில் அங்கும் இங்குமாக வீழ்ந்துகிடக்கும் வெண்மேகத் துண்டுகள், உருகித்தீராத குளிர்காலத்தின் நினைவுக்குறிப்புகள் எஞ்சி நிற்கின்றன.

பல மாதங்களுக்குப் பிறகு மலைத்தொடர்கள் வெதுவெதுப்பாகும்

இளவேனில் மத்தியானங்கள். வெயில் படரும்போது மலைச்சரிவுகளில் பனி உருகியோடும் வெள்ளியோடைகள் தெரிகின்றன; நேற்றின் கண்ணீர்ச் சோலைகள்.

அவள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே மங்கியிருந்த ஆகாயம் தெளிந்தது. மெல்ல மெல்ல மலையோரத்தில் இளம் வெயில் படர்ந்தது. தாழ்வாரத்தின் நடைபாதை வளைவில் பெரிய பிர்ச்சுமரத்தின் நனைந்த இலைகள் ஒளிர்கின்றன.

மஞ்சும் மேகமும் கலந்துநிற்கும் சிகரங்களின் மங்கலான சிரசுகள் துலங்குகின்றன.

விடுதியின் இருபத்துமூன்று அறைகளில் இதற்கு மட்டுமே இந்த வரம். நண்பகல் வெயில் துலங்கும்போது பனிச்சிகரங்கள் ஒளிர்வதை ஜன்னல்வழியே பார்க்கலாம்.

மிஸ் புஷ்பா சர்க்காரின் பிரபலமான அறை. மூன்று வருடங்கள் அவள் தங்கியிருந்த அறை. ராஜினாமா கடிதம் எழுதி அலுவலகத்தில் கொடுத்து இறங்கிப்போகும் நேரத்தில்தான் அவளைப் பார்த்தாள். வராந்தாவில் வைத்து யாரோ அறிமுகப்படுத்தினார்கள்.

விடுதி இரவுகளின் தனிமையில் தன் அறையில் ஒரு இளைஞனை வரவேற்கத் தயாரான புஷ்பா சர்க்கார் என்ற பிடாரியைப்பற்றித்தான் பள்ளியில் வேலைக்குச் சேர்ந்த நாள் முதல் எங்கேயும் கேள்விப்பட்டிருந்தாள்.

கன்னத்து எலும்புகள் துருத்தி நிற்கும் இந்த மெலிந்த இளம் பெண்ணைப் பற்றியா இவர்கள் சொல்லியிருந்தது? பார்த்ததும் முதலில் அதுதான் தோன்றியது.

தன்னைக் கட்டாயப்படுத்தி ராஜினாமா செய்யவைத்து வெளியேற்றும்போது காலியான இடத்தைப் பிடிக்க வந்தவளிடம் எப்படி நடந்துகொள்வாள் இந்த வில்லங்கம் பிடித்தவள்? பயமாக இருந்தது.

“என் அறையையே எடுத்துக்கொள்ளுங்கள். அதுதான் மிகவும் நல்ல அறை.”

தயக்கமில்லாமல் சொன்னாள். இரண்டடி நடந்தபின் திரும்பி நின்றாள்.

“இந்த விஷயத்தில் என் அறிவுரையை ஏற்றுக்கொள்ளலாம். தவறாகாது.”

இது ஒன்பது வருடங்களுக்கு முன்பு. கடவுளே, ஒன்பது வருடங்கள்.

புஷ்பா சர்க்கார் இப்போது எங்கிருக்கிறாள்? இஸத்து நகரைச் சேர்ந்த ஹோம்சயன்ஸ் டீச்சர் புஷ்பா சர்க்கார் பற்றிய நினைவை அவ்வப்போது புதுப்பித்துக்கொண்டிருந்தாள். மூன்று திருமணங்கள், நீதிமன்ற வழக்குகள், தலைமறைவு ஓட்டம். கடைசியாகக் கிடைத்த தகவல் மதமாற்றம் பற்றியது.

புஷ்பா சர்க்காருக்கு முன்னால் விமலா பார்த்திராத ஐம்பது வயதான மிஸ் பட்.

அதற்கு முன்னால் . . .

மலையோரங்களில் மஞ்சு விழுந்து மங்குவதற்கும் துலங்குவதற்கும் இடையே ஜன்னல் இடைவெளிகளில் சில சமயங்களில் முகங்களே மாறுகின்றன.

பல மாதங்களுக்குப் பிறகு வெளியில் தெளிவான மாலைப் பொழுது உருவெடுக்கிறது, கொஞ்சம் வெளியே போகலாம்.

ஜன்னலை மூடித் தாளிட்டாள். அலமாரியில் வாரி இறைத்திருந்த புடவைகளுக்கிடையே இளம்மஞ்சளில் மினுங்கும் சிவந்த இலைகள் சிதறிக்கிடக்கும் புடவையைத் தேர்ந்தெடுத்தாள். சிவப்பு ஜாக்கெட்டின் கைப்பகுதியில் ஜரிகை நிறம் மங்கியிருந்தது. பரவாயில்லை.

கண்ணாடி முன் நின்றதும் வழக்கம்போல தனக்குள்ளேயே ஆறுதல் சொல்லிக்கொள்ள முயன்றாள். களைப்பு குறைந்திருக்கிறது. முகத்தின் வெளிறல் குறைந்திருக்கிறது. போதுமான வெளிச்சம் விழாத மூலையில்தான் கண்ணாடி பதிக்கப்பட்டிருந்தது. கூந்தலின் இடையிடையே தென்படும் நரைத்த முடிகள் அதில் தெளிவாகத் தெரிவதில்லை.

பகல் வெளிச்சம் தெளிவாக விழுமிடத்தில் கண்ணாடியைப் பார்ப்பது நெஞ்சில் படபடப்போடுதான்.

பனிமூடிக்கிடக்கும் இந்த மலையோரங்களுக்கு சமவெளியிலிருந்து வரும் மதராஸிகளுக்கு சீக்கிரம் முடி நரைத்து விடுமென சமையல்கார அம்மா சொன்னது என்னைச் சமாதானப்படுத்தத்தானா?

எண்ணெய்ப்பசையில்லாமல் முகம் வறண்டிருக்கிறது. கொஞ்சம் பவுடர் பூசி உதடுகளில் வாஸ்லின் புரட்டினாள். கருத்திருந்த உதடுகளுக்கு இப்போது ரத்த நிறம். ஹாங்கரில் மாட்டியிருந்த நீலக்கோட்டை எடுத்துக்கொண்டு வெளியேவந்து கதவைப் பூட்டினாள்.

போர்ட்டிகோவுக்கு வெளியே இருக்கும் படிகளிலொன்றில் உட்கார்ந்து அமர்சிங் ஹூக்கா இழுத்துக்கொண்டிருந்தார். காலில் செருப்பில்லை. காக்கிநிற காலுறை, கசங்கி அழுக்கு நிறமாகிவிட்ட முழங்காலைத் தொடும் சட்டை. ஏராளமான ஓட்டைகள் விழுந்த ஸ்வெட்டரைத் திறந்துபோட்டிருந்தார்.

"அமர்சிங் நான் வெளியே போகிறேன்."

"ஜி."

மூக்குவழியாகவும் வாய்வழியாகவும் புகைவிட்டுக்கொண்டே நரைத்த கண்களை உயர்த்திப் பார்த்தார்.

"கொஞ்சம் நடந்துவிட்டு வருகிறேன்."

"ஜி."

இடுக்குவழியாக இறங்கி நடந்தாள்.

'கோல்டன் நூக்'கின் வாசலைத் தாண்டினால் மலைச்சரிவு வழியாக வளைந்து வெளியே போகும் நடைபாதை ஆரம்பிக்கிறது. குதிரைச்சவாரிக்காரர்களுக்காகக் கருங்கற்கள் பதிக்கப்பட்ட பாதையைக் கடந்தால் நடைபாதை மீண்டும் மேலேறிச் செல்கிறது. வருடத்துக்கு ஒருமுறை பஹாடிகள் ராமலீலை கொண்டாடும் மைதானத்துக்கு மேலாக, பாதை அரைவட்டம் போடும் இடத்திலிருந்து பார்ப்பது சுவாரஸ்யம். மலைத்தொடர்கள் நடுவே கிடக்கும் ஏரி. இரு கரைகளிலுமாக நகரத்தின் சிவந்த மேற்கூரைகள். இரண்டு அடுக்காக ஏரியைச் சுற்றிப்போகும் பாதை. மரக்கூட்டங்களுக்கிடையில் ஏரியின் மறுகரையிலிருக்கும் மிகப்பெரும் விளம்பரப் பலகைகளைப் பார்க்கலாம்.

முன்பு எப்போதோ கண்ட ஒரு பகலுறக்கக் கனவைப்போல் ஏரிக்கும் நகரத்துக்கும் மேல் ஏப்ரல் மாத இளம்மஞ்சள் பறந்துசெல்கிறது.

இரண்டு

நீங்கள் உலகின் முகட்டில் நிற்கிறீர்கள் எனத் தோன்றுகிறது. படுக்கையறையின் மூடிய ஜன்னல் துவாரங்களின்வழி நுழையும் பகல்வெளிச்சத்திலிருந்து மானத்தைக் காப்பாற்ற இழுத்துவிட்ட கொசுவலைச் சுருள்கள் சுற்றிலும் உருவம்கொள்கின்றன. செம்மை கலந்த அந்திவெளிச்சம் புரளும் பனிச்சிகரங்களே உங்கள் கண்களின் எல்லையைக் குறிக்கின்றன. நேசத்தோடு ஒருபோதும் நினைத்திராத தேசத்தின் எல்லைகள்.

குளிர்ந்த காற்றுக்கு மூலிகைகளின், ஈரமான மண்ணின் மணம்.

குளிர்கால முடிவின் ஒரு நிமிடம்.

ஒரு நிமிடம் . . . வாழ்வில் ஒரு நிமிடம்.

"காலத்தின் நடைபாதையில் இந்த நிமிடம் முன்பே இடம்பெற்றிருந்தது."

சுதீர்குமார் மிஸ்ரா

1955 மே **19**

ஓடி மூச்சிரைத்துக் காலிடறிக் கடைசியில் நீங்கள் இதற்கு அருகில் வந்துசேர்ந்திருக்கிறீர்கள்.

யுகங்களுக்கு முன்பே உங்களுக்காகக் குறித்து வைக்கப்பட்ட நிமிடம்.

மூன்று

பாதை வெறித்திருந்தது. ஏரிக்கரையில் அங்கங்கே நீருக்குள் செங்கற்களால் கட்டப்பட்ட சிறிய படகுத்தளங்களுள் ஒன்றுக்கு நீல உடையணிந்த இளைஞன் ஒருவன் வண்ணம் பூசுகிறான்.

மின்னும் விளக்குக்கம்பங்களில் 'சாயம் காயவில்லை, கவனம்' என்று எழுதப்பட்ட அறிவிப்புப் பலகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

மே மாதத்துக்காக நகரம் ஒப்பனைசெய்து கொள்கிறது. அறிமுகமற்ற பயணிகள் வந்து சேருவதற்குள் புழக்கத்தால் மங்கிய முகம் மெருகேற்றப்படுகிறது. முதுமையின் வெள்ளிக் கோடுகள் மறைக்கப்படுகின்றன.

இரு கரைகளிலும் மரத்தூண்களில் கட்டப்பட்ட பெரும்பாலான படகுகள் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றன. வெண்மணல் தெரியும் கரைகளில் வாத்துகள் இரைதேடுகின்றன. அலைகளில் மிதந்துவந்த பலவண்ணம் பூசிய மிதவை ஒன்று நீருக்குள் வளைந்துகிடக்கும் மரக்கிளைகளுக்கிடையில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது.

வெறுமையான ஏரியைப் பார்த்தபடி கனத்த சிமென்ட் பெஞ்சில் விமலா உட்கார்ந்தாள்.

தூங்கியெழுந்த உற்சாகமில்லாத முகத்துடன் யாருக்காகவோ தயாராகிறது சுற்றுப்புறம். நகரத்தின் இதயத்தை அவளால் வாசிக்க முடியும். ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியும்.

மே மாதம் இந்தச் சிறு நகரம் ஆரவாரமிடுவதையும் சிரித்து ஆர்ப்பரிப்பதையும் வண்ணங்களையும் நறுமணங்களையும் வாரிவீசுவதையும் விமலா அருவருப்புடன் பார்த்து நிற்பதுண்டு.

யாருக்காக?

ஒன்பது வருடங்கள் பரஸ்பரம் புரிந்துகொண்ட நண்பர்கள் என்ற நிலையில் கேள்வி மனதுக்குள்ளேயே இருக்கிறது.

தல்லித்தாளிலிருந்து ஒரு படகு புறப்படுவதைப் பார்த்தாள். குழந்தைகள். நைனி தேவிக் கோயிலின் பெரிய வெண்கலமணிகள் ஒலித்தன.

சிறுவயதில் எல்லா வெள்ளி, செவ்வாய்களிலும் கோயிலுக்குப் போயிருந்தாள். வயலைத் தாண்டி பொடிமணல் கிடக்கும் பாதையைக் கடந்து குறுக்குவழியாகப் போனால் கோயில். வழியின் இரண்டு பக்கங்களிலும் செழிப்பாகப் பூத்து நிற்கும் மஞ்சள்பூக்கள், பொன்னரளிக் கூட்டங்கள். கூழாங்கற்கள் நிறைந்த அந்தப் பாதை இப்போதும் முன்னே தெரிகிறது. வழியோரத்தில் நெசவாளர் குடிசை முற்றங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் நூல்பாவுகள் இப்போதும் நினைவிலிருக்கின்றன. ஓட்டுச்சில்லுகள் சிதறிக்கிடக்கும் கோயில்வாசலிலிருந்து திரும்பும்போது தர்மகர்த்தாவின் வீட்டு வேலியிலிருந்து குன்னிமுத்துகள் பொறுக்கிச் சேர்ப்பாள்.

அப்பா தொலைவில் எங்கோ வேலை தேடி அலைந்துகொண்டிருந்தார் அப்போது. அடிக்கடி அப்பா வீட்டுக்கு வருவதில் யாருக்கும் விருப்பமிருக்கவில்லை. சொந்த வீட்டிலிருந்து சண்டையிட்டு வெளியேறிய அப்பாவுக்கு எங்கேயும் இடமிருக்கவில்லை.

இனியொருபோதும் திரும்பிப்போகப் போவதில்லை.

மேடை * சிதைந்து கிடந்த அந்தக் கோயில் இப்போதும் இருக்கிறதா?

* திடப்பள்ளி

பாக்குத்தோப்புக்கு அப்பால் தெரியும் வைக்கோல் வேய்ந்த அந்த வீட்டுக்குத் திரும்பிப்போகப் போவதில்லை.

பிறந்த கிராமத்தை எப்போதும் வெறுப்போடு மட்டுமே அப்பா நினைத்துப் பார்ப்பார்.

"எனக்கு அங்கே யார் இருக்கிறார்கள்?"

அல்மோராவில் ஆப்பிள் தோட்டமும் சொந்த வீடும் உருளைக்கிழங்கு ஆய்வாளர் வேலையும் தேடித்தந்த பதவியின் மதிப்பு தெரிந்தவர்களாக ஊரில் யாரிருக்கிறார்கள்?

சரியாக இருக்கலாம்.

அம்மாவுக்கு ஊர்பற்றி நினைக்கவே முடியாது. அந்த வெப்பநிலையை எப்படிச் சகிப்பாள்?

காலநிலையின் குற்றமா?

அப்பா கம்பளிக்கடியில் புரளும்போது அம்மா கண்ணாடிமுன் நின்று

அலங்கரித்துக்கொள்கிறாள். அப்போதுதான் யாரிடமோ சொல்வதுபோல ஊரின் வெப்பநிலைக் கொடுமையைப்பற்றிச் சொல்வாள் அம்மா.

ஒருவேளை அம்மா பயப்படுவதாக இருக்கலாம். கடைசியில் அப்பா முடிவை மாற்றிக்கொண்டால்?

காலநிலை!

வீட்டுக்குள்ளே காலநிலையின் வெம்மை அதிகமாவதால் இருக்கலாம் மிஸஸ் சக்கரவர்த்தியின் வீட்டுக்கு எனச் சொல்லி வெளியே இறங்குகிறாள். மிஸஸ் சக்கரவர்த்தியின் வீட்டுக்குப் போவதற்கு ஆல்ஃபிரட் கோமஸின் வீட்டுவாசலைத் தாண்டவேண்டி இருக்கும்.

போட்கிளப் அருகில், அல்கா ஹோட்டலுக்கு எதிர்ப்புறம் ஏரியினுள் கட்டப்பட்ட இதைப் போன்ற மண்டபத்தில் உட்கார்ந்து ஒருமுறை கிராமத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முயன்றாள்.

– எனக்கு நினைவில்லை.

– சுத்தமாக?

– பதினாறு வருடங்களுக்கு முன்பு, சுதீர். பதினாறு வருடங்கள்.

மே மாதத்தின் தெளிந்த இரவு. தொலைவில் மரக்கூட்டங்கள் நீலப்புகைபோலத் தொங்கி நிற்கின்றன.

– ஐந்து வயதில் நடந்ததெல்லாம் எனக்கு நினைவிருக்கிறது. நினைவுபடுத்திப்பார்.

நினைக்கும்போது இழைகளைப் பிரித்தெடுப்பதுபோலிருந்தது. ஓசைகளும் நிறங்களும் திரும்பிவருகின்றன. முந்திரி எண்ணெயின் மணமுள்ள தோணி, கன்றுகள் துள்ளும் வயல்வரப்பில் சாயும் கதிர்கள், மாடுபூட்டிய செக்கு சுழலும் ஓசை, வேட்டுவக் குடில்களிலிருந்து இரவில் கேட்கும் உடுக்கை ஒலி.

"சொல், கேட்கிறேன்."

மனம் முணுமுணுத்தது: வேண்டாம். வற்புறுத்தாதே சுதீர். நினைத்துப் பார்க்க எனக்கு இருப்பவை இவைதான். இந்த நிமிடங்கள். சிகரெட் வாசனை புரண்ட சொற்கள் இப்போது கன்னத்தைத் தொட்டு உரசும் இந்த நிமிடத்தில் நான் வாழ்கிறேனே.

“ஸிக்ஸ்டீன் இயர்ஸ், மை காட்! நாம் ஒரு தடவை போக வேண்டும். ப்ரிபேர்ட் ஃபாரென் அட்வெஞ்சர்?”

வட இந்தியாவிலிருந்து கேரளத்துக்கு வரும் கூட்டத்தில், அவளுடைய கிராமத்துக்குப் பயணிகள் இருவர் வந்து சேர்கிறார்கள்; மிஸ்டர் அன்ட் மிஸஸ் சுதீர்குமார் மிஸ்ரா.

“எனக்கு உன் ஊரைப் பார்க்க வேண்டும். ஐரோப்பா, தென்கிழக்கு ஆசியா, இலங்கை எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன். கேரளத்தைப் பார்க்க வேண்டும். என்னுடைய கிராமத்தில் பச்சை நிறத்துக்குக் குளிர்ச்சியில்லை. பெண்கள் மூன்று மைல் தொலைவிலிருந்து குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டுவருவார்கள். சர்வதேச உறவுகளைப்பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதிய நான் முழு இந்தியாவையும் பார்த்ததில்லை என்பது வெட்கக்கேடு.”

என்ன சொல்கிறாய் விமலா?

என்ன சொல்ல?

எனக்கு இந்த நிமிடங்கள் போதும் . . .

“நாம் போகலாம்.”

போகலாம் அல்ல, போகிறோம்.

“நிச்சயமாக.”

சின்ன வயதில் ஓடியலைந்த வழிகளிலும் வயல்வரப்புகளிலும் பரிச்சயமற்றவர்களைப் போலத் திரிய வேண்டும்.

மிஸ்டர் சுதீர்குமார் மிஸ்ரா.

மிஸஸ் விமலா மிஸ்ரா.

சிகரங்களின் வெள்ளிவிளிம்புகள் மறைந்தன. மலைத் தொடர்களிலிருந்து இன்னொரு மேகத்துண்டுபோல இளம்நீலச் சாயம் கலந்த பனிப்படலம் சமவெளிக்கு இறங்கிவந்தது. கீழே படர்கொடிகளில் சிக்கிக்கிடந்த வண்ணமயமான மிதவைகள் விடுதலை பெற்றன.

அவள் எழுந்தாள். கோயிலைச் சுற்றி மல்லித்தாள் படித்துறைக்கு அருகிலுள்ள பாதையில் நடந்தாள்.

வட்டவடிவில் கட்டப்பட்ட மண்டபத்தைச் சுற்றி மணல் பரப்பியிருந்த

மைதானம் காலியாகக் கிடந்தது. அதன் ஓரத்தில் சினிமா தியேட்டருக்கு முன்னால் சிலர் கூடியிருந்தார்கள். படித்துறையை அடைந்தபோது உறங்கும் படகுகளின் படகோட்டிகளுக்கு உயிர் வந்தது.

வரீங்களா மேம்சாஹிப்?

நாலணா போதும் மேம்சாஹிப்!

எல்லாரும் அழைக்கிறார்கள். கூட்டத்திலிருந்து விலகிக் கிடக்கிறது வழக்கமான 'மேஃப்ளவர்'.

'மேஃப்ளவர்'! எத்தனை அழகான பெயர்!

வருடக்கணக்கிலான காயங்கள் 'மேஃப்ளவ'ருக்கும் உண்டு.

பழைய படகோட்டி பிரதாப் இல்லை. சிகப்புநிற இருக்கையில் அமர்ந்து பீடி புகைக்கும் மஞ்சள் பற்கள் கொண்ட ஒரு சிறுவன். இடுங்கிய கண்களில் சிரிப்பை நிறைத்துப் பார்த்துக்கொண்டு நின்றானே தவிர தன்னைச் சவாரிக்கு அழைக்கவில்லை. அவள் மணல்திட்டில் இறங்கியபோது இடுங்கிய கண்கள் மலர்ந்தன. பளிங்குக்கண்களில் எதிர்பார்ப்பு.

படகோட்டிகள் சூழ்ந்தபோது அவர்களில் யாராவது கைபிடித்து இழுத்து ஏற்றிவிடுவார்களோ எனப் பயம் தோன்றியது.

'மேஃப்ளவ'ரை நோக்கி இரண்டு எட்டு வைத்தபோது சிறுவன் பீடியைத் தண்ணீரில் வீசியெறிந்து குதித்திறங்கினான்.

அவன் படகைப் பிடித்து நிறுத்தினான். இருவர் அமரும் இருக்கையில் அவள் தலைகுனிந்து ஒதுங்கி அமர்ந்தாள்.

சிறுவன் படகைத் துளாவத் தொடங்கினான். படகு கரையைவிட்டு அகன்றபோது அவள் 'மேஃப்ளவ'ரின் புதிய படகோட்டியை ஆர்வத்துடன் பார்த்தாள். செம்பட்டை முடி, பளிங்குக்கண்கள், உப்பலான முகத்தில் தவிட்டு நிறத்திலுள்ள நிறைய புள்ளிகள்.

"ப்ரதாப் எங்கே?"

"செத்துப்போயிட்டார் மேம்சாப்."

"எப்போ?"

"நாலு வருஷமாச்சு; போன மாசம் எனக்கு வாடகைக்கு விட்டாங்க.

ப்ரதாப்போட தம்பி பட்ஜியைக் காசு விஷயத்துல ஏமாத்துனதால வெளிய அனுப்பிட்டாங்க.”

கொஞ்சநேரம் கழிந்ததும் அவள் கேட்டாள்:

“உன் பெயரென்ன?”

“புத்து. அப்படித்தான் எல்லாரும் கூப்டுறாங்க.”

அவன் அசட்டுச்சிரிப்பு சிரித்தான்.

விமலாவின் உதடுகளில் மெல்லிய புன்னகை மலர்ந்தது. மஞ்சள் பற்களைக் காட்டும் அசட்டுச்சிரிப்பைப் பார்த்துத்தான் அவனுக்கு அந்தப் பெயர் வந்திருக்க வேண்டும்.

“சிலபேர் கோராசாஹிப் ** புன்னும் கூப்பிட்டுக் கேலி பண்ணுவாங்க.”

** வெள்ளைக்காரன்

“கோராசாஹிப்?”

“ஆமா மேம்சாஹிப். என்னோட அப்பா வெள்ளைக்காரரு.”

“நிஜமாகவா?”

“நெஜந்தான் மேம்சாஹிப். நான் பார்த்ததில்ல. அம்மா சொன்னதுதான்.”

“அம்மா என்ன செய்றாங்க?”

“செத்துப்போயிட்டாங்க”, சொல்லிவிட்டுத் தொலைவில் சுட்டிக்காட்டினான். “அந்தக் கட்டடம் கட்டுன வருஷம். ஆறேழு வருஷமிருக்கும்.”

துடுப்பு தாளத்தோடு விழும்போது ஆழத்தை நினைவூட்டி நீர்ப்பரப்பில் ஓசை எழுந்தது.

“மேம்சாஹிப் பெண்பிள்ளைகளோட ஸ்கூல் டீச்சர்தானே?”

இவன் எப்படித் தன்னைத் தெரிந்துகொண்டான் என்ற ஆச்சரியத்துடன் ஆமாம் என்ற அர்த்தத்தில் தலை அசைத்தாள்.

“நான் பார்த்திருக்கறேன்.”

“ம்.”

அவன் மீண்டும் நிதானமாகத் துளாவிக்கொண்டிருக்கிறான்.

"உன் அப்பா எங்கேயிருக்கிறார்?"

"தெரியாது. ஆனால், நான் கண்டுபிடிச்சிருவேன்."

"பெயர்?"

"தெரியாது மேம்சாஹிப். அம்மா ஒரு வாரந்தான் கூட இருந்தாங்களாம். ஆனாலும் கண்டுபிடிக்க வழியிருக்கு."

யோசித்துப் பார்த்தபோது மனதில் ஒரு சித்திரம் துலங்கியது.

பதினேழோ பதினெட்டோ வருடங்களுக்கு முன்பு –

இவனுக்கு எத்தனை வயதிருக்கும்? பதினெட்டுக்கு மேலிருக்காது.

பதினேழோ பதினேட்டோ வருடங்களுக்கு முன்பு மே மாதமொன்றில் ஏரிக்கு வந்த ஒரு வெள்ளைக்காரன் தங்கியிருந்த இடத்துக்குத் தரகர்களில் யாரோ ஒருவன் பெண்ணொருத்தியை அழைத்துவருகிறான்.

அவர்கள் ஒருவருக்கொருவர் பேசக்கூட முடிந்திருக்காது. வேட்டைக்காரனுக்கும் ஒரு இரை கிடைத்திருக்கிறது.

கோராசாஹிப்பின் சுகவாசத்தின் நினைவுச்சின்னங்களில் ஒன்று இதோ தோணிப் பலகையில் உட்கார்ந்திருக்கும் பளிங்குக்கண்களும் செம்பட்டை முடியும் புள்ளிகள் விழுந்த முகமும் கொண்ட இந்தச் சிறுவன்.

ஏரியின் கிழக்கு மூலையில் பிரகாசத்தின் ஒரு கீற்று மின்னிக்கொண்டிருந்தது, மேற்குச்சரிவில் சிதிலமடைந்த கோயிலுக்குக் கீழே குளத்தின் அருகில் மேய்ந்துகொண்டிருக்கும் வாத்துக்கூட்டத்தை நீலப்பரப்பில் பரவிநிற்கும் நுரைப்பொதிகள்போலப் பார்க்க முடிந்தது.

"சீஸன் தொடங்க இந்தத் தடவை தாமதமாகும். இல்ல மேம்சாஹிப்?"

"ம்."

"போன வருஷம் வெள்ளைக்காரங்க கம்மியாயிருந்தாங்க. இந்தத் தடவை எப்படியோ?"

அவன் பொதுவாகச் சொன்னான்.

"இந்தத் தடவை வருவாங்கன்னு தோணுது. என்னோட . . .

என்னோட . . .”

அவன் அதை முழுமையாக்கப் பாடுபடுவதைக் கண்டபோது வேடிக்கையாக இருந்தது. அவள் பூர்த்திசெய்தாள்.

“பிதாஜி.”

அவனுடைய முகத்தில் ஒரு துடிப்பு ஏறி இறங்கியது.

“ஹா! பஸ் ஸ்டாண்டில் இருக்கற பின்னுவோட பெரியம்மா என் கைரேகையப் பார்த்துச் சொன்னாங்க.”

தலைசாய்த்துக்கொண்டு ஏரி நடுவே பார்த்தபடி துளாவும் புத்துவின் கண்களில் எதிர்பார்ப்பின் வெளிச்சம்.

“பார்க்கும்போது நீ என்ன கேட்பாய்?”

“என்ன கேட்க? நான் ஒண்ணும் கேட்கமாட்டேன். ஒருதடவை பார்க்கணும். அவ்ளோதான்.”

விமலாவால் சிரிக்க முடியவில்லை. மனதின் தாழ்வாரத்தில் எங்கோ ஒரு பனிக்கட்டி உருகும் அனுபவத்தை உணர்ந்தாள்.

– எனக்கு எதுவும் வேண்டாம். ஒருதடவை பார்த்தால் போதும்.

அசடுபோலச் சிரிக்கும், பேசும் இந்தச் சிறுவனுக்குச் சொன்னால் புரியுமா? எனக்கும் ஒரு முறை பார்த்தால் போதும், புத்து. வேறொன்றும் வேண்டாம்.

கடைத்தெருவிலும் மலையோர வீடுகளிலும் விளக்குகள் ஒளிர்ந்தன. மண்டபத்தின் மேலுள்ள பெரிய டூம்லைட் பால்நிறமுள்ள வெளிச்சத்தைப் பரப்பிக்கொண்டு கண்திறந்தது. பைன் மரக்காடுகள் நிழல்களாக மாறத் தொடங்குகின்றன.

படித்துறை நெருங்கியிருந்தது.

“மேம்சாஹிப் கரைக்குப் போகவா, இல்ல ஒரு ரவுண்டுகூட?”

“வேண்டாம்.”

கற்படிகளிலிருந்து தண்ணீரில் இறக்கிக் கட்டப்பட்ட மரப்பலகைகளால் செய்யப்பட்ட நடைமேடை அருகே சிறுவன் படகைச் சேர்த்து நிறுத்தினான்.

அவள் வெளியே வந்தாள்.

கைப்பையிலிருந்து எட்டணா நாணயமொன்றைத் தேடியெடுத்து நீட்டினாள். அவன் சட்டையின் உட்பையில் தேடுவதைப் பார்த்தபோது மீதிச் சில்லரைக்கு எனத் தோன்றியது.

"ம் வெச்சுக்கோ. மீதி ஒரு சாயாவுக்கு."

அவன் மஞ்சள் பற்கள் முழுவதையும் காட்டிச் சிரித்தான். சட்டைப்பையிலிருந்து வெளியே எடுத்தது ஒரு தோலுறை.

அதிலிருந்து கவனமாக வெளியே எடுத்த காகித்தை நீட்டிக்கொண்டு சொன்னான்:

"பாருங்க மேம்சாஹிப்."

காகிதமல்ல, ஒரு பழைய புகைப்படம். காலப் பழமையால் அவன் முகம்போலவே புள்ளிகள் விழுந்த பழுப்புநிறமுள்ள புகைப்படம். படகுத்துறைக்கு முன்னால் எரியும் விளக்கு வெளிச்சத்தில், அரைக்கால் சட்டையும் 'புல்லோவ'ரும் அணிந்து குதிரைமேல் உட்கார்ந்திருக்கும் வெள்ளைக்கார இளைஞனின் படம். அவள் ஒரு நிமிடம் பார்த்தபடி நின்றாள்.

திருப்பிக் கொடுத்தபோது அவன் குரல்தாழ்த்திச் சொன்னான்.

"நான் கண்டுபிடிச்சுடுவேன்னு சொல்றதோட ரகசியம் இதுதான், மேம்சாஹிப்! யார்கிட்டயும் சொன்னதில்ல."

பேருந்துநிலையம் வெறிச்சோடியிருந்தது. கருத்த உடைகளும் முதுகில் கயிற்றுக்கட்டுகளுமாக போட்டியா சுமைதூக்கிகள் காலதூதர்கள்போலக் கூனிக்குறுகிக் காவலிருக்கிறார்கள்.

தபால் அலுவலகத்தின் வராந்தாவுக்கருகில் நிற்கும் ராணுவ வீரர்களின் துளைக்கும் பார்வையை முகம் திருப்பாமலே பார்க்க முடிந்தது. நடையில் வேகம் கூட்டினாள்.

மேற்குப் பாதையிலிருந்து மேல்நோக்கிச் செல்லும் வழி திரும்பும் இடத்தில் விடுதி முற்றத்திலிருக்கும் நீண்ட கம்பத்தின்மேல் பொருத்திய விளக்கு இலைப்பரப்புகளுக்கிடையில் விசும்பும் நட்சத்திரம்போல மினுங்குவதைப் பார்க்கலாம்.

நான்கு

கயிற்றுக்கட்டிலில் கனத்த போர்வைக்குள் புகுந்து படுத்ததும் நிம்மதியாக இருந்தது. இன்னும் ஒரு நாள் முடிகிறது.

வழக்கத்தைவிடக் களைப்பாக இருந்தது. கண் மூடியபோது வழக்கத்தைவிட இன்று சீக்கிரம் தூக்கம் வருமென்று தோன்றியது. தூக்கமல்ல, முடிவில்லாத ஆழத்தில் விழப்போகிறோம் என்ற எண்ணம். உடல் மட்டுமல்ல, கயிற்றுக்கட்டிலும் அறையும் கட்டடம் முழுவதும் சிகரத்தின் ஊசலாடும் உச்சியிலிருந்து கீழ்நோக்கி, பஞ்சுத்துகள்போலத் தாழ்ந்துபோகின்றன.

திடுக்கிட்டுக் கண்விழித்துக் கிடந்தாள். கண் மூடும்போது ஆழத்துக்கு, ஆழத்துக்கு . . .

மனம் சபலமான குரங்கைப் போன்றது. இல்லையென்றால் ரஷ்மிபற்றி இப்போது நினைக்கத் தேவையில்லை.

ஹல்தானி முஸாஃபரி பங்களா * வின் மூன்று அறைகளில் ஒன்றை இருண்ட கூடங்களைத் தாவிக் கடந்து கண்கள் உற்றுப் பார்க்கின்றன . . .

* பயணியர் பங்களா

நினைத்துப்பார்க்க வேறு பலவும் இருக்கின்றன.

ஏரிக்கரையில் எங்கிருந்தோ மத்தளமும் குழலோசையும் ஆரவாரங்களும் மூடிய ஜன்னலைத் தாண்டிக் காதை அடைகின்றன.

பஹாடிகளின் கல்யாண ஊர்வலமாக இருக்கலாம். பெட்ரோமாக்ஸ் விளக்குகள், தலைப்பாகையும் பட்டாடையும் இடுப்பில் வாளும் அணிந்து குதிரைமேல் அமர்ந்திருக்கும் மணமகனும் சுற்றத்தாரும். பலமுறை கண்ட அந்தக் காட்சி மனதில் துலங்கியது.

மலைச்சரிவில் எங்கோ பைன்மரங்களுக்கு இடையில் சிறு நதியில் வாத்திய முழக்கங்கள் நெருங்கிவருவதை மணமகள் காதுகூர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறாள். அவளது நொடிகள் ஆலங்கட்டி மழைபோலத் துள்ளி விழுகின்றன.

உலகம் முழுவதுமே காத்துக்கொண்டிருக்கிறது.

இப்போது பேருந்துநிலையத்திலோ மண்டபத்துப் படியிலோ ஒரு பழைய தோலுறையை நெஞ்சினருகில் பத்திரப்படுத்திக்கொண்டு படகுக்காரன் புத்து உறங்கிக்கொண்டிருக்கலாம். ஒருமுறையாவது அவனுடைய கோராசாஹிப் வராமல் இருக்கமாட்டார்.

ஒருமுறையாவது வராமல் இருக்கமாட்டார்.

– நானும் நீங்களுமெல்லாம் யுகங்களாகக் காத்திருக்கிறோம்.

காலத்தின் பாறைக்கூட்டங்களில் பனி விழுகிறது, உருகுகிறது, மீண்டும் பனிப்படலங்கள் குளிர்ந்து உறைந்து கட்டியாகின்றன.

நாமெல்லோரும் காத்திருக்கிறோம்.

மஞ்சள்பற்களும் முகத்தில் புள்ளிகளும் கொண்ட புத்துவிடம் அன்பு தோன்றியது. அவன் கதையைக் கேட்டவர் எல்லாரும் கேலி மட்டுமே செய்திருப்பார்கள்.

அவளால் அதைப் புரிந்துகொள்ள முடியும். காரணம் ஒன்பது வருடங்களுக்கு முன்பு கைநழுவிய கனவு மீண்டும் உயிர்பெறுமென்று ஒவ்வொரு ஏப்ரல் மாதத்திலும் நினைத்திருந்திருக்கிறாள்.

எங்கிருந்தோ வரும் பயணிகளுக்காக அடிவாரங்கள் ஆயத்தமாகும்போது உள்ளுக்குள்ளே அடக்கி மறைத்த மூலையிலிருந்து முனகல் எழுகிறது.

நான் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. தன்னை நம்பவைக்க முயற்சித்தாள்.

யார் யாரை ஏமாற்றுகிறார்கள்?

ஆப்பிள் தோட்டங்களில் பூக்கள் மலரும்போது, மலைச் சரிவுகளில் பனி உருகும்போது, ஒளிரும் வெயிலில் தூரத்துச் சிகரங்கள் தெளியும்போது நினைக்கிறேன்: இதோ குமாயுன் மலைகளில் மற்றொரு வசந்தம்!

சுற்றிலும் இயற்கையின் முகம் மாறுவதைக் கவனிக்காமல் இருக்கிறேன். ஒரு இரவு எங்கோ வெளியே பெருங்கூச்சல் கேட்டது.

உற்றுக்கேட்டபோது உற்சாகத்தின் ஆர்ப்பரிப்பு.

ஹோலி கங்கா சாகர்மே

பார் கங்கா சாகர்மே

ஹோலி ஹே . . .

இதோ, மற்றுமொரு ஹோலி நெருங்கியிருக்கிறது.

"பீபிஜி, நாளன்னிக்கு ஹோலி."

பக்ஷிஸ் ** பற்றி அமர்சிங் முன்பே நினைவுபடுத்தியிருந்தார்.

** இனாம்

இப்போது பயணிகளின் கூட்டான காலடியோசையைக் கேட்க இரவுகள் செவிசாய்க்கின்றன.

ஏரிநீர்போலவே காலம் தேங்கிநிற்கிறது.

வருடங்களுக்குப் பிறகு வருபவர்கள் எல்லாம் சொல்வார்கள்: இந்த இடம் முன்பு பார்த்தது போலவே இருக்கிறது.

ஒன்பது வருடங்களுக்கிடையில் என்னவெல்லாம் மாறின? வாழ்க்கையிடமிருந்து தப்பி வருபவர்களே உங்களால் அதைப் பார்க்க முடியாது. ஏனென்றால் இருண்ட முடிக் கற்றைகளுக்கிடையில் நரைத்த இழைகள் மறைந்து கிடக்கின்றன. விளக்குக்கம்பங்களின் பச்சைச் சாயத்தினுள் துரும்பரித்த ஆழங்களும் வடுக்களும் மறைந்து கிடக்கின்றன.

பூமியின் கிரீடத்தில் மிதித்த வெற்றிமுழக்கத்தோடு நானும் நீங்களும் அமர்ந்த பாறையின் பெயரும் மாறிப்போயிற்று.

இருட்டின் ஆழத்தை உருண்டு உருண்டு சென்றடையும்போது, கடவுளே இங்கு வெண்மேகங்கள் சிறகடித்து நகர்கின்றன . . .

கருங்கற்கள் பதித்த பாதையில் செல்லும் குதிரைக்குளம்படிகளின் சத்தம்.

கருத்த குதிரைக்காரன். அழுக்குப்பிடித்த ரோமக்கோட்டின் பை கனத்துத் தொங்குகிறது. தலையில் வட்டத்தொப்பி. கழுத்தில் சுற்றிய மஃப்ளர். வெள்ளையும் தவிட்டு நிறமுமான குதிரைகள்.

"எனக்கு இந்த வெள்ளைக் குதிரை போதும்."

"யுவர் சாய்ஸ்."

"ஸைஸ், இவன் பெயரென்ன?"

"இவனல்ல, இவள். சுவாலஜி கற்றுக்கொடுத்தாலும் இதுகூடத்

தெரியாதா?"

வெட்கத்தால் குனிந்தது முகம்.

"மோத்தி" என்றான் ஸைஸ்.

தாழ்ந்த குரலில் சொன்னான், "இந்த ஊரில் குதிரைகளுக்கு ஒரே பெயர்தான், மோத்தி."

மலையுச்சியில் குதிரைகளைக் கட்டிப்போட்டுவிட்டு மீண்டும் நடந்தபோது சிறிய கோயிலைப் பார்த்தார்கள். கழுத்தில் காமரா மாட்டிய பயணிகள் பலர் கோயில் வாசலில் இருந்தார்கள். இரும்புக்கம்பிகளில் தொங்கவிடப்பட்ட வெண்கலமணிகள் குலுங்குகின்றன. பலரும் பிரார்த்திக்கிறார்கள்.

"நாம் இந்த வழியாகப் போய்ப் பார்க்கலாம்."

தெளிந்த புலரி, காற்றில் புகை வாசனை தங்கிநிற்கிறது.

"இந்த வழியே வந்திருக்கிறாயா?"

"இல்லை."

"பெயர் தெரியுமா?"

கால்தடங்களைப் பார்த்துச் சிரித்தேன். தெரியும். வெளியே சொல்லவில்லை.

"நல்ல பெயர். லவ்வர்ஸ் ட்ராக்!"

வெளியின் மார்பில் தைத்து முறிந்த அம்புபோல் இருக்கிறது பாறை.

"ஆட்கள் ஏன் பாறைக்குப் பெயர்வைக்கவில்லையாம்?"

காதலின் பாதை முடியுமிடத்தில் –

"எதன் பாறை என்று சொல்வது?"

பாறையில் அங்கங்கே சில பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

1953 மீனா - கிஷோர்

பி எஸ்

"நேற்று ஹோட்டலில் அறிமுகமான இரண்டு இளைஞர்கள் தான் இந்த

இடத்தைப் பற்றிச் சொன்னார்கள்."

பாறையின் கூர்விளிம்பிலிருந்து பார்த்தால் பயம் தோன்றும். ஆப்பிள் தோட்டங்கள் சின்ன சதுரக்கட்டங்களாகவே தெரியும். இதயத்தின் சங்கீதம் கேட்கவரும் இணைகளுக்குப் பாறையின் சரிவில் உலகம் தனிமையான மூலைகளை ஒதுக்கிவைத்திருக்கிறது.

"பழைய பெயர்கள் அழிந்துபோகின்றன. புதிய பெயர்கள் பெருகுகின்றன."

குளிர்காற்றும் வெதுவெதுப்பான வெயிலும். அவன் பயணம் செய்த நகரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். பலவற்றைப் பற்றியும். ஜிம் கார்பெட் . . . வைஸ்சான்சலர் . . . ஆட்டோபான் . . . கிஸ்ஸிங்கேம்.

தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும் அந்த மனிதனை ஐந்து நாட்களுக்கு முன்புதான் பார்த்தேன். ஏரிக்கரையில் சிரித்துக்கொண்டே மணி என்ன எனக் கேட்டது ஐந்து நாட்களுக்கு முன்பா? பேருந்தில் அருகே அமர நேர்ந்தது அன்று காலையா? ஐந்து வருடங்களுக்கு மேலாக அல்லவா . . !

காப்பிட்டல் விடுதிக்கு மேலே மூடிய ஜன்னலுக்குக் கீழே நகரத்தின் கண்கள் ஒளிரும்போது, போர்வையின்கீழ் வலுவான முழங்கையில் தலைசேர்த்துக் கிடக்கும்போது சத்தம்போட்டுச் சொல்லத் தோன்றியது:

நான் தனியாக இல்லை . . . நான் தனியாக இல்லை.

தெரியுமா, அந்தப் பாறையின் மேலே பயணிகள் இப்போது ஏறுவதில்லை. ஒரு ஜூன் மாதம் பாறையின் கூரிய முனையில் ஏறிநின்று ஒருத்தி கீழே குதித்தாள். காதலர்கள் படுத்து உருண்ட சரிவுகள் காலியாகக் கிடக்கின்றன. பாதை வளையுமிடத்தில் யாரோ கல்லில் சுத்தியலால் பொறித்திருந்தார்கள், 'திஸ் வே டு ஈஸி டெத்'. மண்டையோடும் கீழே குறுக்காகவைத்த இரண்டு எலும்புகளும்.

சொல்லிச் சொல்லி அந்தப் பாதைக்குப் புதிய பெயர் வந்தது, 'டெவில்ஸ் ட்ராக்'.

ஆகாயம் தொடும் பாறைமீதிருந்து முடிவின்மைக்கு . . .

ஐந்து

அமர்சிங் இரண்டு கடிதங்கள் கொண்டு வந்தார்.

கடிதங்கள் முன்னால் விழும்போது எவ்வளவு கட்டுப்படுத்தினாலும் இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. ஒன்பது வருடங்கள் கழிந்தாலும் நம்பாமல் இருக்க முடியவில்லை. ஒருமுறை உறையைத் திறந்து கடிதத்தைப் பிரித்ததும் . . .

நடனமாடும் ஊதாநிற எழுத்துகள்;

"என் அன்பு விமலா!"

தபால் அலுவலகத்திலிருந்து அமர்சிங் வரும்போதெல்லாம் எதிர்பார்ப்புகளின் மாய உலகம் நொடிப்பொழுதில் முன்னே எழுகிறது. நீர்க் குமிழிபோல உடைந்தும் போகிறது.

ஒன்று பாபுவின் கார்டு. இந்தியில்தான் எழுதுவான். பாபுவுக்கும் அனிதாவுக்கும் மலையாளம் எழுதவோ வாசிக்கவோ தெரியாது.

கடைசி இரண்டு மூன்று வாக்கியங்களைப் பார்த்ததும் விஷயம் பிடிபட்டது: "ஆகவே அக்கா கடிதம் கிடைத்தவுடன் எனக்கு இருபத்தைந்து ரூபாய் அனுப்பவும்."

ஐம்பத்துமூன்று மைல் தொலைவில் உருளைக்கிழங்குத் தோட்டங்களின் நடுவிலுள்ள வீட்டைப் பற்றி நினைக்காமலிருக்க முடியவில்லை.

மூன்று மணி நேர தூரத்துக்கு அப்பால் அவளுடைய குடும்பமிருக்கிறது; அப்பா, அம்மா, பாபு, அனிதா.

வீட்டிலிருந்தபோது விமலாவும் அனிதாவும் சாப்பாட்டு அறையை அடுத்த சின்னப் படுக்கையறையில்தான் தூங்குவது வழக்கம். அதற்கடுத்த ஸ்டோர் ரூமின் கயிற்றுக்கட்டில் பாபுவுடையது.

ஆனால் இரவு கட்டில் காலியாகக் கிடப்பது வழக்கம். வீடு இருளில் மூழ்கியதும் பின்வாசலைத் திறந்து இறங்கிப் போயிருப்பான். வனத்துறை மாளிகை அருகேயுள்ள கடை மாடியில் கஞ்சாப் புகை மண்டியிருக்கும் அறையில், காசுவைத்துச் சீட்டாடிக்கொண்டிருப்பான். அம்மாவுக்குத் தெரியும். தண்ணீர் குடிக்க சாப்பாட்டு அறைக்கு வந்து

லைட்டைப்போடும்போது ஸ்டோர்ரூமில் வெளிச்சம் பாயும். காலியான கட்டிலைப் பார்க்காததுபோலத் திரும்பிப்போவாள்.

"பாபு தூங்கிட்டானா?"

"ம்."

"இவ்வளவு சீக்கிரமாவா?"

"ம்."

அம்மாவால் அப்படித்தான் சொல்ல முடியும். காரணம், மகனின் கண்களை உற்றுப்பார்க்கும்போது அம்மா பயத்தை வெளியில் காட்டுவதில்லை அவ்வளவுதான்.

பாபுவின் கண்களில் எப்போதும் ஒரு மிரட்டல் இருந்தது.

ஒருமுறை –

கல்லூரி விடுமுறைக்காலம். அப்பா குளியலறையிலிருந்தார்.

"எனக்கு ஐம்பது ரூபா வேணும்."

"என் கையில பணமில்ல."

"ஏற்பாடு பண்ணுங்க, அவசியம்."

"அப்பாக்கிட்ட கேளு, நானா சம்பாதிச்சுக் கொண்டு வர்றேன்?"

"பணம் தரலேன்னா . . ."

அவன் ஒரு நிமிடம் நிறுத்தினான்.

அம்மாவின் மௌனம் விம்மி உடைவதாக இருந்தது.

"ஒரு கடிதம் குடுத்தாப் போதும். நான் மிஸ்டர் கோமஸ் கிட்ட வாங்கிக்கறேன்."

"பாபு!"

அம்மாவும் மகனும் ஒருவருக்கொருவர் எடைபோட்டுக்கொண்டிருக்கும்போது அவளுக்குத் தன்னுடைய இதயத்துடிப்பு மட்டுமே கேட்டது.

வரவேற்பு அறை சோபாவில் தளர்ந்து உட்கார்ந்தாள்.

அம்மா உள்ளே போனாள். பெட்டிகளைத் திறப்பதும் மூடுவதும் கேட்டது. சில நிமிடங்களுக்குப் பிறகு தம்பி வெற்றிப் பெருமிதத்துடன் இறங்கிப்போவதைப் பார்த்தாள்.

அப்பா பெரிய படுக்கையறை அருகே அகலமான இரட்டைக்கட்டிலில் கண்மூடிப் படுத்திருப்பார்.

தூங்காதபோதும் கண்மூடித்தான் கிடப்பார். கண் இமைகள், ஆட்களின் காலடிச்சத்தம் கேட்கும்போது துடிக்கும். சிரமப்பட்டுத்தான் கண் திறப்பார்.

அப்பா பேசும்போதுதான் வருத்தமாக இருக்கும். ஊர்ந்து நகரும் தெளிவில்லாத ஒலிகள்.

போன வாரம் அம்மா எழுதியிருந்தாள்: இப்போது சுத்தமாகப் பேச முடியவில்லை, கண்இமைகள் மட்டும்தான் அசைகின்றன.

இரண்டு வருடங்களாகத்தான் இந்தக் கிடப்பு. கட்டிலுக்கு அருகில் போய் நிற்கும்போதெல்லாம் மரணம் அப்பாவுக்கு ஒரு வரம் எனத் தோன்றும். காரணம், அவள் ஆராதித்திருந்த அப்பா பல வருடங்களுக்கு முன்பே செத்துப்போயிருந்தார். க்ரீம் நிறத்திலுள்ள சூட்டும் தலையில் இறகுத் தொப்பியுமாகப் பிரம்புத்தடி வீசிக்கொண்டு நடந்துவரும் அப்பாவின் உயர்ந்து மெலிந்த உருவம்தான் மனதில் இருக்கிறது. அப்பா குடும்பத்தின் நாயகன் மட்டுமல்ல, சக்கரவர்த்தியுங்கூட. சாப்பாட்டு அறையில் அப்பாவுக்குச் சிம்மாசனம்போலச் சித்திரவேலைப்பாடுகள் செய்த பிரம்மாண்ட நாற்காலியுண்டு. அதை யாரும் தொடக்கூடாது. அதைத் தாண்டிப்போகும்போதெல்லாம் பயத்தோடுதான் அந்த நாற்காலியைப் பார்ப்பாள்.

அப்பா வீட்டுக்கு வந்துவிட்டால் சத்தமே கேட்கக்கூடாது. பற்றவைத்த பைப்பின் புகையிலை வாசனை வீட்டுக்குள் பரவி அலையும். எல்லாரும் தாழ்ந்த குரலில்தான் பேசுவார்கள்.

மதியச் சாப்பாடு முடிந்து படுத்தால் அம்மாவுக்குக் கண் மூடப் பயம்.

நேரம் என்ன ஆயிற்று? மூன்று மணிக்கு ஆயத்தமானால்தான் நாலரைக்கு அப்பா திரும்பிவரும்போது காபியும் பலகாரங்களும் தயாராகவிருக்கும். உடைகூட மாற்றாமல் நேராக வந்தமர்வது சாப்பாட்டு மேஜையில்தான். மேஜை நிறைந்திருப்பதைப் பார்க்கவில்லையென்றால் புயல்வீசும்.

அப்பாவுடன் சாப்பிட உட்காரவும் பயமாகவே இருந்தது.

விமலா எங்கே? பாபு எங்கே?

அவங்களுக்குத் தயாராகல. அவங்க அப்புறமாகச் சாப்பிடட்டும்.

விமலா, பாபு! கம் அன்ட் ஜாயின் மீ.

சாதாரணமாகவே சிவந்திருக்கும் அப்பாவின் முகம் தம்ளர்கள் தளும்பினாலோ, ஏப்பம்விட்டாலோ, தும்மினாலோ அதிகமாகச் சிவக்கும். திட்டமாட்டார். திட்டுவதைவிட அச்சமூட்டும் அந்தப் பார்வை.

அனிதா ஒருமுறை சொன்னாள்:

"அப்பா, நாம ஊருக்குப் போலாம்."

"ஊர்ல உன் தாத்தா இருக்காரா?"

தங்கையின் கண்கள் நிறைந்தன.

ஊர்ப்பாசத்தோடு அப்பா பேசிக் கேட்டதில்லை.

அப்பா என்றும் அச்சமூட்டுபவராகவே இருந்தார்.

அப்பாவுக்குக் கடிதம் எழுதும்போதும் பயம்தான். ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்பது கட்டாயம் . . . அனுப்பும் ஒவ்வொரு கடிதமும் தவறான பகுதிகளில் அடிக்கோடிட்டுத் திரும்பிவரும்.

கூடவே ஒரு எச்சரிக்கையும்:

கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தைச் செலவழித்துத்தான் நீ படிக்கிறாய் என்பதை நினைவில் வைத்துக்கொள்.

அதெல்லாம் முன்பு. இப்போது யாரும் அப்பாவுக்குப் பயப்பட வேண்டியதில்லை. எழுந்திருக்க முடியாது. கண்களில் மட்டும் பழைய தீச்சுவாலைகள் மிஞ்சியிருக்கின்றன.

நான்கு மாதங்கள் முன்பு ஒரு முறை வீட்டுக்குப் போனாள். வீட்டில் ஒரு இரவு தங்கியதுமே போதுமென்றாகிவிட்டது. காலைப் பேருந்திலேயே இடத்தைக் காலிசெய்தாள்.

வீட்டில் சாயங்காலம் அப்பாவும் அவளும் தனியாக இருந்தார்கள். கட்டிலுக்கு அருகே நின்றபோது குழறும் நாக்கு ஏதோ பேசத் தவிப்பதைப் பார்த்தாள்.

"அப்பா பேச வேண்டாம், களைப்பாயிடும்."

அப்போது முதல் முறையாக அந்தக் கண்களில் இயலாமையைப் பார்த்தாள். ஊரில் யாருக்கும் வேண்டாதவனாக இருந்த இளைஞன் பெரிய வீட்டுப்பெண் ஒருத்தியை மணந்து கொண்டான். அதுவொரு வீர சாகசக் கதை. குழந்தைப்பருவத்தில் பலமுறை கேட்ட கதை. தோட்டத்தில் கணக்காளர் ஆனான், போஸ்ட் மாஸ்டரானான், அம்மாவின் தாலியை விற்று எங்கோ போனான். மதராசில் படிக்கிறான் என்று பிறகு கேள்விப்பட்டார்கள். திருமணம் முடிந்த பின்பு பெரிய அக்காவுடன் சண்டைபோட்டபோது சொத்துரிமையைத் தானம் கொடுத்துவிட்டுக் கையைத் துடைத்துக்கொண்டு இறங்கிப்போன துணிச்சலை அவளால் புரிந்துகொள்ள முடியும்.

பலவற்றையும் பார்த்த அந்த மனிதர்தான் பொறுக்கிப்பயல்கள் சுழற்றிவீசிய சாரைப்பாம்புபோல இங்கே படுத்திருக்கிறார்.

நீண்ட நேரம் அந்த அறைக்குள் நிற்க முடியவில்லை. வெளியே வராந்தாவைக் கடந்து முற்றத்து மூலையில் சென்று நின்றாள்.

அம்மா வழக்கம்போல மிஸஸ் பட்நாகர் வீட்டுக்கு என்று சொல்லிப் போயிருந்தாள். பளபளக்கும் சேலை, உதட்டில் சாயம்பூசி உருவான அசிங்கமான சிவப்பு, லோமா தேய்த்துக் கருப்பும் தவிட்டு நிறமுமாகியிருந்த தலைமுடி. அலங்கரித்துக்கொண்டுக் கிளம்பிச் செல்லும்போது அருவருப்பாக இருக்கும்.

வாசல்படி அருகே தங்கை நிற்கிறாள். சாயங்காலம் அவளும் தேவைக்கதிகமாக அலங்காரம் செய்துகொள்கிறாள். அதற்குத் தேவையிருக்கலாம். டாக்டரின் மகன் பிரதீப் சந்திரசர்மா லெதர் ஜாக்கெட் அணிந்து அந்தப் பாதைவழியில் எங்காவது நிற்பான்.

அப்பாவைக் கிளப்பிலுள்ள கழிவறையில் இருந்து ஆட்கள் தாங்கிப்பிடித்துக் கொண்டுவந்த நாளுக்கு முன்பென்றால் யாரும் வாசலில்கூட இறங்கமாட்டார்கள்.

இப்போது தம்பி பாபு பஹாடிகளுடன் கஞ்சா புகைத்தும் காசுவைத்துச் சீட்டாடியும் திரிகிறான். தங்கை வேலைக்காரர் பீர்பகதூர் வழியாகக் காதல் கடிதங்கள் பரிமாறுகிறாள். அம்மாவுக்கு எதற்கும் நேரமில்லை. வயதின் சுருக்கங்களில் க்ரீமும் பௌடரும் அப்பியும் முடியைக் கருப்பாக்கி வருடங்களைத் தடுத்துநிறுத்தப் பாடுபடுகிறாள்.

அப்பாவுக்கு இதெல்லாம் தெரியுமா? தெரிந்திருக்கலாம். ஒளி மங்காத கண்கள், குழறிப்போகும் நாக்கின் இடத்தை எடுத்துக்கொண்டிருக்கின்றன.

அன்று, டாக்டர் மேனோனும் மிஸஸ் மேனோனும் அப்பாவின் உடல்நிலைபற்றி விசாரிக்க முக்தேஸ்வரத்தில் இருந்து ஜீப்பில் வந்திருந்தார்கள். வீட்டில் யாருமில்லை.

மிஸஸ் மேனோன் கேட்டார்,

"விமலா, மாமி எங்கே?"

"வெளியே எங்கேயோ போயிருக்கிறார்."

மிஸஸ் மேனோனின் முகத்தைப் பார்க்கச் சங்கடமாக இருந்தது. கோமஸுடனான அம்மாவின் உல்லாசப் பயணங்கள் பற்றி அவரும் கேள்விப்பட்டிருக்கலாம்.

இரவு வீட்டுக்குள்ளே கயிற்றுக்கட்டிலில் படுத்தபோது தூக்கம் வரவில்லை. இதுதான் குடும்பம்.

வெறுக்கிறேன் . . . நான் எல்லாவற்றையும் வெறுக்கிறேன்.

மார்ச் மாதத்தில் ஒருமுறை பாபு விடுதிக்கு வந்தான்.

ஹோலி வருகிறது. அம்மா ஞாபகப்படுத்தியிருக்கிறார்.

அனிதா எழுதியிருந்தாள்: அக்கா வர வேண்டும்.

வருகிறேன் என்று சொல்லித் தம்பியைத் திருப்பியனுப்பினாள். தங்கைக்கு எழுதினாள்: வேலைப்பளு. இப்போது வர முடியாது.

ஒருநாள் காலை தம்பியோ வீட்டின் வேலைக்காரர் பீர்பகதூரோ வந்து கதவைத் தட்டுவார்கள்.

என்ன ஆயிற்று?

அப்பா போயிட்டார்.

அல்லது, சாஹிப் நம்மவிட்டுப் போயிட்டார் பீபீஜி . . .

ஒருநாள் . . .

இழந்த பேரரசின் அடித்தளம் வெட்டி உடைக்கப்படும் ஓசையைக் கேட்டபடி கிடக்கும் அப்பாவுக்குப் பாக்கியமுண்டாவதாக . . .

ஆறு

இரண்டாவது கடிதம்: சயின்ஸ் டீச்சர் சாந்தா வேலையை ராஜினாமா செய்கிறாள். அவளுக்குத் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது. ஒரு ரயில்நிலையத்தில் வைத்துத்தான் மாப்பிள்ளையை முதலில் பார்த்தாளாம்.

தேதியை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு தந்தியடிக்க வேண்டும்.

கோட் நம்பர் எட்டு. பதினாலு. பதினேழு.

உயிரற்ற வாழ்த்துச்செய்திகளைத் தபால்துறையினர் பலபிரிவுகளில் தயாரித்துவைத்திருக்கிறார்கள்.

விடுதியிலிருந்து ஒவ்வொருவராகத் தப்பிச் செல்கிறார்கள்.

வெளியேறிச் செல்பவர்களே, உங்களுக்கு என் வாழ்த்துகள்!

பகல் முழுதும் குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது.

வெளியே போக வேண்டாம் என்று தீர்மானித்தாள். அறையில் அங்கும் இங்குமாகக் கிடக்கும் பொருட்களையெல்லாம் அடுக்கிவைத்தாள். பெரிய தோல்பெட்டியில் புடவைகளை மடித்து வைக்கும்போது கருப்புநிறத்தில் அழகான இசைக் குறிப்புகள் பின்னப்பட்ட ரோஸ் நிற ஸ்வெட்டர் அடியில் கிடப்பதைப் பார்த்தாள். ஒருபோதும் அதை அணிந்ததில்லை.

விடைபெற்றுப் புறப்படுவதற்கு முந்தைய நாள் மாலை மல்லித்தாளில் இருக்கும் சாயம்பூசின தாடிக்காரப் பெரியவரின் கடையிலிருந்து வாங்கியது. அவள்தான் அதைத் தேர்ந்தெடுத்திருந்தாள்.

"நல்ல ஸ்வெட்டர் ஒண்ணு தேர்ந்தெடுத்துக் குடுக்கறயா?"

"யாருக்கு?"

"ஒரு பெண்ணுக்கு."

குறும்பாக முகத்தைப் பார்த்தான். பொறாமை நிழலாடுகிறதா என்று பரிசோதிப்பதற்காக இருக்கலாம்.

கடைக்காரப் பெரியவர் எழுந்துவந்து பொருட்களை முன்னே பரப்பினார்.

இசைக் குறிப்புகள் தைக்கப்பட்ட ஸ்வெட்டரை முதல் முறையாகப் பார்க்கிறாள். நல்ல நிறம்கூட.

"இது நல்லாருக்கு."

"பிடிச்சிருக்கா?"

"வாங்கிக்கப்போறவளுக்குப் பிடிக்குமான்னு தெரியாது. எனக்குப் பிடிச்சிருக்கு."

"ம். அதுபோதும். நல்லாருக்குன்னு நீ ஒத்துக்கிட்டியே."

ப்ளாஸ்டிக் உறையிலிட்டு அவள்தான் அதைக் கையோடு வைத்திருந்தாள்.

நேராகப் போனது தியேட்டருக்கு. 'புஷ்பாசர்க்காரி' தியேட்டரின் மேலேயிருந்த உணவகத்தில் சாப்பிட்டார்கள்.

ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் ஒரு சிறுமியும் அவள் குடும்பமும் பக்கத்து மேஜையில் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

அவள், "நமஸ்தே" என்று சொல்லி அருகே வந்தாள்.

இனி அவள் தோழிகளுக்கிடையில் செய்தி பரப்புவாள். விமலாஜிக்கு நீலக்கண்களும் நெற்றியில் கலைந்துகிடக்கும் முடியுமுள்ள இளைஞனான பாய்ஃபிரெண்டு இருக்கிறான். புஷ்பா சர்க்காரின் காதலனைப்பற்றி ஊர்முழுதும் பரப்பியதும் சிறுமிகள்தாம்.

தேவையில்லாமல் அந்தச் சிறுமியை அறிமுகப்படுத்தினாள். "என்னோட ஸ்டூடன்ட். இது என்னோட கஸின். சீஸனுக்கு வந்திருக்கிறார்."

எல்லாம் தெளிவாக மனதில் தெரிந்தன.

ஹோட்டல் இருக்கைகள் இப்போதும் சிவப்பாகத்தான் இருக்குமா? பணக்காரர்கள் மட்டுமே போகும் அந்த ரெஸ்டாரன்டுக்கு அப்புறம் போகவில்லை. வெள்ளைச் சிறகுகள் செருகிவைத்த கஸாட்டா ஐஸ்கிரீமை இப்போதும் வாடிக்கையாளர்களுக்குப் பரிமாறுகிறார்களா?

தியேட்டருக்குள் மனித உடல்களும் மூச்சுக்காற்றுகளும் வெதுவெதுப்பு ஏற்றியிருந்தது.

கடைசி வரிசையில் அடுத்தடுத்த இருக்கைகளில் உட்கார்ந்தார்கள்.

ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுக்கும் அடிமைகளின் கதை. கழுத்தில் பூமாலையிட்ட பழங்குடிப் பெண்களின் குழுநடனம், தாமிர நிறப் பெண்ணின் – ஈரமுள்ளதாகத் தோன்றும் – உதடுகள்மீது நாயகனின் உதடுகள் பதிந்ததும் கோர்த்திருந்த கைவிரல்கள் இறுகிக்கொண்டன.

"கொடுத்துவைத்தவன்."

காதில் முணுமுணுப்பு.

சிகரெட் நறுமணமுள்ள மூச்சு அப்போது கன்னத்தை வருடியது.

விடுதிக்குப் போகும் திருப்பத்தில் நின்று விடைபெறும்போது பிளாஸ்டிக் உறையிலிருந்த ஸ்வெட்டரைத் திருப்பிக்கொடுத்தாள்.

அப்போது –

"அது உனக்குத்தான்."

திகைத்துப்போனாள். உடனடியாக வேண்டாமென்று சொல்லத்தான் தோன்றியது.

"நான் . . . எனக்கு . . ."

ஒன்றும் சொல்ல முடியவில்லை.

"உனக்காகத்தான் அதை வாங்கினேன். குட்நைட்."

தனியே நடந்துபோகும்போது புதர்களிலிருந்து சீழ்க்கை ஒலியுடன் வந்த குளிர்காற்றிடம் சொன்னாள்.

"தேங்க்யூ, தேங்க்யூ ஃபார் எவ்ரிதிங்."

விடுதியின் நடுமுற்றத்தில் மஞ்சள்வெயில் படர்வதைக் கண்டதும் ஜன்னலைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

கூலிக்காரர்கள் இருவர் பெட்டிப் படுக்கைகளைச் சுமந்து 'கோல்டன் நூக்'கை நோக்கி ஏறிப்போகிறார்கள். இந்த வருடத்து விருந்தாளிகள் வந்துசேர்ந்திருக்கிறார்கள்.

போன வருடம் டெல்லியிலிருந்து ஒரு எஞ்சினீயர் குடும்பம் வந்திருந்தது. பதினாறுக்கும் மூன்றுக்கும் இடைப்பட்ட ஒன்பது குழந்தைகள். அவர்கள் போகும்வரை சுற்றிலும் எப்போதும் கோலாகலமாகவே இருந்தது.

அதற்கு முந்தைய வருடம்: தேனிலவுக்கு வந்த ஒரு பிராமணத் தம்பதிகள்.

வெளியே காலநிலை திடீரென்று அருமையாகத் தோன்றியது. வெளியே செல்ல வேண்டாம் என்ற தீர்மானம் நொறுங்கியது.

வழியில்தான் அமர்சிங்கைப் பார்த்தாள். சந்தையிலிருந்து வருகிறார். ஒதுங்கிநின்று மரியாதையுடன் ஒரு கடிதத்தை நீட்டினார்.

மாலைத் தபாலில் இன்னொரு கடிதம்!

இதயத்துடிப்புடன் வாங்கிப் பார்த்தாள்:

"ஓ ரஷ்மி வாஜ்பேயி!"

அமர்சிங் தாண்டிப்போனதும்தான் தேவைக்கு அதிகமாகக் காண்பித்த மரியாதையின் மர்மம் புரிந்தது. சாராய வாடை.

நடந்துகொண்டே கடிதத்தை வாசித்தாள்:

மரியாதைக்குரிய டீச்சர்ஜி,

நான் நேற்று இரவே வீட்டுக்கு வந்துசேர்ந்துவிட்டேன். வழியில் பிரச்சனை எதுவுமில்லை. தங்களுக்குப் பிதாஜியின் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

— ரஷ்மி

ராம்நகர் விலாசம்.

தபால் முத்திரையைப் பார்த்தபோது தன்னை அறியாமல் சிரித்தாள். ஹல்தானி!

காலையிலேயே கடிதமெழுதி சுற்றுலாவிடுதிப் பணியாளனிடம் ஒப்படைத்துவிட்டுப் பேருந்து நிறுத்தத்துக்கு நடந்துபோகும் ரஷ்மியின் முகத்தில் தெரியும் வெற்றிப்பெருமிதத்தை ஊகிக்க முடிகிறது.

உன்னை மன்னிக்கிறேன். என்றென்றும் நினைத்துப் பார்த்துக்கொள்ளும் சம்பாத்தியமாக ஓர் இரவு உனக்குக் கிடைத்திருக்கிறதே.

தினமும் ஏறி இறங்கும் வழியைவிட்டு மலைச்சரிவின்வழி நடந்தாள். சிதிலமடைந்த விழாத்திடல். புதர்களிலும் மரங்களிலுமாகக் குரங்குகளின் கூத்து.

ராட்சசனின் மண்டையோடுபோல மேடுபள்ளமாகக் கிடக்கும் கற்குவியலின் உச்சியில் உட்கார்ந்தாள். அங்கே உட்கார்ந்தால் ஏரியின் ஒரு பகுதி தெரியும்.

போட்கிளப்பைத் தாண்டியிருக்கும் ஹோட்டலின் சுழல் படிக்கட்டு தெரிகிறது. வெண்மாடத்தில் யாரோ நிற்கிறார்கள். ஆகாயத்தின் கீழே தனித்துவிடப்பட்ட ஒரு மனித உருவம்.

ஹோட்டல் மூன்று முறை கைமாறியிருக்கிறது. பெயரும் மாறியிருக்கிறது.

உருண்ட தூண்களும் வண்ணம்பூசிய இரும்புக்கம்பிகளால் முடைந்த கூடை நாற்காலிகளும் மாறியிருக்காது.

சில வருடங்களுக்குப் பிறகு ரஷ்மி மனைவியாகவோ, தாயாகவோ ஹல்தானியின் சுற்றுலாவிடுதி வாசலைத் தாண்டிப் போகும்போது புதிரான ஆனந்தத்துடன் ஜன்னல்களில் ஒன்றைப் பார்க்கக்கூடும்.

முதல் பாவம், பெண்மையின் திரையைக் கிழித்தெறியும் முதல் வேதனை, முதல் மகிழ்ச்சி, முதல் நிறைவு . . .

மூன்றாவது மாடியின் வலதுமூலையில் வெண்மாடத்துக்குப் போகும் சுழல் படிக்கட்டுக்கு அருகில் மூடிக்கிடக்கும் அந்த ஜன்னல் தெரிகிறதா?

ஏழு

சிவப்புக் கம்பளம் விரித்த நிலம். காற்றில் சிகரெட் புகையும் பால் அன்காவுடைய பட்டுப்போல மினுங்கும் குரலும் மிதக்கின்றன.

கதவைத் திறக்கும்போது இறுக்கமான அடர் சிவப்பு நிறத்திலுள்ள ஸ்போர்ட்ஸ் ஷர்ட் அணிந்த இளைஞனின் முகத்தில் நம்பிக்கையின்மையும் ஆச்சரியமும் மலர்ந்து விரிகின்றன.

"ஓ மை காட்!"

"என்ன?"

"வரமாட்டாய் என்று நினைத்தேன்."

பிரம்புக்கூடைபோல வட்ட வடிவில் செய்யப்பட்ட இரும்பு நாற்காலியை நகர்த்தியபடி வரவேற்றான்:

"உட்கார்."

அவள் கண்கள் அறையெங்கும் அலைந்தன. தரைக்கம்பளத்தில் இசைத்தட்டுகள் சிதறிக் கிடக்கின்றன. மேஜைமேல் புத்தகங்களின் குவியல். அலமாரியில் லெதர்பையில் சுற்றப்பட்ட காமரா.

பாடகன் பாட்டை முடித்துக்கொண்டிருக்கிறான்: புட் யுவர் ஹெட் ஆண் மை ஷோல்டர்ஸ்!

"என் தோளில் உன் தலை சாய்த்துக்கொள். உன் இதழ்களை என் இதழ்களோடு சேர்த்துவிடு . . ."

ஏரியில் படகிலும் பைன்மரங்களின் நிழல்களிலும் 'காதலர் பாதை'யிலும் மணிக்கணக்காகப் பேசியவன், வார்த்தைகளால் பூமாலைகள் தொடுக்கிறவன், மௌனமாக இருந்தான்.

அவளுக்குப் பேச எதுவுமில்லை. தொண்டையில் கனமுள்ள ஏதோ ஒன்று சிக்கிக் கிடக்கிறது. ரெக்கார்ட் ப்ளேயரின் ஊசி கரகர ஒலியுடன் சுழற்சியை நிறுத்தியதும் அறையின் அமைதி விம்மி உடைந்தது.

பொறுக்க முடியாத அமைதி. அவன் பாடுபட்டு என்னவோ சொன்னான். அர்த்தமற்ற வார்த்தைகள். ஏராளமான அர்த்தம் தொனிக்கும் ஓசைகள்.

மென்மையற்ற ஓசை. அவள் வலிந்து சிரித்தாள். அவளுடையதல்ல அந்தச் சிரிப்பு.

அவன் முன்னால் நின்று கை நீட்டி விரல்களைப் பிடித்து உயர்த்தியபோது தலைக்குள் ரத்தம் நுரைத்துக் கிளம்பியது. நடுங்கும் கால்விரல்நுனிகளில் இருந்து தெளிவற்ற இனம்புரியாத வலியின் பிரவாகம் பல கிளைகளில் படர்ந்து ஏறுகிறது.

வார்த்தைகளும் ஓசைகளும் வெகு தொலைவில்.

"வா."

மூடிய ஜன்னல்வழி ரகசியமாக உள்ளே நுழையும் வெளிச்சத்தில் கண்மூடிக் கிடந்தபோது, தேர்ந்த விரல்கள் உடலில் நகர்ந்தபோது வட்டமிட்டு பரவும் சிற்றலைகளின் நடுவில் அமிழ்ந்துபோன கல்லின் தெளிவற்ற இடத்தைப்போல ஒரு நினைவு மட்டும் இருந்தது.

இது நடக்கக்கூடுமென்று எதிர்பார்த்ததுதான் . . .

"வேண்டாம். என்னால் முடியாது."

குரல் பலவீனமாக இருந்தது.

"பரவாயில்லை", இமைகளைத் திறக்க முயன்றபோது ஒளிபொருந்திய அந்த நீலக்கண்கள், எண்ணெய் பளபளப்பு பார்வையில் இறங்கித் திரும்பியதுபோல ஒரு நொடி தோன்றியது.

வலி. வலியால் துடித்தபோது உயர்ந்து தாழ்ந்துகொண்டிருந்த கழுத்தில் கைகளைச் சுற்றிப் போட்டு உதடுகளை அழுந்தக் கடித்துக் கிடந்தாள்.

. என் . . . எனக்கு எல்லாவற்றையும் தரும் இந்த நொடியில் அழுதுவிடக் கூடாது.

மனமும் பனி இறங்கும் மற்றொரு அடிவாரம். எனது மட்டுமானது. எனக்குள் முழுமையாகக் கரைந்துபோகும் இந்த நொடியில் அழக் கூடாது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு கண்திறந்தபோது ஈர உதடுகளைக் கன்னத்தில் பதித்துக் கேட்டான்: வலித்ததா?

ஒன்றும் சொல்ல முடியவில்லை. அழலாம். சிரிக்கலாம். உடல் முழுக்கத் தகித்தது. எழப் பயமாக இருந்தது. கண்மூடிக் கிடந்தாள். அப்போது மே மாதத்தின் தெளிந்த ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மலர்வதைப் பார்த்தாள்.

தொலைவில், யாரோ காற்றில் பறக்கவிட்ட வெண்ணிறக் கைக்குட்டைபோல ஒரு மேகத்துண்டு பறந்துபோகிறது.

பின்னால் தலை சாய்த்து தரையில் கையூன்றி ரெக்கார்ட் ப்ளேயரை மீண்டும் இயக்கக் கட்டிலோரம் சாய்ந்தபோது கூசிப்போனாள். போர்வையை இழுத்து உடலை மூடத் தொடங்கியபோதுதான் பார்த்தாள், ரத்தத்துளிகள் படிந்த மூன்று அடையாளங்கள்.

"என் அழகான தினங்களையும் தனிமை இரவுகளையும்" பற்றி பெண்குரல் பாடத் தொடங்கியது.

சாய்ந்துகிடந்து கை நீட்டியபோது அவன் மார்பிலிருந்து வேர்வைத் துளி உருண்டுவிழுந்தது.

"விமலா!"

துடிக்கும் கண்இமைகளை இறுகமூடிக் கிடந்தாள். சொல்ல ஒரு பெரும் புத்தகமே மனதில் இருந்தது. ஆனால் தொண்டை வறண்டுபோயிருந்தது.

நான் நானல்லாது ஆகியிருக்கிறேன்.

நடுங்கும் உதடுகளில் குரல் மரத்துநின்றது. உடல் எடையற்றதாக ஆகிவிட்டிருந்தது. பறந்து அலைகிறது. ஆகாயச் சரிவில் மேகத்துண்டு போல, தாழ்வாரத்தின் புயல்காற்றில் யாரோ பறக்கவிட்ட வெண்ணிறக் கைக்குட்டைபோல.

எட்டு

ஏரியின் கண்ணுக்குத் தெரியும் மூலையில் இருந்த தெருவிளக்குகள் பனி மூட்டத்தில் அமிழ்ந்தன. பகல் வெளிச்சம் இன்னும் கொஞ்ச நேரம் மிஞ்சி இருக்கும்.

பாட்டை முணுமுணுத்தபடி பின்னால் கடந்து போன உருவம் திடீரென்று அமைதியானதும் தலைதிருப்பிப் பார்த்தாள்.

"மேம்சாஹிப்!"

எல்லாப் பற்களும் வெளியில்தெரிய சிரிக்கும் அந்தப் பையனை அடையாளம் கண்டுகொள்ள ஒரு நொடி தேவைப்பட்டது; புத்து.

"ஏன் மேம்சாஹிப் இன்னைக்கு ஏரிக்கு வரல?"

"ஒண்ணுமில்ல."

"எப்பவும் இங்கே உக்காந்து இருப்பீங்களா?"

"சிலசமயம்."

"மேம்சாஹிப் எல்லா நாளும் போட்டிங்க்கு வரலாம். எனக்கு மூணு அணா தந்தா போதும்."

"ஆகட்டும்".

அவள் எழுந்தாள்.

"சீஸன் தொடங்கியாச்சு மேம்சாஹிப். டெல்லிலே இருந்து ஒரு ஸ்பெஷல் பஸ் வந்திருக்கு".

அது அப்படித்தான். தினமும் சிலர் வந்துகொண்டிருப்பார்கள். ஆனால் ஒருநாள் கேள்விப்படுவோம், சீஸன் தொடங்கியிருக்கிறது! பின் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அடிவாரம் உயிர்ப்படைகிறது.

"எல்லாரும் நம்ம ஊர்க்காரங்கதான்."

வெளிநாட்டினர் இல்லாதது அவனுக்குக் கொஞ்சம் ஏமாற்றமாக இருந்திருக்குமோ என்னமோ!

"நீ எங்கே இங்கே வந்தே புத்து?"

"ஒரு துடுப்பு உடைஞ்சுபோச்சு மேம்சாப். தோ அங்கே இருக்கிற அன்னுவோட வீட்ல பழைய துடுப்பொண்ணு இருக்குன்னு சொன்னாங்க."

அவன் சைனா பீக்குக்குக் கீழே ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினான்.

அவள் கிளம்பியதும் புத்து கேட்டான்:

"போறீங்களா?"

"ஆமா."

"நான் வந்து பேசினதாலயா மேம்சாப் போறீங்க?"

"இல்ல நேரமாச்சு."

அவள் நடந்தபோது புத்துவும் கொஞ்ச தூரம் பின்னால் தொடர்ந்தான்.

"ஒரு விஷயம் கேட்கட்டுமா மேம்சாப்?"

"ம்?"

"வெள்ளக்காரங்க நாட்டைவிட்டுப் போயிட்டாங்கன்னு சொல்றாங்க, நெஜமா?"

அவன் முகத்தில் பதற்றத்தைப் பார்த்ததும் பொங்கிவந்த சிரிப்பை அடக்கினாள்.

"சும்மா சொல்றாங்க."

"ஆமாம், அதைத்தான் நானும் சொன்னேன். நம்மளோட இவ்வளவு நல்ல ஊர் இருக்கிறப்போ யாராவது போவாங்களா?"

திருப்தி அடைந்தவனாக திரும்பி நடந்தான். பின்னால் அவனுடைய முனகல் பாட்டு மறுபடியும் கேட்கத் தொடங்கியது.

காங்கிரீட் படிகள் ஏறுமிடத்தில் வெறும் தரையில் அமர்சிங் குறட்டைவிட்டுத் தூங்குகிறார். மறுபடியும் கிழவர் மலையோரக் குடிசைகளில் எங்காவது போய் சாராயம் குடித்திருக்கலாம். ஒரு வாரம் பரம சுகம் மனுஷருக்கு. வீட்டுக்குத் திரும்பும் மாணவிகள் கொடுத்த சில்லறை இத்தனை நாள் கைவசம் இருந்ததே ஆச்சரியம்.

விடுமுறைக் காலத்தில் மட்டும்தான் இந்த சுதந்திரமுண்டு. அது விமலா

ரெசிடன்ட் டியூட்டரான பிறகான விதி. மாணவிகள் இருக்கும்போது அமர்சிங்குக்குப் பித்தேறும் நாட்களில் சாயங்காலம் தனக்குப் பதிலாகப் பள்ளியின் தோட்டக்காரனைக் காவலுக்கு அழைத்துவந்த பிறகு விடுமுறை எடுத்துக்கொள்ளலாம்.

கொஞ்சம் குடித்துவிட்டால் அமர்சிங்குக்கு மரியாதை கூடும். இன்னும் அதிகமானால் அழுதுகொண்டே பழைய கதைகளைச் சொல்வார். மனைவி ஓடிப்போனதையும் மகன் அடித்துவிரட்டியதையும். போதுமென்ற அளவு வாங்க முடிந்தால் மூலைக்கல்லிலோ தரையிலோ படுத்துறங்குவார்.

கேள்விப்பட்டிருக்கிறாள். ஒருதடவை காலையில் ஒரு ரெசிடன்ட் டியூட்டர் போர்ட்டிகோவுக்கு வந்து பார்த்தபோது அங்கே அமர்சிங் இல்லை. சுற்றிலும் பார்த்தபோது கம்பிவேலிக்கு மேல் அமர்சிங்கின் கோட்டும் காலுறையும் மடக்கி தொங்கவிடப்பட்டிருந்தது. திரும்பவும் கூப்பிட்டபோதுதான் விஷயம் புரிந்தது. கம்பிவேலிக்கு மேல் மடிந்து கிடந்தது உடைகளல்ல, அமர்சிங்கேதான்!

அறை மேஜைமேல் ஆட்டா ரொட்டியும் சப்ஜியும் மூடி வைக்கப்பட்டிருந்தது! தெர்மோஃப்ளாஸ்கில் பாலும்.

மலையேறி வந்ததால் இருக்கலாம். வெக்கையாக இருந்தது. ஜன்னலைத் திறந்துவைத்தாள். அப்போது ‘கோல்டன் நூக்’கின் விளக்குகள் ஒளிர்ந்ததைப் பார்த்தாள். ஸ்வெட்டரைக் கழற்றிவிட்டு மீண்டும் ஜன்னல் அருகே வந்தாள்.

வராந்தாவில் வரிசையாக வைக்கப்பட்ட செடிகள், வறண்டு காய்ந்த பூந்தொட்டிகள் அருகே இரண்டு கைகளால் நெற்றியைப் பிடித்துக்கொண்டு ஸ்டூலின்மேல் காலைத் தூக்கிவைத்து யாரோ உட்கார்ந்திருந்தார்கள். இந்த வருடம் ‘கோல்டன் நூக்’குக் கிடைத்த விருந்தினர் யாரெனத் தெரிந்துகொள்ள ஆர்வம் தோன்றியது. சர்தார்ஜி ஒருவர். வயதானவர் எனத் தோன்றுகிறது.

தலைப்பாகையை மடிமேல் வைத்திருக்கிறார். முன்னந் தலையில் உருண்டையாகக் கட்டிவைத்த முடியின் நிழல் முற்றத்தில் ஒரு சிகரத்தின் ஓவியத்தை வரைகிறது. அசைவில்லை, கைவைத்த நாற்காலியில் யாரோ ஒரு பிணத்தை உட்காரவைத்தது போலத்தான் தோன்றும்.

சில நிமிடங்களுக்குப் பிறகு அந்த மனிதச்சிலை லேசாக அசைந்தது, தலை உயர்த்தி நாற்காலியின் பின்னால் சாய்ந்து உட்கார்ந்தபோது, விமலா

ஜன்னலைவிட்டு விலகி அதைச் சாத்தினாள்.

ஒற்றைத் தந்தியை இழுத்துக்கட்டிய முழ நீள 'இக்தாரா'வின் ஸ்ருதி உயர்ந்ததும் விமலா உற்றுக் கேட்டாள்.

அந்த மனிதன்தானா? அப்படியானால் தளர்ந்த விரல்கள் எத்தனை திறமையாக ஒற்றைத் தந்தியில் சஞ்சரிக்கின்றன!

மெத்தை ஊர்வன ஒன்றின் உடல்போலக் குளிர்ந்து குழைந்துக் கிடந்தது.

குரல் சர்தார்ஜியுடையதாக இருக்க வேண்டும். பிசிரடிக்கும் குரல்.

அவள் காதுகூர்ந்தாள்:

உட்டீ உட்டீ வேதிலீ ஆர் காகா
லம்பீ லயி வே உடாரீ
ஜா ஆகீம் மேரே நாஹி னூ
கோரீ மனோம் க்யோம் பிஸாரி

ஏதோ பழைய பஞ்சாபி நாட்டுப்புறப் பாடல்.

அறுத்துக் குவித்த சோளக்கதிர்கள் நடுவே கடும்வெயிலிலும் நிலாவெளிச்சத்தில் நடப்பதுபோல அனாயாசமாகக் கச்சைக் கயிற்றைச் சுழற்றி நடந்துபோகும் பஞ்சாபிப் பெண்ணின் வாடிய முகத்தை மனதுக்குள் கற்பனை செய்ய முடிகிறது இப்போது.

ஜடையும் தாடியும் வைத்த வெங்காயம் மணக்கும் பலசாலிகளான பஞ்சாபிகளைப் பார்க்கும்போது எப்போதும் வெறுப்பாகவே இருந்தது; தேவையில்லாத பீதியும். ஆனால் அவர்களுடைய பாடல்கள் பிடிக்கும். ஆக்ராவில் கல்லூரி படிக்கும் காலத்தில் அம்ருதா என்ற பஞ்சாபிப் பெண் தோழியாக இருந்தாள். அவள் நிறைய காதல் பாடல்களைப் பாடிக் காட்டுவாள். முரட்டு இளைஞர்களின் கண்களில் மலரும் பகல் கனவுகள்தான் அந்தப் பாடல்கள் என்று தோன்றும்.

சுவருக்கு அப்புறமிருந்து பிசிர் குரலும் இக்தாராவின் விசும்பலும் மிதந்து வந்தன.

தில்கா டுகடா மேம் காகஜ் பகாவாம்
உம்கலியா கட்ட கானீ
அக்காம் தா கஜ்ஜலா மைம் சாஹீ பணாவாம்

ஹஸுஆம் தா பாணீ, ஆ பாணீ

விமலாவின் கண்கள் ஈரமானதாகத் தோன்றியது.

காகமே, பற வெகு தூரம். என் அன்பனிடம் கேள், என்னை மறந்ததேன்?

அவள் தன்னையே எச்சரித்துக்கொண்டாள்: முப்பத்தோரு வயதான ஒருத்தி நாடோடிப்பாடல் கேட்கும்போது பலவீனமடையக் கூடாது.

மறதியில் குடியிருக்கும் அந்தக் கிராமத்துப் பெண்ணின் குரலை அவள் கேட்டாள்:

தில்கா டுகடா மை காகஜ் பகாவாம் . . .

இதயத்தின் ஒரு துண்டைக் காகிதமாக்கி, விரலை ஒடித்துப் பேனாவாக்கி, கண்மையைக் கண்ணீரில் நனைத்து மையாக்கி நான் சேதி எழுதவா?

தன் உள்ளில் எங்கோ சர்தார்ஜியின் விரல்கள் தீண்டுகின்றன. கவனத்தைத் திசைதிருப்ப ஏதாவது வாசிக்கத் தோன்றியது. அலமாரிப் புத்தகங்களைப் புரட்டியபோது ஒரு கவிதைத் தொகுப்பு கிடைத்தது. பலமுறை பயன்படுத்தியதால் அட்டை கழன்றிருந்தது. ஊதா நிற மையால் முதல் பக்கத்தில் நீளமாகக் கையெழுத்து இடப்பட்டிருந்தது.

சுதீர்குமார் மிஸ்ரா, ஜனவரி 55.

பெரும்பாலான பக்கங்களில் ஊதா மையால் கோடிட்ட வரிகளைப் பார்க்க முடிந்தது. அவனுக்கு மிகவும் பிடித்த நான்கு வரிகள் இருந்தன. பலதடவை அவன் அசைபோடுவதைக் கேட்டிருக்கிறாள்.

I am dying my own death

and the deaths of those after me

I am living my own life

and the lives of those after me.

ஒற்றைத் தந்தி முறுக்கிய வாத்தியக் கருவியின் ஒலி குளிர்ந்த சூழலில் எப்போதும் மிதக்கிறது.

'கோல்டன் நூக்'குக்கு சீஸனுக்கு வரும் பயணிகள் பலவழிகளிலும் இந்த அறையின் வாழ்க்கையைப் பாதிப்பதுண்டு. போன வருடம் இரவும் பகலும்

குழந்தைகளின் கொண்டாட்டம். இரண்டாம் வருடம் புதுமணத் தம்பதிகளின் வாயாடித்தனமான அமைதி. வகிட்டில் குங்குமமும் நெற்றியில் பெரிய பொட்டும் வைத்த புதுமணப்பெண். அவர்கள் ஒரு மாதம் இங்கே தங்கினார்கள். இரவும் பகலும் அவர்கள் காட்டேஜுக்குள்ளேயே இருந்தார்கள். வெளியே நடக்கச்செல்வதுகூட அபூர்வம். ஜன்னல் திரைக்கு அந்தப் பக்கம் அவர்களின் நிழல்கள் நெருங்கியும் விலகியும் தெரியும். சத்தம் வெளியே கேட்காது.

ஏரியையும் நந்தாதேவியின் பனிக்கிரீடத்தையும் பார்ப்பதற்காகத் தடுமாறி நடக்கும் பயணிகளின் ஆரவாரத்துக்கு நடுவில் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு மட்டுமே முப்பது நாட்களைக் கழிக்க முடியாது!

முடியுமாக இருக்கலாம். மூடிய கதவுகளுக்குள் மிக அழகான ஒரு உலகம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறபோது.

ஒருமுறை ஒரு கிழவரும் பதினேழோ பதினெட்டோ வயதான பெண்ணும் அங்கே தங்க வந்திருந்தார்கள். அப்பாவும் மகளும் என்றே நினைத்திருந்தாள். அமர்சிங்தான் கண்டுபிடித்தார். பெண், கிழவரின் மனைவியாம்.

புஷ்பா சர்க்காரால் புகழுக்கு உயர்த்தப்பட்ட அந்த அறையில் காலம் தேங்கி நிற்கும்போது ‘கோல்டன் நூக்’கில் வாழ்க்கையின் பல முகங்களும் ஏறி இறங்குகின்றன.

சர்தார்ஜியின் வீணை மௌனமானது.

அவர் தனியாக இருக்கிறாரா?

கிழவரானாலும் இளைஞனானாலும் அவர் தனியாகவா?

தனியே . . . தனியே.

ஒன்பது

இமாலயச்சரிவின் குளிர் இரவுகளில் உறங்கியிருக்கிறீர்களா நீங்கள்? நினைவுகூர அடுத்த இரவின் தனிமை மட்டுமே இருக்கும்போது? நவம்பர், மே மாதங்களில் கதவுகளும் ஜன்னல்களும் அடைந்து கிடக்கின்றன. சுற்றிலும் குளிரின் உணர்வோ வெம்மையின் உணர்வோ ஊடுருவாத மரப்பலகைகள் பாவிய சுவர்கள். ராத்தூக்கத்தில் திடுக்கிட்டு எழுந்து கண்விழிக்கும்போது திறந்த ஜன்னலினூடே பிரபஞ்சத்தின் ஒரு துண்டில் கூட பங்கேற்க முடியாது. ஆகாயமில்லை. நட்சத்திரங்களில்லை. பூமியின் நிழல்களும் நிலவில் மங்கித் தெரியும் மர உச்சிகளும் இல்லை. மஞ்சு நிற ஜன்னல்கள், மங்கிய கண்ணாடிகள், உங்கள் உலகத்தின் பார்வையற்ற கண்கள்.

என் மரணத்தையும் என் பின்னவர் மரணத்தையும்
நானே மரிக்கிறேன் . . .
என் வாழ்வையும் என் பின்னவர் வாழ்வையும்
நானே வாழ்கிறேன் . . .

இக்தாராவின் எதிரொலிகளை அசைபோட்டுக்கொண்டே உறங்கிப்போனாள்.

பத்து

காலையில் போர்ட்டிக்கோவுக்கு வரும்போது அமர்சிங் யாருடனோ சிரிப்பது கேட்டது.

அவள் கடந்துபோகும்போது எல்லைக் கற்களுக்குக் கீழே நின்றுகொண்டு சர்தார்ஜி பேசிக்கொண்டிருந்தார்.

ஜன்னல்வழியே பார்த்ததும் நினைத்தாற்போல வயதானவரல்ல. வயது நாற்பதுக்கும் அறுபதுக்கும் இடையில் எதுவும் ஆகலாம். புத்துணர்வு இல்லாத வறண்ட முகத்தில் சுருக்கங்களும் கோடுகளும் விழுந்திருந்தன. கண் தடங்களில் கருத்த இரவுகள் உறங்கிக் கிடந்தன. நெற்றியின் முக்கால்பகுதியிலும் கருப்புநிறத்தில் வியாபித்துக் கிடக்கும் ஒரு தழும்பு. விகாரமான அந்த முகத்தைப் பார்க்கும்போது சட்டென்று வெறுப்புதான் தோன்றும்.

திரும்பிப்போகத் தயாரானாள்.

"நமஸ்தே டீச்சர்ஜி."

விமலா திரும்பி நின்றாள்.

"நமஸ்தே!"

"டீச்சர்ஜி நிறைய புத்தகங்கள் வாசிப்பீர்களென்று சௌக்கிதார் சொல்கிறார்."

விமலா அமர்சிங்கைக் கொஞ்சம் கோபமாகப் பார்த்தாள். இவர் காலையில் வராந்தாக்களைப் பெருக்குவதற்குப் பதில், எங்கிருந்தோ வந்த ஆளிடம் தன்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்திருக்கிறார்?

ஆமாம் என்றோ இல்லையென்றோ சொல்லவில்லை.

"பிரச்சினை இல்லையென்றால் எனக்குக் கொஞ்சம் புத்தகங்களைக் கடன்கொடுங்கள். வரும்போது நிறைய புத்தகங்கள் வாங்கினேன். வழியில் மூன்று நாட்களிலேயே எல்லாவற்றையும் விழுங்கித் தீர்த்துவிட்டேன்."

அந்த வார்த்தைப் பிரயோகத்தைக் கேட்டதும் விமலாவின் உதடுகளில் புன்னகை எட்டிப் பார்த்தது.

ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக விமலா சொன்னாள்:

"என்னிடம் நல்ல புத்தகங்கள் குறைவு."

"நான் கண்டதையெல்லாம் வாசிப்பேன். மருந்து கேட்டலாக், ரெயில்வே கைடு, டெலிபோன் டயரக்டரி எதுவானாலும் பரவாயில்லை."

விமலாவால் அப்போது சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

அளவுக்கு மீறி தொளதொளத்த சட்டையும் அகலமான நீலநிற கால்சட்டையும் அணிந்திருந்தார் அவர். பேசும்போது தென்படும் இடைவிட்டு நிற்கும் தேய்ந்த பற்களின் கருஞ்சொத்தைகள் அருவருப்பை உண்டாக்குகின்றன.

"பார்க்கலாம்."

குளியலறையில் இருந்து திரும்பிவரும்போது சமையலறைக்குள் போய்ப் பார்த்தாள். அப்போதுதான் அடுப்பு மூட்டப்பட்டிருந்தது. கூடத்தின் முடிவில் வராந்தாவில் நின்று சுவர் வளைவுக்குக் கீழே பார்த்தபோது அமர்சிங்கும் சர்தார்ஜியும் தோட்டத்தில் நிற்பது தெரிந்தது. சர்தார்ஜி ஜெரானியச் செடியை வருடிக்கொண்டிருந்தார்.

இரண்டு வாரங்களாக யாருக்கும் கடிதம் எழுதவில்லை. பதில் அனுப்பாத கடிதங்கள் மேஜையறையில் சேர்ந்திருக்கின்றன. இன்று எழுதிவிடலாம்:

அன்புள்ள சாந்தா, நீ மணமகளாகப் போவதை அறிந்து மகிழ்ந்தேன். தேதியைத் தெரிவிப்பாய்தானே?

அன்புள்ள அம்மாவுக்கு, நான் இங்கு நலம். அங்கு நீங்கள் அனைவரும் நலமென நம்புகிறேன்.

அன்புள்ள ஷிரின், நான் ஒரு மாதமாக உடல் நலமில்லாமல் இருந்தேன். அதனால்தான் பதில் அனுப்பத் தாமதமானது.

அலமாரியில் இருந்து நான்கைந்து புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தாள். மூன்று நாவல்கள், ஓவியன் ஒருவனின் வாழ்க்கை வரலாறு, ஒரு ஹாலிவுட் நடிகனின் உண்மை விளம்பல்கள்.

முன்பு சித்திரவேலைப்பாடுகள் இருந்ததை நினைவுபடுத்தும் வாதுமைமரத் தட்டில் அமர்சிங் வெண்ணெய் தடவிய டோஸ்ட்டும் காபியும் கொண்டுவந்தார்.

மேஜைமேல் அடுக்கியிருந்த புத்தகங்களை நகர்த்தித் தட்டை வைத்ததும் கிழவர் கேட்டார்:

"சர்தார்ஜிக்கா?"

"ஆமாம், கொடுத்துவிடுங்கள்."

"நல்ல மனுஷன். சர்தார்ஜி ஹிந்தி பஹாடி ரெண்டும் சரளமாப் பேசுவார். என்னைப் பார்த்ததும் அமர்சிங்தானேன்னு கேட்டார்."

"ஏற்கனவே உங்களைத் தெரியுமா?"

"பத்துப் பதினெட்டு வருஷத்துக்கு முன்னாடி இந்த காட்டேஜுக்கு வந்து தங்கியிருக்காராம். என்னவொரு ஞாபகசக்தி!"

"ம்."

ஆர்வம் காண்பித்தால் அமர்சிங் தன் பழங்கால வீரக் கதைகளைச் சொல்லத் தொடங்குவார்: இளமையில் தன் உடல்பலம், அடிதடியில் கழுத்து வெட்டுப்பட்டது, ஒருமுறை ராமலீலாவுக்கு ஸ்ரீராமச் சக்கரவர்த்தி வேடம் புனைந்தது.

"சர்தார்ஜி பெரிய பணக்காரர்னு தோணுது பீபிஜி."

கோபம் வந்தது: "நீங்கள்தான் அவரோட முனிம்ஜி * யா?"

* குமாஸ்தா

"இல்ல பீபிஜி, டெல்லிலயிருந்து டாக்சிலதான் வந்திருக்கார். பன்னிரண்டு ரூபாய்க்கு பஸ் இருக்கிறப்போ முன்னூறு ரூபா?"

"பணம் இருப்பவர்கள் செலவு செய்யட்டும், உங்களுக்கென்ன?"

ஸ்டாம்பு வாங்கிவரச் சில்லறைகளைக் கொடுத்து அமர்சிங்கை வெளியே அனுப்பினாள்.

வழக்கம்போலக் கிழவர் நினைவுபடுத்தினார்:

"கடிதமெழுதித் தாங்க பீபிஜி. நான் சரியா ஸ்டாம்பு ஒட்டி பெட்டியில் போட்டுடறேன். ஒரு நடை மிச்சமாகுமே?"

அமர்சிங்கைத் தெரிந்துகொள்ளத் தொடங்கியது இன்றோ நேற்றோ அல்லவே. கடிதத்தைக் கிழித்து காற்றில் வீசுவார். பிறகு ஸ்டாம்புக்கான காசில் கஞ்சா வாங்குவார். எல்லாருக்கும் தெரிந்த விஷயம் என்பதால்

நம்பாவிட்டாலும் அவருக்குக் கவலை இல்லை.

கதவைச் சாத்திவிட்டுக் கடிதம் எழுத உட்கார்ந்தபோது வெளியிலிருந்து அமர்சிங்கின் கூக்குரல்:

"பீபிஜி, கொஞ்சம் சீக்கிரம் வாங்க."

வெளியே வந்தபோது காக்கிச் சட்டையும் கம்பளிப் போர்வையும் அணிந்த தபால்காரர் நிற்கிறார்.

"பீபிஜிக்கு ஃபோன் வந்திருக்கிறது."

தபால்காரர் தெளிவுபடுத்தினார்;

"டிரங்க் கால்."

உள்ளுக்குள் நடுக்கம் ஏற்பட்டது. ஒரு நொடி ஸ்தம்பித்து நின்ற பிறகு அறைக்குப் போய் சால்வையெடுத்துப் போர்த்திக்கொண்டாள்.

"அமர்சிங், அறையைப் பூட்டவில்லை."

"டீக், டீக் ** பீபிஜி. ஸ்டாம்பு பீபிஜியே வாங்கிக்கிறீங்களா!"

** சரி, சரி

பதில் பேசாமல் வேகமாக வெளியே வந்தாள்.

மலையிறங்கி சமதளப் பாதையை அடைந்ததும் நடையை நிதானமாக்கினாள். வாழ்க்கையில் ஏதோ நடக்கப்போகிறது.

தொலைவில் எங்கிருந்தோ நன்கு பழக்கமான குரல்.

பொதுத் தொலைபேசி அலுவலகக் கதவின்மீது சாய்ந்து மிக மெதுவாகவே ரிசீவரைக் கையிலெடுத்தாள். மனம் அப்போது அமைதியாக இருந்தது.

யாரு?

பாபுவின் குரல். பாபு!

என்ன?

ஆமாம் . . . காலையில் . . . ஆமாம் அக்கா . . . ஐந்தரை மணிக்கு . . .

தபால் அலுவலகத்துக்கு வெளியே கற்கள் ஊன்றியிருந்த வெளியில் ஒரு நொடி நின்றாள். இளம்வெயில். சுற்றிலும் பயணிகளின் அழகான காலைப்பொழுது. பின்னால் பேருந்து நிலையத்தின் இரைச்சல்.

தூங்கிவழிந்த இந்த இடம் எத்தனை சீக்கிரம் திடுக்கிட்டு எழுந்திருக்கிறது! பயணிகளின் கூட்டம். பெட்டிப் படுக்கைகளின் குவியலைச் சுற்றி கழுகுகளைப்போலக் கொத்தி இழுக்கும் போட்டியா கூலிகள். சைக்கிள் ரிக்ஷாக்காரர்களும் ஹோட்டல் ஏஜென்டுகளும் சேர்ந்து எழுப்பும் பேரக்கூச்சல்கள்.

ஆமாம் . . . காலை ஐந்தரை மணிக்கு.

எனக்கு ஒன்றும் ஆகவில்லை.

வண்ணங்களின் அலைகளும் குரல்களின் அலைகளும் புரள்கின்றன: அறியாதவர்களின் ஆயிரம் முகங்கள். அந்தக் கூட்டத்தில் ஒன்பது வருடங்களுக்கு முன்னால் பார்த்த இளம் பெண்ணைத் தேடும் கண்களுண்டா? மைதீட்டியது போன்ற கண்கள்? நெற்றிமீது கலைந்து விழுந்திருக்கும் முடிக்குக் கீழே மின்னும் நீலக்கண்கள்?

புத்து எங்கே? அரைக்கால் சட்டை அணிந்த அந்த வழுக்கைத்தலையன் வெள்ளையனா? புகைப்படம் எங்கே புத்து? படகுத்துறையில் ஆள்பிடிக்கும் கூட்டத்திலிருந்து 'கோராசாஹிப்'பின் புகைப்படத்தைப் பத்திரமாக வைத்திருக்கும் சிறுவனின் கண்கள் இந்தச் சந்தடிக்குள் உற்றுப் பார்க்கின்றனவா?

விமலா நடந்தாள்.

கடவுளே! எனக்கென்னமோ ஆகிவிட்டது. அழக்கூட முடியவில்லையே.

தனது காலடிகள் இடறவில்லை என்பதை அவள் நினைத்தாள். துக்கத்தின் நீர்த்தடங்கள் மனதுக்குள் இறங்க மறுத்தன.

விடியற்காலை ஐந்தரை மணிக்கு என் அப்பா இறந்து விட்டார் . . .

மரணச் செய்திக்கு முன்னால் நீர்ச்சுழலில் அகப்பட்ட ஒரு புல்கொடிபோல ஆடித்தளர்ந்து ஆதரவற்றுப்போவதை மனதுக்குள் பார்த்திருந்தாள்.

ஒன்றும் ஆகிவிடவில்லை. மனதுக்குள் கனத்த மௌனம் மட்டும்.

'கோல்டன் நூக்' எல்லையில் வெட்டிச் சீராக்கிய முட்செடிகளுக்குப்

பின்னால் நிற்கும் சர்தார்ஜியின் கண்கள் மின்னின.

"விருந்தாளி யாரு டீச்சர்ஜி?"

அவளுக்குப் புரியவில்லை.

"சௌக்கிதார் டிரங்க் கால் வந்ததாகச் சொன்னார். யாரு விருந்தாளி?"

மரணம். மரணமே என் விருந்தாளி. உரக்க அலறத் தோன்றியது.

அவளுடைய மௌனத்தைக் கவனித்துக் கண்களின் குறும்புச் சிரிப்பைத் துடைத்து நீக்கினார். மெல்லிய அதிர்ச்சியுடன் நிற்கும் அந்த மனிதனின் முகத்தைத் தைரியமாக ஏறிட்டாள்.

குரல் இடறாமல் இருக்க வேண்டுமென்று விரும்பினாள்.

"யாரும் வரவில்லை. போய்விட்டார். என் அப்பா."

தபால் அலுவலகத்திலிருந்து திரும்பிவரும்போது ஒவ்வொரு அடியிலும் கனத்துவந்த அமைதி முழுவதும் ஒரு நொடியில் நொறுங்கிப்போய்விடுமோ என்ற பயம் தோன்றியது. அழக் கூடாது. அழக் கூடாது. கண்களின் பின்புலத்தில் எங்கோ வேர்கள் பிடுங்கப்படுவதுபோல ஒரு வலி தோன்றியது.

அறையை அடையத் தேவையான நிமிடங்களுக்குத்தான் எவ்வளவு தூரம்?

பதினொன்று

மரணவீடு ஆட்களால் நிறைந்திருக்குமென்றுதான் நினைத்திருந்தாள். திண்ணையில் கால்வைத்ததும் முகம் வெளிறிப்போனது. தூண் அருகே நிற்கும் நபர் ஆல்பர்ட் கோமஸ். சுருக்கமில்லாத ஸூட் அணிந்து இரண்டு பக்கங்களிலும் காதுக்கு மேல் நரையேறிய தலையை நிமிர்த்தி நின்றிருந்தார். தங்கநிற ஹோல்டரில் பொருத்திய சிகரெட்டை இழுத்துப் புகைவிடுகிறார். நடனஅரங்கைவிட்டுக் கொஞ்சம் காற்றுவாங்க வெளியே வந்துநின்று இளைப்பாறுகிற ஒருவரின் பாவனை. பரிதாபத்தை வரவழைத்து புன்னகைத்தபடி ஏதோ சொன்னதும் முகம் கருத்துவிட்டது. சகிக்க முடியாதது அந்தப் பரிதாபம்.

ஓ, துக்கத்தைப் பங்குபோட வந்திருக்கிறார்! அவருக்கு இன்று ஒரு சுபதினம்.

வரவேற்பு அறைக்குள் நுழையும்போது தலைக்குள்ளே ஈசல்கூட்டம் பறந்து அலைவதுபோல அசௌகரியம் தோன்றியது. சோபாவிலும் நாற்காலியிலுமாக நாலைந்துபேர்; ஒரு மூலையில் நகம்கடித்துக்கொண்டு பாபு.

சாப்பாட்டுஅறை மேஜைமேல் பையை வைத்தாள். சின்ன படுக்கையறைக்குள் நுழைந்ததும் முதலில் ஒன்றும் புரியவில்லை. தலைக்குள்ளே அதிகமாக சிறகடிப்பு கேட்டது.

மங்கிய வெளிச்சத்தில் கட்டிலில் அம்மா சுவரோடு சாய்ந்திருப்பதைப் பின்னர் பார்த்தாள். கூட, பெண்கள் யாரெல்லாமோ இருந்தார்கள். யாரும் அசையவில்லை. வெளிறிய புன்னகைகளை எங்கெல்லாமோ பார்த்தாள், குளிர்ந்துநின்ற சூழல் மாறியது. தங்கை அழுதுகொண்டே வந்து கட்டிக்கொண்டாள். கண்ணீரால் நனைந்த அவள் முகம் தோளில் சாய்ந்தபோது முதுகைத் தடவி அமைதியாகச் சொன்னாள்: அழக் கூடாதும்மா, அழக் கூடாது.

பெண்களில் சிலர் பேசினார்கள். தன்னிடம்தான். பதில் சொல்ல வார்த்தைகள் வரவில்லை.

பாபுவின் தோளில் கைவைத்து நடந்துவந்த யாரோ வெளியிலிருந்து கூப்பிட்டார்கள்:

“விமலா வா!”

மலையாளத்தில்தான். கேட்டதும் பெரும் நிம்மதி தோன்றியது.

மேனோன்ஸாப்.

“ஊருக்குத் தகவல் சொல்லணுமா?”

“தெரியாது.”

“சொல்லி எதுக்கு? அஞ்சு நாளாகும் ஆள்வந்து சேர, காத்திருக்க முடியாதே.”

மிஸ்டர் கோமஸ் அதற்கிடையில் வந்துவிட்டார்.

“என்ன மேனோன்ஸாப்?”

அவர் அதைக் கேட்டதுபோல் காட்டிக்கொள்ளவில்லை. மிஸஸ் மேனோனுக்குத் தெரியும் அம்மாவின் மாலைஉலா ரகசியம். மேனோன்ஸாபின் காதையும் அது எட்டியிருக்கும்.

“இனி யாருக்காவது காத்திருக்கணுமா விமலா?”, யாரைக் காத்திருக்க?

இறுதிச்சடங்குகள் முடிந்து கடைசியில் திரும்பிப்போனது மிஸ்டர் கோமஸ்.

அம்மாவிடம் விடைபெற அவர் அறைக்குள் நுழைந்தபோது அவள் வெளியே சென்றாள். ஆறுதல் சொல்லட்டும், சௌகரியமாக ஆறுதல் சொல்லட்டும்.

வெளிவராந்தாவில் சமையலறையிலிருந்து வரும் கழிவுநீர் ஓடும் ஓடையைப் பார்த்தபடி நிற்கும்போது அனிதா பின்னால் வந்தாள்; சங்கிலியால் தூணோடு கட்டிப்போட்டிருந்த ஷாடோ உடலை நீட்டிக் காலடியை நுகர முயன்றது.

“மிஸ் விமலா! போகிறேன்.”

கோமஸின் குரல்.

அவள் தலையை மட்டுமே தாழ்த்தினாள்.

அனிதாவின் கலங்கிய கண்கள் தன்னுடைய முகத்தில் பதிவது தெரிகிறது.

உருளைக்கிழங்கு ஆய்வகக் கட்டடங்கள், சிதறிக்கிடக்கும் மலைகள். அப்பா வேலைபார்த்த அறையைக் கொண்ட கட்டடம்தான் எல்லாவற்றையும்விட உயரமாகத் தெரிவது. சிவப்பு மேற்கூரைகளுக்குக் கீழே அந்த சாம்ராஜ்யத்தைத்தான் வருடக்கணக்காக அப்பா ஆட்சிசெய்தார்.

இரவு நெருங்க நெருங்க துக்கம் அதிகரித்துக்கொண்டே வந்தது:

அப்பாவின் படுக்கையறைக்குள் அன்று யாரும் நுழையவில்லை.

இரவுச் சாப்பாட்டை மேஜைமேல் வைத்துவிட்டு பீர்பகதூர் வந்து அழைத்தார்.

யாரும் சாப்பிடவில்லை.

சின்ன படுக்கையறையில் எல்லாரும் ஒன்றாகப் படுத்தார்கள். விளக்கை அணைக்கவில்லை.

தங்கையின் கை அவளைச் சுற்றியிருந்தது. துக்கத்தைவிடப் பயம்தான் அவளுக்கு இருந்தது எனத் தோன்றியது.

தூக்கம் கண்ணாமூச்சி ஆடுகிற ஒரு இருண்ட இரவை எண்ணிப் பயந்தவாறு விமலா படுத்திருந்தாள். எதிர்பார்த்தது போல் இல்லாமல் சீக்கிரமாகத் தூங்கினாள்.

பனிவிழுந்து எல்லாம் காணாமல் போகின்றன.

அலைகள், சிற்றலைகள் ஓடுகின்றன. ஒழுகியோடுகின்றன, ஓடவில்லை; முகப்பில் அன்னம் சிறகுவிரித்து நிற்கும் படகில் பயணம் செய்கின்றனர்.

முதலில் புத்துதான் படகை ஓட்டினான். புத்து பேசத் தொடங்கியபோது அது புத்துவல்ல. சவரம்செய்த இளம்பச்சை நிறத்தின் நிழல் விழுந்த முகம் புத்துவுடையது அல்ல. நீல நரம்புகள் முகத்தில் துடிக்கிறது. நெற்றியில் விழுந்து கிடக்கும் முடி.

"வேண்டாம். அந்தப் பக்கமாகத் துடுப்புப் போட வேண்டாம்"

"ம்?"

"சதுப்பு. சதுப்பில் காசுபோட வேண்டும்."

"காசுக்கு அதைவிட நல்ல உபயோகமுண்டு."

“அங்கே கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் படகு மூழ்கிச் சாவார்களென்று கேட்டிருக்கிறேன்.”

“சாவதற்குப் பயமா?”

பார்க்குமிடமெல்லாம் மலர்ந்து விரிந்து நிற்கிறது வாழ்க்கை. மரணத்தைப் பற்றி நினைக்க முடியவில்லை புத்து.

அலை அடுக்குகள் வட்டமிடும் ஆழத்தின் மேல்பரப்பில் படகு சுழலும்போதும் புத்துவின் கண்களில் பயமில்லை. புத்துவின் முகம் மறுபடியும் மாறுகிறது. புத்துவல்ல. நீலநரம்புகள் துடிக்கும் முகம்.

வட்டமடிக்கும் படகின் விளிம்பு ஆகாயத்தை முட்டுகிறது. திடீரென கீழே . . . கீழே . . .

இப்போது . . . இப்போது . . .

“அம்மா!”

“விமலா!”

“அம்மா, கூப்பிட்டீங்களா!”

“என்னாச்சும்மா?”

“ஒண்ணுமில்ல.”

கண்கள் சட்டென்று ஈரமாயின. அம்மாவை அணைத்துக்கொள்ளத் தோன்றியது.

மீண்டும் கண்மூடிக் கிடந்தாள். தூக்கத்தில் பாபு பற்களைக் கடிக்கிறான்; தெளிவில்லாத ஓசைகளில் புலம்புகிறான்.

அனிதாவின் கைப்பிடி இறுகியது.

முற்றத்தின் ஓரத்தில் நின்றபோது முதல் பேருந்து கிளம்புவதைக் கண்டாள். கீழே நாலைந்து கடைகளுள்ள சந்தையின் முன்பக்கம்தான் பேருந்துகள் வந்து நிற்கும்.

அடுத்த பேருந்து எட்டரை மணிக்கு.

பையை எடுத்துக்கொண்டு கிளம்பும்போது அம்மா கேட்டாள்:

“என்ன நெனச்சுக்கிட்டு இருக்கிற?”

“நான் போறேன்.”

“அக்கா இப்பவாவது கொஞ்சநாள் இங்கே தங்கக் கூடாதா?”

பாபுவின் குரலில் ஆத்திரம் இருந்தது.

அவள் எதுவும் பேசவில்லை.

சமையலறையைவிட்டு வெளியே வந்த பீர்பகதூர் பையை எடுத்துக்கொண்டு முன்னால் நடந்தார். அவள் அனிதாவின் தோளில் மெதுவாகத் தட்டிவிட்டு வெளியே இறங்கினாள்.

பேருந்து நகர்ந்ததும் மனதில் குளிர்ச்சி தோன்றியது. என்னுடைய உலகத்துக்குத் திரும்பப்போகிறேன்.

என்னுடைய உலகம். மலைகளையும் பனியையும் குளிரையும் ஏரியையும் தேடி வறண்ட பூமிகளிலிருந்து வந்துசேரும் பயணிகளின் காலோசையைக் கேட்கலாம்; என் கல்லறையைச் சுற்றியும்.

பன்னிரண்டு

தெருவிளக்குகள் பொருத்திய இரும்புத் தூண்கள் பச்சைநிறத்தில் ஒளிர்கின்றன. நடைபாதைகளில் இடைவெளிவிட்டு கருப்பு வெள்ளையில் அகன்ற பட்டைக் கோடுகள்.

ஏரி அருகே நின்றால் உயரமான மலைப்பாதை வழி சீனாபீக்குக்குப் போய்க்கொண்டிருக்கும் பயணிகளின் குதிரைக்குளம்படி ஓசைகளைத் தொடர்ந்து கேட்கலாம்.

குளிரான மாதங்களில் ஆளில்லாத நிச்சலனத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கும் மேற்குப் படித்துறை அருகே யாரோ தூண்டிலிடுகிறார்கள். பாதையில் அடர் வண்ண ரோம உடைகள் அணிந்த இணைகள் கைகோர்த்து நடந்துபோகிறார்கள். புகையிலை வாசனையும் வெடிச்சிரிப்பும் காற்றில் கூத்தாடுகின்றன.

பாதைக்கும் ஏரிக்கும் இடையே புல்படர்ந்த திட்டில் விமலா வாத்துக்கூட்டங்களைப் பார்த்துக்கொண்டு நின்றாள். கடந்துபோன படகின் பயணிகளில் ஒருவர் வீசிய கடலைகளுக்காக அவை சண்டையிடுகின்றன. கரையருகே கடந்துபோன ஒரு படகிலிருந்து யாரோ உரக்க அழைத்தார்கள்:

"நமஸ்தே மேம்சாப்!"

புத்து. புத்துவின் மஞ்சள் பற்கள் மின்னுகின்றன. காதில் பெரிய வளையம் அணிந்த பெண்ணும் இளைஞர்கள் இருவரும் அவனுடைய பயணிகள்.

அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

"சீஸன் ஆயா மேம்சாப்"

'மேஃப்ளவர்' போன வழி ஒரு வால்நட்சத்திரம்போல நீண்டுகிடக்கிறது.

கழுத்தில் காமராவைத் தொங்கவிட்டு கால்சட்டைப் பைகளில் கைநுழைத்து விசிலடித்துக்கொண்டு ஒரு கருத்த வழுக்கைத்தலையன் சற்றுத் தள்ளிவந்து நின்றான். அவன் பார்வை தூண்டில்முனைபோல உடலில் தைக்கிறது.

அவள் திரும்பிநடந்தாள்.

பாதையைக் குறுக்காகக் கடந்தாள். புற்பரப்பின் இரண்டு முழுவட்டங்களைச் சுற்றி நடந்து கருங்கல் பதித்த ஒற்றையடிப் பாதைக்கு வந்து சேர்ந்தாள். மேல்நோக்கி நடந்தாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் இந்த வழியே போகிறாள். நகரம் பயணிகளால் நிரம்பும்போது இந்தப் பாதையும் பாறைப் பிரதேசமும் காலியாகக் கிடக்கும்.

மனிதர்களின் ஆர்வம் எத்தனை விரைவில் மறைந்துபோகிறது? முன்பு இந்தப் பாதையில் அலகுகளால் கொஞ்சிக்கொள்ளும் ஜோடிக்குருவிகள் நடந்துபோயிருந்தார்கள்.

மலையின் ஒரு அடுக்கிலிருந்து மற்றொரு அடுக்குக்குத் திரும்புமிடத்தில் வந்துசேர்ந்ததும் நின்றாள். மேல்நோக்கி ஏறியதால் மூச்சுவாங்கியது. அங்கேதான் கோயில் இருந்தது. சுற்றிலும் ஆக்கிரமித்து வளர்ந்திருந்த புதர்க்காடுகளுக்கிடையில் கோயிலின் பாதி மறைந்துபோயிருந்தது. இரும்புக்கம்பியில் தொங்கவிட்ட நாக்கில்லாத வெண்கலமணிக்குக் கீழிருந்து வயதான பூசாரி ஹூக்கா புகைக்கிறார். முன்பு கடந்துபோனவர்கள் எல்லாம் கடவுளுக்குப் பணம் கொடுத்தார்கள். பாறைமுனையிலிருந்து குதித்து இறந்துபோன பெண்ணைப் பூசாரி தினமும் சபித்துக்கொண்டிருக்கலாம். கோயில் தூங்குகிறது. கடவுள் தூங்குகிறார்.

பின்னாலிருந்து யாரோ உரக்க மூச்சிரைப்பதைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தாள்.

சர்தார்ஜி நெஞ்சைப்பிடித்துக்கொண்டு மூச்சுவாங்குகிறார். வறண்டமுகம் உறைந்த ரத்தம்போலச் சிவந்திருந்தது.

"ப . . . ழை . . . ய . . . குதிரையின் காலம் முடிந்துபோயிற்று."

சிரிப்பும் இரைப்பும் கலந்த குரலில் அவர் கேட்டார்:

"மேலே போகிறீர்களா டீச்சர்ஜி?"

"ம்."

"நானும் வருகிறேன். கொஞ்சம் மூச்சு சரியாகட்டும்."

நினைவுகள் உறங்கிக்கிடக்கும் இந்தத் தனிமையின் நடை பாதையில் யாரும் துணைவருவது விருப்பமில்லாதது.

ஆனாலும் ஒன்றும் சொல்லவில்லை.

அவள் நடந்தபோது அவரும் தொடர்ந்தார்.

புதர்களுக்கிடையில் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த ஒரு மரத்தைச் சுட்டிக்காட்டிக் கேட்டார்:

"அந்த மரத்தைப் பார்த்தீர்களா டீச்சர்ஜி?"

"முன்பு அதன் அடியில் எவ்வளவு பூக்கள் விழுந்துகிடக்கும்? அதன்கீழுள்ள பொந்தில் வருஷத்துக்கு ஒரு தடவை கடவுளின் கழுத்தில் இருக்கும் சர்ப்பம் தரிசனம் தரும் என்று கதை. கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

அவள் இல்லையென்று தலையாட்டினாள்.

"கடவுளே தேவைப்படாதபோது சர்ப்பத்துக்கு எங்கே இடம்? ம் . . ."

பாறைக்கு அருகே போவதுவரை பின்னர் அவர் பேசவில்லை. மூச்சிரைப்போடு முக்கியும் முனகியும் மேல்நோக்கி ஏறிக்கொண்டிருக்கும் அவருடைய கண்கள் சுற்றிலும் மேய்வதைக் கவனித்தாள். மேலே போய்ச் சேர்ந்ததும் அவர் நன்றாக வியர்வையில் மூழ்கியிருந்தார்.

"மன்னிக்க வேண்டும் டீச்சர்ஜி. நான் கொஞ்சம் உட்கார்ந்து கொள்கிறேன்."

அவர் ஓரிடத்தில் உட்கார்ந்தார். அவள் அடிவாரத்தைப் பார்த்தாள். சுகமான காற்றில் வட்டமாக முடிந்துவைத்த கூந்தல் அவிழ்ந்து கலைந்து காற்றில் பறக்கத் தொடங்கியது.

"உட்காருங்க டீச்சர்ஜி."

அருகிலும் இல்லாமல் தூரத்திலும் இல்லாமலான நிலையில் ஒரு உயர்ந்த கல்லில் கால்களைத் தொங்கவிட்டு உட்கார்ந்தாள். பின்னால் கரும்பாறைக்கூட்டம் சிதிலமான கோபுரம்போல ஆகாயம் தொட்டு உயர்ந்து நிற்கிறது.

"அப்பாவுக்கு என்ன வயசு டீச்சர்ஜி?"

"ஐம்பத்தெட்டு."

அவர் மெல்ல முனகினார்.

"ம் . . . வருத்தம் தெரிவிக்கப்போவதில்லை. யார் யாருக்கு வருத்தம் தெரிவிக்க?"

அடிவாரத்து மரக்குடில்களின் அடர்நீலத்தில் பதிந்த கண்களைத் திருப்பி அந்த மனிதரைப் பார்த்தாள். நரையேறிய முரட்டுத் தாடியைத் தடவிக்கொண்டு புன்னகைக்கும் அவர் கண்கள் தன் மனதின் உள்ளறைகளுக்குள் அலைவதாகத் தோன்றியது.

"மரணம் மேடைப் பிரக்ஞை இல்லாத ஒரு கோமாளி, இல்லையா டீச்சர்ஜி?"

அவள் வேதனையுடன் புன்னகைத்தாள்.

"நான் யோசித்துப் பார்த்ததில்லை."

"உண்மை. வேண்டுமானால் எழுதிவைத்துக்கொள்ளுங்கள். அறியப்படாத சிந்தனையாளனின் பொன்மொழி என்று தேவைப்படும்போது மேற்கோள் காட்டுங்கள்"

பிறகு தன்னையே ரசித்துக்கொண்டு வெடித்துச் சிரித்தார்.

ஏற்ற இறக்கமான பாறைக்கூட்டங்களுக்கு முன்னால் நடந்துகொண்டு யாரிடமோ சொல்வதுபோலச் சொன்னார்.

"பெயர்கள் பலவும் அழிந்துபோயிருக்கிறது . . .", கருங் கல்லில் பொறித்த எழுத்துகளைத் தடவிக்கொண்டு அவர் முணுமுணுத்தார்: "முன்பு பெயர் பொறித்துவைக்காதது எவ்வளவு நல்லது!"

அவளுக்கு ஆர்வம் தோன்றியது. என்ன? அவள் கண்களை உயர்த்தினாள்.

"இப்போது அதைப் பார்த்து பெருமூச்சுவிடாமல் இருக்க முடிகிறது இல்லையா? டீச்சர்ஜி கோபப்படவில்லை என்றால் எங்கே உங்களுடைய முதல் வருகையின் நினைவுச்சின்னம்?"

அவள் பதில் சொல்லவில்லை . . . தரையில் பார்வை பதித்து உட்கார்ந்தாள்.

விஷயத்தை மாற்றுவதுபோலச் சொன்னார்: "மனிதர்கள் தற்கொலைக்குத் தோதான இடங்களை ஏன் காதலுக்கான இடங்களாகவும் தேர்ந்தெடுக்கிறார்கள்? வாழ்க்கையின் மலர்ச்சியைப் பார்க்குமிடத்திலேயே வீழ்ச்சியும் இருக்கட்டும் என்பதனாலா? மதரிஹட்டுக்குப் போயிருக்கிறீர்களா? அஸ்ஸாமுக்கு? அங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் அப்படியே இதேபோல ஒரு பாறை இருக்கிறது. எத்தனை ஜோடிகள்

எழுத்துகளும் அம்பு தைத்த இதயங்களும் வரைந்து வைத்திருக்கிறார்கள் தெரியுமா?"

அவள் கவனிப்பதாகத் தலையாட்டினாள். பேச்சில் அவருக்கு ஆனந்தம் இருப்பதாகத் தோன்றியது.

"அதற்குப் பக்கத்தில் அருமையான வனத்துறை மாளிகை இருக்கிறது. அங்கே படுத்தால் இரவில் காட்டின் சங்கீதம் கேட்கலாம். ஆமாம், காட்டுக்குச் சங்கீதமுண்டு. மழைக்கும் காற்றுக்கும் மொழியும் சங்கீதமும் உண்டு."

அவர் இரைத்துக்கொண்டே நெஞ்சில் இடதுகையின் மெலிந்த விரல்களை அழுத்தி, குரலைக் கொஞ்சம் தாழ்த்திச் சொன்னார்: "இன்னும் ஒருமுறை போக வேண்டுமென ஆசை. பாதுகாவலர் சம்மதிப்பாரோ என்னவோ?"

"நல்லது."

"சென்று பார்த்த இடங்களிலெல்லாம் மீண்டும் நடந்து பார்க்கிறேன், தலைமை அலுவலகக் கணக்காளர் வருடாந்திரக் கணக்கெடுப்பு நடத்துவதுபோல."

அவர் சிரிக்கும்போது வருடங்கள் அவரிடமிருந்து உதிர்ந்து விழுவதுபோலத் தோன்றியது. ஒரு சிறு குழந்தையின் உற்சாகம் அவருடையது.

"எத்தனை வருடங்களாக இங்கே இருக்கிறீர்கள் டீச்சர்ஜி?"

"ஒன்பது வருடங்கள்."

"ம். முதலில் இந்தப் பாறை ஏற வந்தபோது தனியாக வரவில்லை இல்லையா?"

அவள் பதில் சொல்லவில்லை.

"நானும் தனியாக வரவில்லை. ஆனால் அது பலப்பல வருடங்களுக்கு முன்பு."

அவர் தலைகுனிந்து கண்மூடி இருந்தார்.

"அப்போது எனக்கு இருபத்துமூன்று வயது. ஒரு ஆணின் வாழ்க்கையில் மிக நல்ல காலம் எது தெரியுமா? தெரிந்து கொள்ளுங்கள் இருபத்துமூன்று!"

அதற்கு அவரிடம் ஒரு விளக்கமும் இருந்தது. இருபத்தைந்து ஒரு

திருப்புமுனை. பக்குவமடைந்த ஒரு இளைஞனாகிவிட்டோம் என்று தனக்குள்ளேயே தோன்றும். இருபத்துநான்கில், நெருங்கிவிட்ட திருப்புமுனையை கண்முன் பார்க்கலாம். பதினெட்டுக்கும் இருபத்தியிரண்டுக்கும் இடையில் இளமையின் அம்சங்கள் பலவும் மிச்சம் இருக்கும். இருபத்து மூன்று!

"உங்கள் வம்சத்தில் பதினேழுக்குச் சிறப்பைக் கொடுத்த மேதை நம்முடைய விஷயத்தை மறந்துவிட்டார்."

நிமிடங்கள் மீண்டும் மௌனத்தின் நீர்ச்சதுப்புக்குள் அமிழ்ந்துபோயின.

"ஏன் டீச்சர்ஜி ஒன்றும் சொல்லவில்லை?"

"என்ன சொல்ல?"

"என்னவாவது. முன்பு நானும் இப்படித்தான். என்னோடு மட்டுமே நான் அதிகம் பேசியிருக்கிறேன். இப்போது என்னால் எதனோடும் பேச முடியும். பாறைகளோடு மரங்களோடு விளக்குக்கம்பங்களோடு . . . பேச முடிவது ஒரு வரம் டீச்சர்ஜி. சரிதானே?"

"சரியாக இருக்கலாம்."

மலைச்சரிவில் நிழல்கள் நீண்டன. பாறைக்கடியில் ஆழத்தை நோக்கி மூடுபனி இளம்நீலப் போர்வைபோல மிதந்து விழுந்தது.

"நான் கொஞ்சம் மேலே ஏறிப் பார்க்கிறேன்."

அவளுக்குத் தடுக்கத் தோன்றியது. பலவீனமான இந்த மனிதர் அதன் நெற்றியில் ஏறிப் பார்ப்பது சாகசம்தான். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.

மிகவும் சிரமப்பட்டுத்தான் அவர் ஏறுகிறார். துளைகள் விழுந்த இலைகளினூடே காற்றுசெல்வது போன்ற சத்தத்துடன் மூச்சுவிடுவது கேட்கிறது. முகத்தில் ரத்தம் ஏறுவதும் நெற்றியில் இந்தக் குளிரிலும் வியர்வை திரள்வதையும் பார்க்க முடிகிறது.

கூரிய மேற்பகுதியில் நின்றுகொண்டு அவர் கீழே பார்க்கிறார். காற்றில் அவரது கனத்த கால்சட்டைகள் 'படபட' வென அடித்துக்கொண்டன. தான் பார்க்கும்போதே ஒரு பஞ்சுத்துண்டுபோல அவர் பறந்துபோய்விடுவாரோ என்று பயம் தோன்றியது.

"டீச்சர்ஜி!", காற்றின் முணுமுணுப்பை வெல்வதற்காக உரக்கவே கூப்பிட்டுக் கேட்டார்:

"டீச்சர்ஜி, மரணத்தின் முகத்தைப் பார்த்திருக்கிறீர்களா? பாருங்கள்."

மங்கிய வெளிச்சத்தில் சிரித்துக்கொண்டு ஒரு கையை உயர்த்திக்கொண்டு நிற்கும் அந்த மனிதனை அவள் பயத்தோடு பார்த்தாள். அவரது காலடிகளைச் சுற்றி வாய்பிளந்து நிற்கிறது மரணம்.

இறங்கி வாருங்கள் என்று அலறி அழைக்கத் தோன்றியது. தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டாள்.

ஏறுவதற்கு அனுபவித்ததைவிட அதிகம் சிரமப்பட்டுக் கீழே இறங்கி வந்தார்.

திரும்பும்போது அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. அவள் அவருக்குப் பின்னால் இரண்டடி தூரத்தில் மெதுவாக நடந்தாள். அவர் உல்லாசமாக ஒரு பஞ்சாபிக் காதல் பாடலின் வரியைத் திரும்பத் திரும்ப முனகிக்கொண்டிருந்தார்.

'கோல்டன் நூக்'கின் வாசலை அடைந்ததும் அவர் நின்றார்; அவளும்.

"நன்றி!"

"எதற்கு?"

"நல்ல ஒரு மாலைப்பொழுது கிடைக்கச்செய்ததற்கு டீச்சர்ஜிக்கு நன்றி. கடவுளுக்கும் உலகத்துக்கும் நன்றி."

நல்ல ஒரு மாலைப்பொழுது? இந்த சர்தார்ஜி தன்னைக் கேலி செய்கிறாரா?

"நாளை மாலை என்ன வேலை டீச்சர்ஜி?"

"ஒன்றும் முடிவுசெய்யவில்லை."

"ஒரு மாலையை நான் கடன் வாங்கிக்கொள்ளட்டுமா? இன்று தானாகக் கிடைத்ததுதானே? நாம் ஒரு படகு சவாரி போகலாம்."

அறிமுகமில்லாத அந்த மனிதர் கூடுதல் உரிமை எடுத்துக்கொள்வதை உணர்ந்தாள். விலகி விலகி நகரப் பார்க்கும்போதும் அவர் நெருங்கிவர முயல்கிறார்.

"எல்லா மாலைநேரங்களையும் நான் கேட்கவில்லை டீச்சர்ஜி, நாளை மட்டும்."

"பார்க்கலாம்."

"நான் விடுதிவாசலுக்கு வந்து கூப்பிடுகிறேன்."

சரியென்றோ வேண்டாமென்றோ சொல்லாமல் அவள் கம்பிவேலியைப் பார்த்து நடந்தாள்.

"ஒரு நிமிடம் ப்ளீஸ்!"

நடையை மெதுவாக்கினாள்.

"இறந்துபோனவர்களை நினைத்துத் தூங்காமல் இருக்கக் கூடாது. பூமியில் ஏராளமானவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் இல்லையா?"

போர்ட்டிகோ டியூப்லைட்டைச் சரிசெய்துகொண்டிருந்தார் அமர்சிங்.

"ரொம்ப நேரமாகிவிட்டதே பீபிஜி."

"ம்."

"சாயங்கால நேரத்தில் மலைப்பாதையில் தனியே நடக்கக் கூடாது, பீபிஜி."

பல்லிளித்து சீழ்க்கையும் அடித்த பிறகு டியூப்லைட் எரியத் தொடங்கியது.

"சாயங்காலமோ நடுராத்திரியோ எப்போ வேணும்னாலும் ஏரியைச் சுற்றி நடந்துக்கோங்க, பயப்படறதுக்கில்ல. நைனி தேவியின் பார்வைபடுற இடமில்லையா."

"மலையில்?"

கேலியாகக் கேட்டாள்.

"விளையாட்டில்ல பீபிஜி, சந்தன்சிங் பத்தி கேள்விப்பட்டிருக்கீங்களா?"

விமலா ஆர்வம் காட்டவில்லை. அமர்சிங் ஒரு வரலாறைத் திறந்துகாட்டத் தொடங்கினார்.

"பெரிய போக்கிரி. இடுப்பில் ரெண்டு வாளிருக்கும். ம் . . .

பத்து நாற்பது வருஷமிருக்கும். டாக் பங்களாவுக்கு அந்தப் பக்க மைதானத்துல ராமலீலா நடக்கிற சமயம், நம்ம ஆளு போதையில வரும்போது மாளிகை வாசல்ல ஒரு புர்கா போட்ட பொண்ணு உட்கார்ந்து

இருக்கிறா: ‘கோன் ஹே?’. சந்தன்சிங் பேரக்கேட்டா ஊரே நடுங்கும். பொண்ணு பேசவேயில்ல. பக்கத்துல போய் புர்காவ விலக்கினா பல்லு இப்படி, கண்ணு இவ்ளோ!”

அமர்சிங் நடித்துக் காண்பித்தார்.

“நாக்கு ஒரு கஜ நீளம். ஒரு அலறல். மூணாவது நாள் ஆசாமி செத்துட்டார்.”

புலியுடன் போரிட்ட அவருடைய தாத்தாவின் மரணம் பற்றியும் இதே கதையைத்தான் சொன்னார் என்பதை அமர்சிங் மறந்துபோயிருந்தார்.

அறையில் சர்தார்ஜிக்குக் கொடுத்திருந்த புத்தகங்கள் திரும்பிவந்திருந்தன. மேலே ஆங்கிலத்தில் ஒரு குறிப்பும்:

“நன்றி. சாத்தானையும் தேவதையையும் மட்டுமே இவற்றில் பார்த்தேன், மனிதனின் கதைகள் ஏதாவது உங்கள் சேகரிப்பில் உண்டா?”

அந்த மனிதனின் உருவத்தோடு சற்றும் பொருந்தாத அழகான கையெழுத்து.

அவர் ஒரு விந்தைப்பிறவி.

கொஞ்சநேரம் கூட இருந்தார். பல விஷயங்கள் பேசினார். ஆனால் அறிமுகத்தின் எல்லைகள் இப்போதும் மீதமிருக்கிறது. அவரைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை, கேட்கவுமில்லை.

“மரணம் மேடை பிரக்ஞை இல்லாத ஒரு கோமாளி.”

– அறியப்படாத ஆத்மா

மரணம்: வெள்ளைத்துணியால் மூடிய உடல். எலும்புகள் துருத்திய வெளிறிய முகம். மூடிய கண்கள்.

மலைப்பாதையின் தொடர்ச்சியான குளம்படியோசைகள் தனித்தும் தேய்ந்தும் அமைதியாயின. நடுமுற்றத்திலுள்ள உயரமான விளக்குக்கம்பத்தைச் சுற்றி ஒரு காட்டுப்பறவை சிறகடித்துப் பறந்து ஊளையிட்டுக்கொண்டு இரவின் நிழல்களுக்குள் புகுந்தது.

படுக்கையில் கண்மூடி படுத்துப் பிரார்த்திக்க முயன்றாள். சுவர்களின் இறந்த இதயம்வழியாக இக்தாராவின் மென்துடிப்புகள் மிதந்துவருகின்றன.

பதின்மூன்று

மாலையில் தன்னுடன் நடக்க ஒருவர் அழைத்திருக்கிறார். காலையில் முதலில் மனதில் தோன்றியது அந்த எண்ணம்தான். எங்கிருந்தோ வந்த ஒருவர். வயதை மீறிய முதுமையும் அவலட்சணமுமான ஒருவர்.

மாலைப்பொழுதுகள் நெருங்கிவரும் நேரத்துக்காகக் காத்திருந்து தன்னை அலங்கரித்துக்கொண்ட நாட்கள் இருந்தன. கடந்துசெல்லும் பெண்களை இளப்பமாகப் பார்த்து அகங்கரித்த நாட்கள்.

நரைத்த தாடியைக் கோதியபடி போர்ட்டிகோவுக்குக் கீழே இன்று மாலை சர்தார்ஜி வருவார். அவமானமோ சந்தோஷமோ தோன்றவில்லை.

மாலையானதும், "பீபிஜி, சர்தார்ஜி தேடுகிறார்" என்று சொல்லிக்கொண்டு அமர்சிங் வரவில்லை. அப்போது காத்திருப்பு என்ற உணர்வுக்கு வலிமை கூடியது. நிமிடங்கள் பதற்றத்தின் பிடியில் அகப்பட்டு நடுங்குகின்றனவா?

அப்போது வராந்தாவில் காலடிச்சத்தம் கேட்டது. அமர்சிங்தான். "பீபிஜி, ஒரு கடிதம். சர்தார்ஜி குடுத்தார்."

வாசித்தாள்; மன்னிக்க வேண்டும் பாதுகாவலரான நண்பர் ஓய்வெடுக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார். கீழ்ப்படியாமல் முடியாதே. நஷ்டம் எனக்குத்தான்.

பெயரில்லை. அடியில் என்ன எழுத்து என்று வேறுபடுத்திப் பார்க்க முடியாத ஒரு கிறுக்கல் மட்டும்.

வருத்தமில்லை. ஆனால் வெற்றுப் பிடிவாதம் தோன்றியது. இன்று ஏரிக்கரையில் ஒரு சுற்றுலாப் பயணியின் உற்சாகத்தை அனுபவித்துக்கொண்டு சுற்றித்திரிய வேண்டும். படகு சவாரிக்குச் செல்ல வேண்டும்.

படகுத்தளத்தில் நாலைந்து தோணிகள் மணலில் ஏறிப் படுத்து இளைப்பாறிக்கொண்டிருக்கின்றன. வழக்கமான படகோட்டிகள் யாரையும் காணவில்லை. புத்து வரட்டும். தன்னால் புத்துவுக்கு ஆறு அணா வருமானம் கிடைக்கட்டும்.

"மேம்சாப் . . . ஆயியே, மேம்சாப்."

வேண்டாமென்று தலையாட்டினாள். தான் ஏரியைப் பார்த்து ரசிக்கும் ஒரு சாதாரண பயணி என்ற பாவனையில் வெறுமனே வந்தாள். மண்டபத்திலும் மணல் பரப்பிய மைதானத்திலும் ஏராளமானவர்கள் இருந்தார்கள். திரையரங்கில் இருந்து இசை வெளியே மிதந்துவந்தது. பூனை கத்தவும் நாய்கள் ஊளையிடவும் செய்யும் சினிமாப் பாடல்.

"ஃபோட்டோ கார்ட்ஸ். பத்து ஃபோட்டோஸ் ரெண்டுரூபா!"

ஒரு விற்பனையாளன் அருகில் வந்தான். முகத்தைப் பார்த்தபிறகு மேலும் கவனிக்காமல் திரும்பிப்போனான்.

சீஸனைக் கொண்டாடவந்த பயணியல்ல தானென்று ஊகித்திருப்பான்.

எப்படி? நரையேறிய முடியில், வாஸ்லின் புரட்டிய கருத்துப்போன உதட்டில் கருநிழல்கள் விழுந்த கண்களின் அடியில் கீழே எழுதிவைக்கப்பட்டிருக்கிறதா? இதோ மலைகளின் கல்லறைக்குள் வருடக்கணக்காக அடைத்துவைக்கப்பட்ட ஒரு கைதி!

கீழே கரை அடைந்த படகிலிருந்து உரத்த குரல் கேட்டது.

"ஆயியே, மேம்சாப், ஆயியே!"

இடுங்கிய கண்களில் புன்னகை நிறைத்து மஞ்சள்சிரிப்புடன் புத்து அழைக்கிறான்.

படகில் ஏறி உட்கார்ந்ததும் நைனி தேவியின் வெண்கல மணிகள் கூட்டமாக ஒலித்தன.

'மேஃப்ளவர்' மீண்டும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அன்னப்பறவையின் அலகுக்கும் சிறகுக்கும் வண்ணம் பூசப்பட்டிருக்கிறது.

"சீஸன் எப்படி மேம்சாப்?"

"நன்றாக இருக்கிறது!"

"இந்தத் தடவை ஆட்கள் ஜாஸ்தி, இல்லையா?"

"ம்."

"லேக் ஹோட்டல்லே நெறைய வெள்ளைக்காரங்க இருக்காங்க."

விமலா ஒன்றும் சொல்லவில்லை.

"மேம்சாப்போட ஊர் இதுதானா?"

"இல்லை"

"ரொம்ப தூரமா?"

"ம்."

"மதராஸ் . . ."

தான் மேம்சாப்பைத் தோற்கடித்துவிட்ட தோரணையில் சிரித்துக்கொண்டே கேட்டான்.

அவள் ஆமாம் என்ற அர்த்தத்தில் தலையாட்டினாள்.

"ஹா . . . மத்ராஸி மாஸ்டராணின்னு சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கேன்."

"ம்."

"மேம்சாப் ஊருக்குப் போகமாட்டீங்களா?"

"போவேன்."

"எப்போ?"

"எப்போதாவது."

நடுவிலிருந்து துடுப்பிட்டுக் கரைக்கருகில் ஏரியை வலம் வந்துகொண்டிருந்தான் புத்து.

அவன் சத்தமாக அசட்டுச்சிரிப்பு சிரித்துவிட்டுச் சொன்னான்:

"நெறைய வெள்ளைக்காரத் துரைக வர்றாங்க. நம்ம ஆளை மட்டும் காணோம்."

ஒருமுறை துடுப்பிட்டுவிட்டு, சட்டைக்குக் கீழே தோலுறை பத்திரப்படுத்திய பகுதியைத் தொட்டுப்பார்த்து உறுதிப்படுத்தினான்:

"இந்தத் தடவை வருவார். வராமலிருக்கமாட்டார்."

நாமெல்லோரும் காத்திருக்கிறோம் புத்து. ஒவ்வொரு வருடமும் இந்த நகரமும் காத்திருக்கிறது. இடையே, சுக்கான் விழும்போது தெறிக்கும் நீர்க்குமிழிகள்போல நாட்கள் நகர்கின்றன. காத்திருக்க உனக்கு கோராசாஹிப்பின் சாயல் இருக்கிறது. இன்னொருவருக்கு அது நீலநரம்புகள்

துடிக்கும் முகமாக இருக்கலாம்.

கம்பிகளுக்கு வண்ணம்பூசி நடைபாதைகளில் வெண்மையும் கம்பளியும் விரித்த நகரம் யாருக்காகக் காத்திருக்கிறது புத்து?

சிறுவனே நீ பிரார்த்திப்பதுண்டா? கடவுளை நம்புவதுண்டா? அடிவாரத்தில் தனியாக அமர்ந்து தவம்செய்யும் நைனி தேவியின் பெரிய வெங்கலமணிகளின் ஓசையைக் கேட்டு குனியும் தலைகளுக்கு மேலாக யாரைத் தேடுகிறாய்?

"மேம்சாப் ஏதாவது சொன்னீங்களா?"

"ஒன்றுமில்லை."

"என்ன யோசிக்கிறீங்க மேம்சாப்?"

யோசனை –

தால்ஏரியின் ஷிகாரை * யில் வாதுமைமர உருவங்கள் விற்க வந்த சிறுமி இருந்தாள். அழகி. கண்கள் வைசாலியின் ஆகாயத்தைவிட விசாலமானவை. இல்லை கவிதையில்லை. கதை சொல்கிறேன். கதைகள் ஆத்மாவில் இருந்து வெளியேறும்போது கவிதைகளாகின்றன. என்ன சொன்னேன்? சிறுமி. வருடங்களாக நான் பார்த்த கனவின் உயிர் கண்முன்னே. படகுவீட்டின் சமையல்காரன் அன்று இரவு முன்னால் கொண்டுவந்து நிறுத்திய பத்துரூபாய்க்கான தோழியைக் கண்டபோது இல்லை, இப்போது சொல்வதற்குத் தயக்கமில்லை. என் இரவுகளின் கதைகளைச் சொன்னேனல்லவா நான். இப்போது வெட்கமுறச்செய்யும் ஒரு கடந்தகாலமில்லை. என் முன்னால் நீ மட்டும்தான். உன்னுடையவையெல்லாம் எனக்குப் பிரியமானவை. உன் நறுமணம் என்னைச் சுற்றி எப்போதும் ஒளிவட்டமாக நிற்கிறது . . . என்ன சொன்னேன்? ஒரு இரவுத் தோழி. முன்னால் என் கனவின் உயிர். முன்னால் அல்ல, ரத்தம் ஒழுகும் கனவுகள் காலடியில் கிடக்கின்றன.

* மேற்கூரையுள்ள மரப்படகு

மெத்தையில் உடல்களின் சௌந்தர்யம் நொடிகளுக்குள் மறைந்துபோயிருந்தது. இனி இப்போது எல்லாவற்றையும் சொல்லலாம். நான் பத்தொன்பது வயதுக் காதலனல்ல, நீ பள்ளி மாணவியுமல்ல.

இன்னொன்று தெரியுமா? எஸ்க்யூஸ்மி இஃப் ஐ ஆம் வல்கர். நான் கல்லூரி மாணவனாக இருந்த காலம். பக்கத்துவீட்டுப் பெண்ணைக்

காதலிக்கிறேன் என்று தோன்றியது. இரவும் பகலும் அவளைப் பற்றியே யோசனை, அவள் உடல் எப்படியிருக்கும்? அவள் முகம்? அவள் முழுவதுமாக எனக்கு வேண்டும். மீண்டும் நான் தவறாகப் பேசுகிறேனா? நான் சொன்னேனே, நாம் சந்தித்த நிமிடம் முதல் நான் பரிசுத்தமானவன். அந்தப் பக்கத்துவீட்டு அழகி. பிரார்த்தனைகள் சம்மதங்கள். கடைசியில் ஒரு நிமிடத்தில் வாழ்க்கை முழுமையாகிறது . . . என்னுடையதான என் உயிரின் ஒரு துளிர் அவளிடம் உருவானால் – ஒன்றுமில்லை. உலகத்துக்கே சவால்விட்டுக்கொண்டு நான் அறிவிப்பேன்; இவள் என்னுடையவள்! பிறகு அவள் தன்னையே எனக்காகச் சமர்ப்பிக்கும்போது நான் கேட்பேன், பயமாக இருக்கிறதா? அப்போது பதில்: நான் என் டயஃப்ரம் அணிந்திருக்கிறேன்! கனவுகளின் ரத்தம் தோய்ந்த பிணங்கள்!

ஒருபோதும் நீ ஏமாற்றியதில்லை. தொலைவிலிருந்தும் நெருக்கத்திலிருந்தும் ஆடைகளோடும் அகத்துக்குள்ளும் ஆராதனையுடனேயே நான் உன்னைப் பார்க்கிறேன் . . .

"மேம்சாப்!"

ம், ஒன்றுமில்லை புத்து. உன் வெள்ளைக்காரத் தகப்பனைப் பார்க்கும் பாக்கியம் உனக்கு வாய்க்கட்டும்.

நமக்குப் பார்க்க முடிந்தால்!

காலச்சிகரத்தில் நின்று வருடங்களின், தலைமுறைகளின் திரைநீக்கிப் பார்க்க முடிந்தால் சொல்லிவிடலாம்: உன் கோராசாஹிப்பை இந்த நாள் இந்தத் தெருவில் இந்த நேரத்தில் நீ பார்ப்பாய்.

எதேச்சையாகச் சந்திக்கவில்லை, விமலாதேவி! இருபத்தொன்று வயதான விமலாதேவி, அழகி, மேலுதட்டில் மெல்லிய நீலரோமங்கள் உடையவள். இருபத்தொன்பது வயதான சுதீர்குமார் மிஸ்ரா என்ற கிறுக்குத்தனமான இளைஞனை, ஊதாரியை 1955 மே மாதம், மூன்றாம் தேதி காலை, பேருந்தில்வைத்துச் சந்திக்கிறாள். நாம் பிறப்பதற்கு முன்பே காலத்தின் பெரிய புத்தகத்தின் ஒரு பக்கத்தில் அது குறித்துவைக்கப்பட்டுள்ளது. நான் ஊர்சுற்றி அலைந்தது இந்த நிமிடத்துக்கு வந்துசேரத்தான். உன் அப்பா ஊருடனான உறவைப் பிரிந்தது அதற்காகத்தான். மிஸ்டர் கோமஸ் என்ற தந்திரன் உன் அம்மாவின் காதலன் ஆனதும் அம்மாவுடன் சண்டையிட்டு நீ வேலைதேடி இறங்கியதும் அதற்காகத்தான்.

இதொரு சாதாரண நிகழ்ச்சியல்ல விமலா தேவி, வாழ்க்கையின் முழுமை

தொடங்கும் பெரும் வினாடி!

புத்து துடுப்பிடாமல் அவளையே பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தான். ஏரியில் கொடிகள் சாய்ந்துகிடக்கும் ஒருமூலையில் 'மேஃப்ளவர்' தத்தளித்து நிற்கிறது.

"திரும்பலாம்."

அவன் மஞ்சள் பற்களைக் காட்டிச் சிரித்தான், துடுப்பைக் கையிலெடுத்தான்.

"மேம்சாப்போட மனசு வெறெங்கேயோ இருக்கு."

"நான் ஏதோ நினைத்துக்கொண்டிருந்தேன்."

"நானும்."

"நீ யாரைப் பற்றி நினைத்தாய் புத்து?"

"அம்மாவப் பத்தி."

"கோராசாஹிப் பத்தியும்."

அவன் மீண்டும் அசட்டுச்சிரிப்பு சிரித்தான்.

"வெள்ளைக்காரங்க நாட்டைவிட்டுப் போனபோது அவரும் போயிருப்பாரா மேம்சாப்?"

இந்தப் பாதைவிளக்குக்கு அந்தப் பக்கம் நம்மால் பார்க்க முடியாதே புத்து!

"ம்ஹூம் போயிருக்கமாட்டார்."

"ஏன்?"

"அவருக்கு உன் அம்மாவைப் பிடித்திருந்ததே? அதனால் இந்த இடமும் பிடித்திருக்கும். போனாலும் அவர் வருவார், திரும்பி வருவார்."

உடலில் அதிகமான சோர்வு தோன்றியது. மீண்டும் மரப் பாலம். படகுத்துறை. காலதூதர்களைப் போன்ற கூலிக்காரர்கள். ஒன்பது வருடங்களாக நடந்த பாதை. கஞ்சாவின் போதையில் லயித்து மயங்கும் சௌக்கிதார். ஆட்டா ரொட்டியும் பருப்பும். குளிர்ந்த மெத்தை.

அன்று இரவு இக்தாராவின் ஓசை கேட்கவில்லை. ஜன்னலைத் திறந்து

பார்த்தாள். ‘கோல்டன் நூக்’கில் வெளிச்சம் இருக்கிறது. இக்தாரா தூங்குகிறது. அதன் மெல்லிய ஒற்றைத் தந்தியில் தொலைதூரத்துக் காதலனுக்குத் தன்னுடைய வேதனையைச் சொல்லுமாறு காக்கையிடம் தூதுசொன்ன பஞ்சாபிப் பெண்ணின் இதயமும் தூங்குகிறது.

அவள் ஜன்னலை மூடினாள்.

நமக்குப் பார்க்க முடிந்தால் . . .

பதினான்கு

காலைத் தபாலில் ஒரு கடிதம் வந்திருந்தது. பழக்கமில்லாதவர்கள் பார்த்தால் தன்னுடைய கையெழுத்து என்றே சொல்வார்கள். தங்கையின் கையெழுத்துக்கு அத்தனை ஒற்றுமை இருந்தது. மேலோட்டமாக வாசித்தாள்.

விமலா தீதி, என்னால் இங்கே வாழ முடியாது. நானும் உன்னோடு வந்துவிடட்டுமா? பாபு அண்ணா நேற்று குடித்துவிட்டுவந்து அம்மாவோடு பெரிதாகச் சண்டைபோட்டான். பீர்பகதூரை அடிக்கப் போனான். விமலா தீதி இங்கு வரவேண்டும். இல்லையென்றால் நான் அங்கே வந்து தங்குகிறேன்.

மேஜையறையிலிருந்த கடிதக்கட்டுக்குள் அதையும் செருகிவைத்தாள்.

அனிதாவுக்கு என்ன ஆயிற்று? பிரதீப்சந்திரன் ஊரைவிட்டுப் போய்விட்டானா? இல்லை அவள் மனது பக்குவம் அடைந்துவிட்டதா?

மாலை அமர்சிங் கொஞ்சநேரத்துக்கு அனுமதி கேட்டார். மூன்று மைல் தூரத்தில் வசிக்கும் உறவினர் ஒருவர் சாகக் கிடக்கிறார். இருட்டுவதற்கு முன்பே திரும்பிவந்துவிடுவதாக ஒப்பந்தம்.

அவள் போர்ட்டிகோவுக்குக் கீழே முற்றத்தில் நின்றாள்.

'கோல்டன் நூக்'கின் முன்னாலிருந்து படிகளை நோக்கி சர்தார்ஜி நடந்து வருவதைப் பார்த்தாள். அவர் கீழிறங்கிப்போவார் என்றுதான் கருதினாள், ஆனால் வேலிக்கருகில் வந்தார்.

"குட் ஈவ்னிங்!"

"ஈவ்னிங்!"

"இன்று படகு சவாரி எப்படியிருந்தது?"

"நான் படகு சவாரிக்குப் போனதாக யார் சொன்னது?"

முள்வேலிக்காக ஊன்றிய காங்கிரீட் தூணைப் பிடித்திருந்த அவருடைய நீண்ட விரல்களைப் பார்த்தபடி கேட்டாள்.

"என்னால் ஊகிக்க முடியாதா? வேண்டுமானால் உங்கள் மனதை ஒரு

புத்தகம்போல வாசிக்கவே முடியும். ஆரவாரங்களிலிருந்து விலகிநின்று எல்லாவற்றையும் பார்க்கத்தான் நீங்கள் விரும்புகிறீர்கள். ஏரியில் கூட்டம் இருக்கும்போது படகு சவாரி செய்ய விருப்பமில்லையென்றாலும் நான் அழைத்தபோது போகத் தயாரானீர்கள். நான் வரவில்லை. அப்போது படகில் பத்துதடவை சுற்றியே தீர வேண்டுமென்ற பிடிவாதத்தில் நீங்கள் போயிருப்பீர்கள்."

'என்ன சரிதானே?' என்ற பாவனையில் அவர் கண்களை உயர்த்தினார்.

"ஒரு சிகரெட் பிடிக்கிறேன், யாருக்கும் தெரிய வேண்டாம்."

"தெரிந்தால் என்ன?"

"என்னுடைய பாதுகாவலருக்குத் தெரிந்துவிடக் கூடாது என்றுதான் சொன்னேன்."

சிகரெட்டை இழுத்து ருசித்துப் புகைவிட்டுக்கொண்டு அவர் சொன்னார்:

"எனக்கும் நண்பருக்குமிடையில் தினமும் அக்கப்போர்தான்."

"உங்கள் பாதுகாவலரை நான் பார்த்ததில்லை."

"பார்த்திருக்க வாய்ப்பில்லை. அதுதான் பெரியவரின் சிறப்பு."

அவர் வேலிக்கு அந்தப் பக்கம் விட்டேற்றியாகச் சுற்றி நடந்தார். பேசும் தொலைவில்.

"டீச்சர்ஜி!"

அவள் கவனித்தாள்.

"நானொரு வேடிக்கை சொல்லவா?"

கேட்கிறேன் என்பதுபோல அவள் நின்றாள்.

"எனக்கு உங்களைப் பிடிக்கும். காரணம் எதுவுமில்லை."

அவரின் வறண்ட அவலட்சணமான முகத்தில் ரத்தச் சாயல்கள் ஒளிர்ந்து மறைவதைப் பார்த்தாள். அவள் திகைத்துப் போனாள்.

"ஓ, திகைப்பதற்கு ஒன்றுமில்லை. வழிமறித்து நிறுத்தமாட்டேன், காதல்கடிதம் எழுதமாட்டேன். எதுவும் செய்யமாட்டேன். ஒரு உறவையும் கற்பனை செய்யாமல் . . .

சும்மா . . . எனக்கு உங்களைப் பிடிக்கிறது."

குளிர்ந்த வார்த்தைகள். கோரிக்கையோ வேண்டுகோளோ அல்ல. பதில் எதிர்பார்க்கவுமில்லை. அவள் திகைத்துப்போனாள்.

ஏதாவது சொல்லவேண்டுமே என்று யோசித்துச் சிரமப்பட்டாள். இயல்பைத் திரும்ப வரவழைக்க முயன்றபடி சொன்னாள்:

"நான் . . . நான் யாரென்றுகூட உங்களுக்குத் தெரியாதே."

"அதுதான் வேண்டும். உங்களுடைய பின்னணி முழுவதையும் பற்றி என்னால் பிறரிடம் கேட்டுத்தெரிந்துகொள்ள முடியும். நூற்றுக்கணக்கான விஷயங்கள், அதெல்லாம் சேரும்போது உங்கள் படத்துக்கு ஆயிரம் வேர்களும் கிளைகளும் இலைகளும் வந்துசேரும். நீங்கள் ஒரு புள்ளி மட்டும்."

சிகரெட்டின் கடைசிப் புகையையும் இழுத்துவிட்டுப் பரம திருப்தியுடன் அதைத் தூரமாகச் சுண்டியெறிந்தார்.

நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? வறண்ட முகமும் நெற்றியில் விகாரமான கருப்பும் கண்களில் பிரகாசமும் உள்ள இந்த மனிதரைப்பற்றி கேட்க நிறைய இருக்கின்றன.

"ம் . . . அப்புறம் டீச்சர்ஜி, ஒரு வேண்டுகோள்."

அவள் அமைதியாகக் கேட்கத் தயாரானாள்.

"அவ்வப்போது கொஞ்சம் சிரிக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த மகாசித்தி மறந்துபோய்விடும்."

"நான் – நான் அழுவதில்லையே."

"அழுவதைக் கண்டால் எனக்கு வெறுப்பே தோன்றும். நீங்கள் சிரிப்பதைப் பார்க்கும்போதுதான் வருத்தம்."

அவர் கடிகாரத்தைப் பார்த்தார்.

"ஆஹா மருந்து சாப்பிடும் நேரம். பாதுகாவலருக்குப் பயப்பட வேண்டும்!"

அவர் அவசரமாகத் தொளதொளத்த கால்சட்டையைப் பிடித்திழுத்து நடந்துபோனபோது பார்த்தபடி நின்றாள். பைத்தியக்காரரா?

மாலை கருக்கத் தொடங்கியது. நடுமுற்றத்தின் டூம்விளக்கைப் போட்டாள். வெளிறிய இருட்டில் மூழ்கிக்கிடக்கும் அந்தக் கட்டடத்தின் உள்ளே தனியாக இருக்கப் பயமாக இருந்தது. அமர்சிங் வருவதற்கு இனியும் எத்தனை நேரமாகுமோ என்னவோ? வராந்தாவைச் சுற்றி நடந்து இடைவெளிவிட்டு நிற்கும் கல்தூண்களின் சுவிட்சைப் போட்டாள்.

அறையில் போய் அமர்ந்து புத்தகங்களைப் புரட்டினாள். பார்த்துப் பழகின மேலட்டைகள். அலுப்பு . . .

பகலில் பலமுறை மழை தூறியது. காற்றில் நல்ல குளிர். மலைச்சரிவின் பாதை வளைவில் கருங்கல்லால் கட்டிய அரைவட்டத்தில் நின்றால் தெரியும் காட்சியில் தூரத்துச் சிகரங்கள் புகைச்சுருள்களாக மாறின. மலைப்பாதையிலிருந்து எப்போதாவது ஒரு குளம்படிச் சத்தம் கேட்டது.

வழக்கத்துக்கு மாறாக பகலிலேயே பனியிறங்கியது; ஏரியின்மேல் முழுமையான ஆபரணம்போலப் படர்ந்தது.

மாலை, மலையிடுக்குவழி சீறத் தொடங்கிய காற்றில் மெல்லிய நீர்த்துளிகள் தங்கியிருந்தன.

வெகுநாட்களுக்குப் பிறகு இக்தாராவின் முணுமுணுப்பு மிதந்துவந்தது. கூடவே சர்தார்ஜியின் பலவீனமான குரலும்.

ஜன்னல் கதவைப் பாதி திறந்தபோது குளிர்காற்றில் உடல் நடுங்கியது. பனியில் 'கோல்டன் நூக்'கின் பிரகாசம் நிறைந்த கண்ணாடி ஜன்னல்கள் இளம் மஞ்சள் நிறத்தில் தெளிவாகத் தெரிந்தது.

உம் கலிய கட்ட கானீ . . .

அஹ்ஹாம் தா கஜ்ஜலாமைம் . . .

காற்றின் ரீங்காரத்தையும் மீறி இக்தாராவின் மீட்டல் உயர்ந்தது. பஞ்சாபிப் பெண்ணின் பெருமூச்சுகள் குளிர்ந்து விறைத்த காற்றில் சிலிர்ப்புகளைப் பரப்பின.

சர்தார்ஜியின் பாதுகாவலர் இன்று தூங்குகிறாரா? அல்லது பாட அனுமதித்துவிட்டாரா?

ஜன்னலை மூடித் தாழிட்டுவிட்டுப் படுத்தாள்.

பகலில் கண் திறக்கும் முன்பே தொலைவில் எங்கோ கதவு தட்டும் ஓசை கேட்டது. தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்து இதயத்துடிப்புடன்

கேட்டாள்:

"கோன் ஹே?"

"நான்தான் பீபிஜி."

கதவைத் திறந்தாள். அமர்சிங் கண்ணைக் கசக்கியபடி வாசலில் நின்றார்.

"என்ன?"

"சர்தார்ஜி கூப்பிடுறார்."

"இவ்வளவு சீக்கிரமாகவா?"

"சொல்லிட்டுப் போறதுக்காக."

கலைந்த உடைகளைக்கூட ஒழுங்குபடுத்தாமல், சால்வையால் போர்த்திக்கொண்டு வராந்தாவழியாக போர்ட்டிகோவுக்கு நடந்தாள். காற்றின் குளிர்ந்த கைவிரல்கள் அவள் முகத்தைத் தழுவின.

பாதி பரவியிருந்த பகல் வெளிச்சத்தில் அவர் முற்றத்தில் நிற்கிறார்.

"தூக்கத்தைக் கெடுத்ததற்கு மன்னிக்கணும் டீச்சர்ஜி."

"ஓ பரவாயில்லை."

தூக்கக்கலக்கத்தால் தொண்டை கனத்திருந்தது.

"நான் போகிறேன் டீச்சர்ஜி."

என்ன சொல்வதென்று யோசித்து அவள் தடுமாறினாள். கடைசியில் சொன்னாள்:

"மறுபடியும் பார்க்கலாம்."

அவர் சிரித்தார்: "அப்படிச் சொல்ல எனக்குத் தைரியம் போதாது டீச்சர்ஜி. மிஞ்சிப்போனால் நான்கு மாதங்கள்னு நம் பாதுகாவலர் சொல்கிறார்."

தூக்கத்தின் மிச்சங்கள் கண்களிலிருந்து நழுவி விழுகின்றன.

"ஓ, அதுவே எனக்கு லாபம். அதற்காகக் கடவுளிடம் நன்றி சொல்ல வேண்டும்! லங்க் கான்சருக்கு ஒரு வருடம்தான் கெடுவாம். போனஸாக நான்கு மாதங்களை நமக்குத் தந்திருக்கிறார்!"

தன்னுடைய வார்த்தைப் பிரயோகத்தைத் தானே ரசித்தது போலச் சிரித்தார்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

"நமஸ்தே டீச்சர்ஜி! நல்லது வரட்டும்!"

"நமஸ்தே!"

அவர் இரண்டோ நான்கோ எட்டுகளுக்குப் பிறகு திரும்பி நின்றார்.

அவள் அங்கேயே நின்றிருந்தாள்.

"கடனாகக் கேட்ட ஒரு மாலைப்பொழுது பாக்கியிருக்கிறது, மறக்க வேண்டாம்!"

உரக்கச் சிரித்தார். கால்களை இழுத்து இழுத்து நடந்து போனார்.

பொருட்களைச் சுமக்கும் இரண்டு கூலிக்காரர்கள் பின்னால். எங்கே அவருடைய நண்பர்?

வராந்தாவழியாக அறைக்குத் திரும்பும்போது அமர்சிங்கைப் பார்த்தாள். முகம் நிறைந்த சிரிப்பு.

"சர்தார்ஜி பெரிய பணக்காரர் பீபிஜி. எனக்கு பக்ஷிஸ் தந்தது எவ்வளவு தெரியுமா பத்து ரூபாய்."

"அமர்சிங், எங்கே அவருடைய நண்பர்?"

"நண்பரா? அவர் தனியாகத்தானே இருந்தார் பீபிஜி."

அவள் கதவை மூடினாள்.

பதினைந்து

சாயமிழந்த இரும்புத்தூணுக்கு அந்தப் பக்கமாக மூட்டமிட்ட ஆகாயம் விழுந்துறங்கும் குளிர்ந்த ஏரியைப் பார்த்துக்கொண்டு கற்படியில் அவள் நின்றாள்.

கோயில்வளாகமும் மணல்பரப்பிய திடலும் மண்டபமும் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

பஹாடிச் சிறுவர்கள் மூவரை ஏற்றிக்கொண்டு துடுப்பசைத்துவரும் படகின் அன்னப்பறவை முகப்பு அருகில் நெருங்கியதும் அவள் பார்த்தாள். புத்து, மஞ்சள் பற்களைக் காட்டிச் சிரிக்கிறான்.

படகைக் கரையருகில் கொண்டுவந்தான்.

"சீஸன் எவ்ளோ சீக்கிரம் முடிஞ்சிடுச்சு மேம்சாப்!"

"ஆமாம்."

"யாரும் வர்ல."

அவளும் நிம்மதியற்ற குரலில் சொன்னாள்,

"யாரும் வரவில்லை."

"அடுத்த வருஷம் பாக்கலாம். இல்லியா மேம்சாப்?"

என்ன சொல்கிறோம் என்று தெரியாமலேயே அவள் உதாசீனமாகத் திருப்பிச் சொன்னாள்:

"ஆமாம், அடுத்த வருஷம்."

மேம்சாப் போதுமான ஆர்வம் காட்டவில்லையோ என்ற சந்தேகத்தோடு, தோல் நிறமுள்ள கனத்த உடையின் மார்புப் பகுதியில் தட்டிக்கொண்டே கொஞ்சம் சத்தமாகச் சொன்னான்:

"வராம இருக்கமாட்டார் இல்ல, மேம்சாப்?"

அவள் தலையசைத்தாள்.

படகு துழாவி நகர்ந்தபோது நீண்டுகிடந்த வளைந்த நீர்க்கோடுகளைப்

பார்த்துக்கொண்டு அவள் முணுமுணுத்தாள்.

"வராமல் இருக்கமாட்டார்."